
கல்கி



KALKI 30·11·1969 40 காசு



உங்கள் கண்களுக்கு இதமான ஒளி தேவை!

உங்கள் இல்லத்தில், தேவைக்கேற்றபடி சீரான ஒளியைத் தருவதற்கு பலதரப்பட்ட பிலிப்ஸ் லாம்புகள் இருக்கின்றன. உதாரணமாக, பிலிப்ஸ் கினியர் லாம்புகள் மற்றும் ஆர்ஜண்டா லாம்புகள் உள்ளன. கண்கூசாத இதமான ஒளி தேவைப்படும் வேலைகளுக்கு—அதாவது, படிப்பு, வீட்டுவேலை அல்லது தையல் வேலைக்கு—பிலிப்ஸ் ஆர்ஜண்டா லாம்புகள் சிறந்தவை. வீடுகளில், கண்கூசாத இதமான ஒளி அவசியம் என்பதைக் கருதியே இந்த லாம்புகள் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒளியை ஒரே சீராகப் பரப்பும் பொருட்டு பிலிப்ஸ் ஆர்ஜண்டா லாம்புகளில் ஒரு விசேஷ வெள்ளைப் பூச்சு பூசப்பட்டிருக்கிறது. இதனால் கண்கள் கூசாமல் வெளிச்சம் ஒரே சீராகப் பரவும். ஆகவே, சிறியவர் முதல் பெரியவர் வரை, குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் ஏற்ற லாம்புகள் இவை!


பிலிப்ஸ் ஆர்ஜண்டா லாம்புகள் 40, 60 மற்றும் 100 வாட்டுகளில் கிடைக்கின்றன.

கினியர் லாம்புகள், அலங்கார லாம்புகள், டார்ச் மற்றும் டயல் லாம்புகள், TL ப்ளூரஸண்ட் லாம்புகள், மெர்குரி வேபர் லாம்புகள் போன்றவற்றை பிலிப்ஸ் இந்தியாவிலேயே தயாரிக்கிறது. பிலிப்ஸ் தயாரிப்புகளின் பட்டியல் நாளுக்கு நாள் நீண்டு கொண்டே போகிறது. புதிய புதிய மின்சார விளக்குகளை வழங்குவதில் அன்று போலவே இன்றும் முன் நிற்கிறது பிலிப்ஸ். நினைவிருக்கட்டும், உங்களுக்கு எத்தகைய லாம்பு தேவைப்பட்டாலும் பிலிப்ஸிடம் கிடைக்கும்!

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHILIPS



பிலிப்ஸ் ஆர்ஜண்டா

இதமான ஒளி தருவதில் இணையற்றது

HTA-PHL.8382

கல்கி

பொருளடக்கம்

சௌமிய, கார்த்திகை 15 :: 1969, நவம்பர் 30


"இங்கே நான் சௌகரியமாக இருக்கிறேன்"
"கீழே வந்தால் அவ்வளவு சௌகரியமாக இராது!"
SAMA
"மேலிருந்து கீழ்நோக்கி வருமாறு ஒரு கட்டடம் எழுப்புவது எப்படி என்று கூறுவீர்களா?"
"அந்தக் கட்டடக் கலை எனக்குத் தெரியாதே"
SAMA



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 □ இதழ் 18

தீவிரவாதமும் ஜனநாயக அணியும்

நான் இதை எழுதுவது நவம்பர் 19ம் தேதி. காங்கிரஸ் தலைவரின் அதிகாரத்தைப் புறக்கணித்து, பிரதம மந்திரி இன்னும் மூன்று நாட்களில் தமது 'அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி'யை நடத்தப் போகிறார். நான் இங்கு எழுதுவது அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படாது.

உண்மையான திட நம்பிக்கைக்கு ஏற்ப, தேசிய விவகாரங்களில் புத்தி சொல்ல வேண்டிய கடமை எனக்கு உண்டு எனக் கருதுகிறேன். அந்தப் புத்திமதியை ஏற்றுக் கொள்கிறார்களா புறக்கணிக்கிறார்களா என்பதை நான் பொருட்படுத்தவில்லை. ஸ்ரீமதி இந்திரா காந்தி வகிக்கும் பிரதம மந்திரி பதவியின் தன்மை மாறி இரண்டு வாரமாகிறது. காங்கிரஸ் கட்சியின் சார்பில் இதுவரை அவர் பிரதமராக இருந்து வந்தார். இப்பொழுது தமது சொந்த உரிமையாக அதை அவர் வகிக்கிறார். காங்கிரஸ் கட்சியின் தலைமையை மாற்றுவதற்கு அவர் செய்து வரும் முயற்சிகள் ராஜீய வளர்ச்சியின் இயற்கையான நியதிக்கு நேர்மாறாக இருக்கின்றன. தேசமெங்கும் இப்போக்கு பரவி விடுமாகையால் இந்தியாவின் விவகாரங்களில் ஸ்திரத்தன்மை இல்லாது போய் விடும். தேசிய ஐக்கியத்தையும் பொருளாதார நலனையும் வளர்ப்பதற்குப் பதிலாக அடிவரை ஒற்றுமையின்மையை அது சிருஷ்டிக்கும்.

இப்போதைய பார்லிமெண்டில் உள்ள தமது ஆதரவாளர் கோஷ்டியை வைத்துக்கொண்டு தமது பதவிக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு ஸ்ரீமதி இந்திரா காந்தி முனைய வேண்டும். அவருடன் உடன்பாடு இல்லாத காங்கிரஸ்காரர்கள் எதிர்க் கட்சியினராக இருந்து வருவர். காங்கிரஸ் கட்சி தன் பெயரையும் தனித் தன்மையையும் விட்டுவிட வேண்டுமென்று அவர் கேட்கலாகாது. தமது கோஷ்டிக்குத் தக்கதோர் பெயரை அவர் சூட்டிக் கொள்ள வேண்டும். ராஜீய விவகாரங்களில் தாம் தீவிரவாதியாக (ராடிகல்)க் காட்சியளிக்க அவர் விரும்புகிறார். தமது கட்சிக்கும் அந்தப் பெயரையே அவர் வைத்துக் கொள்ளலாம்.

முன்னர் சொன்னதையே மீண்டும் கூறுகிறேன். பிரதமருக்கும் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குமிடையே நடந்துவரும் தகராறுகளைப் பற்றிய ரஹஸ்யங்கள் தினசரிகளில் பத்தி பத்தியாக வருகின்றன. பெரிய இடத்து மோதலாகையால் பரபரப்பும் இருக்கிறது. இத்தனைக்கு மிடையே சர்வாதிகாரப் போக்குகளையும், நிர்ப்பந்தங்களையும் பற்றி மக்களை எச்சரித்து, பார்லிமெண்டுடன் கூடிய ஜனநாயக ஆட்சி முறையைக் காப்பாற்றுவதில் அக்கறை உள்ள சிலர் இடையறாது அதற்குப் பாடுபட்டு வருகிறார்கள். செல்வம் அபரிமிதமாகப் பெருக வேண்டும்; பொருள் உற்பத்தி பெருக வேண்டும்; திறமை, அநுபவம், பண்புடைய வாழ்க்கைக்கான வசதிகள் ஆகியவற்றை மக்கள் நிறையப் பெற்றிருக்க வேண்டுமென இவர்கள் கோருகிறார்கள். பிரதம மந்திரி சொந்தப் பெருமையை வளர்த்துக்கொள்வதினின்று தமது மனத்தைத் திருப்பிக் கொள்ள வேண்டும்; அடிமட்டத்திலிருந்து கட்சியை வளர்க்காமல், மேல் மட்டத்திலிருந்து கீழ்நோக்கிக் கட்சியை அமைக்கும் தம் திட்டத்தைக் கைவிட வேண்டும் ; நல்லாட்சியில் கவனம் செலுத்த வேண்டும் என்று இவர்கள் விரும்புகிறார்கள். மக்களின் கரகோஷத்தால் வஞ்சிக்கப்பட்டு தவறுகளை அவர் இழைக்காதபடி எச்சரிக்கையாக இருக்கக் கூடிய மந்திரி சபையே இப்போது பிரதமருக்குத் தேவை.

தேர்தல் நடந்தபோது இருந்த சூழ்நிலை வேறு; இப்பொழுது உள்ள நிலைமை வேறு. இன்றைய நிலையில் மக்கட் சபைக்கு இடைக்காலத் தேர்தல்களை நடத்துவதுதான் நியாயமான நடைமுறையாக இருக்கும். ஆனால் எல்லாருமே இதை வேண்டாம் என்கின்றனர். பிரதம மந்திரிக்கு மக்கட்

சபையில் பெரும்பான்மையோரின் ஆதரவு இருக்கிறது. எனவே அவர் பிரதமராக நீடிப்பதற்கு எதிர்க் கட்சிகள் ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் ஜனநாயகத்துக்கும், மக்களின் நலத்துக்கும் அவசியமெனத் தோன்றும் போதெல்லாம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான ஜனநாயக அணி ஒன்றை எதிர்க் கட்சிகள் அமைத்துக் கொள்ளலாம். அதற்குத் தடையேதுமில்லை.

தார்மிக நியதிகள் விஷயத்தில் தேசத்தில் அசிரத்தை காணப்படுகிறது. இதனால் பெருங்கேடு விளையக் கூடும். இதைத் தவிர்த்து மக்களிடையே மீண்டும் ஒழுக்கம் வளரச் செய்ய வேண்டும். எல்லாக் கட்சிகளும் இப்பணியில் ஒன்று படலாம். நிலைமை வளர்வதற்கு முன் இதைத் தொடங்கிவிட வேண்டும்.

பொருளாதார விவகாரங்களை நிர்வகிப்பதிலும் தேச நலனுக்கு உழைப்பதிலும் நீக்குப்போக்குள்ள சமயோசித நடைமுறை தேவை. வறட்டுச் சித்தாந்தங்களுக்கு அடிமைப்படலாகாது. ரஷ்யா உட்பட ஐரோப்பாவெங்கும், 'திறந்த மனத்துடன் பிரச்னைகளை அணுகும்' இந்த வழி ஏற்றம் கண்டு வருகிறது. பற்றாக்குறை மயமான நம் நாட்டில் காலத்துக்கு ஒவ்வாத கோஷங்களை விடாப்பிடியாக எழுப்பிக் கொண்டிருப்பதால் பயனில்லை.

மக்களின் பொதுநலமும், ஏழைகளின் முன்னேற்றமுமே தமது தீவிரவாதத்தின் நோக்கங்கள் என்று பிரதமர் கூறுகிறார். உயர் நிலையில் உள்ளவர்களைக் கீழ்நிலைக்குக் கொண்டு வரும் திட்டங்களை நடத்திவைக்க முற்படுவதால் இந்த நோக்கங்கள் கைகூடமாட்டா. நாட்டில் உற்பத்திப் பெருக்கை இவை நிச்சயமாகப் பாதிக்கும். வேலை வாய்ப்புப் பெருகுவதற்குச் செல்வத்தின் அமோகமான உற்பத்தி முதலில் தேவை. ஜனநாயக அணி ஏற்பட்டால், அப்பொழுது வாசாலகத்தில் மதிமயங்கிக் கிடப்போருக்கு இவ்விஷயமாக நல்லுரை வழங்கித் திருத்த வேண்டியது அதன் முதன்மையான பணியாக இருக்கும்.

'எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்' என்று கருதும் மக்கள் நல அரசாங்கமே காங்கிரஸ் கட்சியின் சோஷலிஸ லட்சியத்திற்குப் பொருள் என்கிறார் ஸ்ரீ நிஜலிங்கப்பா. கடன் பளுவும் பற்றாக்குறைகளும் வளர்ந்து வரும் சூழ்நிலையில், அரசுடைமை ஆதிக்கம் விரிவு காண்பது நமக்கு உதவாது.

உற்பத்தி பெருக வழி செய்தாலே எல்லோரும் இன்புற்றிருக்க முடியும். வாய்ப்பந்தல் போடுவதில் போட்டி இடுவதால் லாபமில்லை. ஓட்டுக்கள் கிடைப்பது அவசியந்தான். ஆனால் மக்களை வஞ்சித்து அதைப் பெற முற்படுவது பேராபத்தில் முடியும்.

மக்கட் சபையில் எதிர்க் கட்சியாக அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சியின் தலைவர் டாக்டர் ராம் சுபாக் சிங் தமது நோக்கங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார். இப்போதைய ஆளும் கட்சிக்கும் அதன் தலைவருக்கும் பதிலாக யோக்யதையும் நாணயமும் உள்ள வேறு சர்க்கார் தேசத்துக்குக் கிடைப்பதற்காகத் தாமும் தமது தலைமையில் உள்ள எதிர்க் கட்சியும் பாடுபடும் என்று அவர் கூறியுள்ளார். ராஷ்டிரபதி தேர்தலில் காணப்பட்ட அருவருப்பான அம்சங்களை மட்டும் கருத்திற்கொண்டு அவர் இதைச் சொல்லவில்லை; மக்களை மதிமயக்கும் வகையில், வாய்ப்பந்தல் போடுவதை அடிப்படையாகக் கொண்ட அறச் சிதைவைக் கருத்தில் கொண்டுதான் அவர் பேசியிருக்கிறார் என நினைக்கிறேன்.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

ராஜாஜியின் கருத்துக்கள்

வெற்றுக் கோஷங்களை எழுப்பி மக்களைக் கவர்கின்றவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி ஸ்ரீமதி இந்திரா காந்தி கோருகிறார். இதைப் பார்க்கும்போது தன்னிடமுள்ள பெரிய குறையை மறந்து பிறரிடமுள்ள சிறிய குறையை மட்டும் காண்பது பற்றி இயேசுநாதர் கூறியதுதான் நினைவு வருகிறது. இந்திரா சொல்வது சரிதான்; எனினும் இயேசுநாதர் சொன்னதை அவர் இதயத்தில் கொள்ள வேண்டும். இல்லாவிடில் இந்திரா சொல்வதும் தந்திர உபதேசமேயாகும். மக்களுக்கு விபரீதம் விளைவிக்கும் வெற்றுப் பேச்சில் தற்போது காணப்படும் போட்டிக்கு முடிவு கண்டாக வேண்டும்.

வெற்றுப் பேச்சாளர்கள் தமது சோஷலிஸத்தைத் துவேஷத்தின் மீது எழுப்புகிறார்கள். அனைவருக்கும் வேலை தந்து உற்பத்திப் பெருக்கம் காண்பதை அடிப்படையாகக் கொண்ட சோஷலிஸமே உண்மை சோஷலிஸம். இதற்குப் பயனுள்ள உழைப்பு அவசியம். எல்லாப் பிரிவினரிடையும் ஒத்துழைப்பு, அறிவுத் திறன், உடல் வலு இவை அமைந்தால்தான் இந்த இலட்சியம் கைகூடும்.

சொத்துக்களையும், தொழில்களையும் சர்க்கார் எடுத்துக் கொண்டு மக்களுக்கு மாய வாக்குறுதி தருவது சோஷலிஸம் அல்ல; இது தனி முதலாளித்துவத்துக்குப் பதில் சர்க்கார் முதலாளித்துவத்தை ஏற்படுத்துவதே. இது உற்பத்தியில் திறமை இல்லாத முதலாளித்துவம் ஆகும். இதிலிருந்து ஏற்படும் நஷ்டத்தினால் தேசத்தின் கடன் பெருகும். வரிகளும் உயரும். லைசென்ஸ்களின் தயவில் தொழில் துறையை வைத்து அரசாங்கக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதால் ஒரு சிலருக்கே ஏகபோக்கியம் கிடைக்கிறது. தொடர்ந்து தீவிரவாதிகளின் தூண்டுதலில் சில தொழிலதிபர்களை ஒழித்துக் கட்டும் படலம் ஆரம்பமாகிறது.

'எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்' என்ற இலட்சியத்தை சர்க்கார் துறை, தனியார் துறை இரண்டும் உள்ள கலப்புப் பொருளாதாரத்தில் நிறைவேற்ற வேண்டுமானால், தொழில்களைக் கட்டுப்படுத்தும்

அதிகாரத்தை அரசியல் சார்பற்ற ஒரு சுதந்திர போர்டிடம் ஒப்படைக்க வேண்டும். தேசப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசியல் கட்சிகளும், அவை அமைக்கும் அரசாங்கங்களும் சிறிதும் தகுதி பெற்றிருக்கவில்லை என்பது வெட்ட வெளிச்சமாகி வருகிறது. அதிகாரத்தைத் தேடி வாக்கு வேட்டையாடும் அரசியல்வாதிகளிடம் பொருளாதார விஷயங்களில் ஆலோசனை கலப்பதைத் தவிர்க்க வேண்டும்; சத்திய தேவதைக்கு மட்டுமே தம்மைப் பொறுப்பாளிகளாகக் கருதும் சுதந்திரமுள்ள ராஜநீதி அறிஞர்களிடமே யோசனை கேட்க வேண்டும். பத்திரிகைகளும் நீதிபதிகள்போல் சுதந்திரமாகக் கருத்து வழங்கி மக்களுக்கு விடாமல் அறிவு புகட்ட வேண்டும். போதுமான அளவு மனச்சாட்சியுள்ள ஓர் அரசாங்கம் ஏற்பட்டு, அறிவாளிகளும் செயலின்மையை விடுத்து மக்களை நல்வழிப்படுத்துவதில் முழு மூச்சுடன் ஈடுபட்டால், வெறும் பிரசாரத்தில் எளிதில் ஏமாற்றப்படும் நம் மக்களை நிச்சயமாக உயர்த்தலாம்; நம் வாக்காளர்களை இதர முன்னேற்றம் கண்ட நாட்டு வாக்காளர்களின் தரத்துக்கு உயர்த்தலாம்.

★

ஸ்ரீமதி இந்திரா காந்தி பிரதம மந்திரி என்ற தமது அந்தஸ்தைப் பயன்படுத்திக் கொண்டு பெரிய தொகைகளைத் தொழில் வணிகத் துறையினரிடமிருந்து வசூலித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெளிவுபடுகிறது. பெர்மிட் — லைசென்ஸ் ஆட்சி அவரது ஆதிக்கத்தில் நடைபெறுகிறது. அதன் மூலம் வணிகத் தொழில் துறையினரில் எவரையும் பெரிதாக உருவாக்கி விடலாம்; அல்லது உருவழித்தும் விடலாம். ஸ்ரீமதி காந்தி காங்கிரஸின் தலைவரோ பொருளாளரோ அல்லர். டில்லி சப் — கோர்ட்டில் அவர் கொடுத்ததாகத் தெரியும் வாக்குமூலப்படி அவர் அ. இ. கா. க. மெம்பர் கூட அல்லர். காங்கிரஸின் பெயரால் தாம் வசூலித்த நிதிகளுக்கு அவர் கணக்குத் தரவில்லை என்பது ஸ்ரீ நிஜலிங்கப்பாவின் புகார். எல்லாம் எவ்வளவு மோசமான குளறுபடியாக இருந்து வந்திருக்கிறது என்பதைத்தான் இந்தத் தகவல்களும் புகார்களும் புலப்படுத்துகின்றன. பிரஞ்சு மன்னரைப் போல் இதற்கு ஒரு பதில் சொல்லி விட முடியும். ''காங்கிரசுக்குக் கணக்குக் கொடுப்பதா ? நான்தான் காங்கிரஸ்''. என்பதே அந்தப் பதில்.

★

பாங்குகளை அரசாங்க உடைமையாக்கியதைத் தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரிடம் டில்லியில் நிருபர்கள் கேட்டனர். ''பாங்கு நிதி லட்சக் கணக்கான டிபாஸிட்தாரர்களுக்குச் சொந்தமானது. எனவே அதை மிகவும் சட்ட பூர்வமாக யோசித்துத்தான் உபயோகிக்க முடியும்'' என்று கூறி, எனவே இவ்விஷயமாக அதிகம் எதிர்பார்க்கலாகாது என ஸ்ரீ டி. டி. கே. எச்சரித்ததாக ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' கூறுகிறது. முன்பு நாம் சொன்னதையேதான் ஸ்ரீ டி. டி. கே. உறுதிப்படுத்தியிருக்கிறார். அவர் கூறிய அடிப்படையிலிருந்து மேலும் நாம் பெறக்கூடிய உண்மை: பாங்கு நிதியின் சொந்தக்காரர்களான டிபாஸிட்தாரர்களுக்கு அச்சொத்துரிமையின் காரணமாக தமது பணத்தை யார் வசம் நம்பி டிபாஸிட் செய்யலாம் என்று தேர்வு செய்யும் உரிமை இருக்கிறது. அரசியல் நோக்கில்லாத — எனவே, அரசியல் அநுகூலத்துக்காக நிதியை அநாக்கிரதையாக உபயோகிக்காத — ஸ்தாபனத்திடமே பணம் போடுவதை டிபாஸிட்தாரர் விரும்பலாம்.

★

நமது நாட்டின் மிகப் பெரிய துரதிர்ஷ்டம் தேசமெங்கும் ஏற்பட்டு வருகின்ற அறச் சிதைவுதான். சீதையை ராவணன் பிடித்துச் சிறைப்படுத்தினான். அது சுலபமாக இருந்தது. ஆனால் சீதை மனமொப்பித் தனக்குப் பணிந்துவிட வேண்டுமென்று வேண்டினான். அது கைகூடவில்லை. அவள் எதிர்த்தாள். அவளது நம்பிக்கை வீண் போகவில்லை. இறுதியில் அவளுக்கு வெற்றி கிடைத்தது. நமது சமூகத்திலுள்ள சான்றோர்களில் சிலரேனும் உறுதி காட்ட வேண்டும். நமது தேச மக்கள் பித்தலாட்டத்தையோ, சுயநலச் செயல்களையோ ஆதரிப்பவர்கள் அல்லர். உண்மைக்கும் பெருந்தன்மைக்கும் தைரியத்துடன் போராடுகிறவர்களை அவர்கள் ஆதரிப்பர். தமது அசிரத்தையையும், விவகாரங்களினின்று ஒதுங்கி நிற்கும் போக்கையும் படித்தவர்கள் கைவிட வேண்டும். வர்த்தக சமூகத்தினரும் தார்மிக ரீதியில் புதுப் பலம் பெற வேண்டும்.

★

சில தொழிலதிபர்கள் தமக்குரியதை விட அதிகமாகப் பெர்மிட் — லைசென்ஸ் முறையில் சலுகை பெற்றிருந்தால், இது அவர்களுடைய குற்றமில்லை; பெர்மிட் லைசென்ஸ் முறையின் குறைபாடேயாகும். இதுபோன்ற தவறுகள் வெளிப்படுவதன் விளைவாக பெர்மிட் — லைசென்ஸ் ராஜ்யம் ஒழிந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன். அல்லது இம்முறை தவிர்க்கவொண்ணாதது எனக் கருதி, பெர்மிட் — லைசென்ஸ் வழங்கும் அதிகாரத்தை அரசாங்கத் தலையீடற்ற ஒரு சுதந்திரக் குழுவிடம் ஒப்புவித்தாலும் சுதந்திரக் கட்சியின் இலட்சியத்தில் பெரும் பங்கு நிறைவேறியதாகக் கொள்வேன்.

★

ஸ்ரீமதி வயலெட் ஆல்வாவின் எதிர்பாராத அகால மரணம் குறித்து என் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா விதத்திலும் மதிப்புக்குரிய ஒருவர் அவர். அறிவு, இதயம் இரண்டிலும் அபூர்வமான திறன் பெற்றிருந்த அவர், பார்லிமெண்ட் அங்கத்தினராகவும், ராஜ்ய சபை உதவித் தலைவராகவும் மிகச் சிறந்த முறையில் பல்லாண்டுகள் பணியாற்றிப் பாராட்டுப் பெற்றிருக்கிறார். தேச சேவைக்கு உகந்த எந்தப் பதவியையும் பெறத் தகுதி பெற்ற இந்த ஆதரிசப் பிரஜையின் திடீர் மறைவு குறித்து கட்சி — வகுப்பு — மதம் ஆகிய வேற்றுமையின்றி அனைவருமே துயரமடைவர்.



பொன்னியின் செல்வன்

அமரர் **கல்கி**

எட்டாம் அத்தியாயம்

"ஐயோ, பிசாசு!"

கற்பக விருட்சம் பூங்குழலியின் மீது வர்ண மலர்களைச் சொரிந்தது. தேவலோகத்துக் கின்னரி வாத்தியங்கள் இன்ப கீதங்களைப் பொழிந்தன. ஏன்? பூங்குழலியின் மேனி நரம்புகளே யாழின் நரம்புகளாகித் தெய்வ கானம் இசைத்தன. இளவரசரின் கனிவு செறிந்த மொழிகள் அவளுக்கு அத்தகைய போதையை அளித்தன.

"இளவரசே! நான் தேவலோகக் கன்னிகை அல்ல; ஏழை ஓடக்காரப் பெண். தாங்கள் அருந்தியதும் தேவலோகத்து அமுதம் அல்ல; குழகர் கோயிலில் கிடைத்த பாலாமுதம்!" என்றாள்.

"நீ தேவலோகக் கன்னிகை இல்லையென்றால், நான் நம்பி விடுவேனா? வருணனின் திருப் புதல்வி அல்லவா நீ? சமுத்திர குமாரி! எத்தனை தடவை எனக்கு நீ உயிர் அளித்திருக்கிறாய்? உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?" என்றார் இளவரசர்.

"ஐயா! இன்னும் ஒரு பகலும் ஒரு இரவும் தங்களுடன் இருக்க இந்த ஏழையை அனுமதிக்க வேண்டும்" என்றாள் பூங்குழலி.

"அது எப்படி முடியும்? உடனே நான் பழையாறைக்குப் புறப்பட வேண்டுமே?" என்றார் இளவரசர்.

"இல்லை; தங்களை நாகப்பட்டினத்துக்கு அழைத்துச் செல்லும்படி செய்தி வந்திருக்கிறது."

"யாரிடமிருந்து?"

"இளையபிராட்டியிடமிருந்துதான்!"

"அது யார் அங்கே, இன்னொருவன்? வந்தியத்தேவனுடன் படகை இழுத்து வருகிறவன்?"

"என் அத்தான் சேந்தன் அமுதன். இளையபிராட்டி அவனிடந்தான் செய்தி அனுப்பியிருக்கிறார், தங்களை நாகப் பட்டினத்தில் உள்ள சூடாமணி விஹாரத்திற்கு அழைத்துச் செல்லும்படி."

"ஆஹா! என் தமக்கையின் மனம் மாறி விட்டதா? எனக்கு முடிசூட்டும் ஆசை அகன்று விட்டதா? வெகு காலமாக எனக்குப் புத்த சங்கத்தில் சேர வேண்டும் என்ற ஆசை உண்டு. புத்த சங்கத்தில் சேர்ந்து பிக்ஷு ஆவேன். தூர தூர தேசங்களுக்கு யாத்திரை செய்வேன்! சாவகம் — கடாரம் — மாவிருடிங்கம் — மாபப்பாளம்—சீனம்! ஆஹா! என்னுடைய பாக்கியமே பாக்கியம்! பூங்குழலி! வா, போகலாம்!" என்று கூறி இளவரசர் எழுந்து நின்றார்.

அவருக்கு இன்னும் முழு நினைவு வரவில்லை, சுர வேகத்திலேயே பேசுகிறார் என்று பூங்குழலி சந்தேகித்தாள்.

அதே சமயத்தில் தூரத்தில் ஓலமிடும் குரல் ஒன்று கேட்டது.

இளவரசர் திடுக்கிட்டு நின்று, "பூங்குழலி! அது என்ன?" என்றார்.

"ஆந்தை கத்துகிறது, ஐயா!" என்றாள்.

"இல்லை! அது மனிதக் குரல்! ஏதோ பெரும் அபாயத்தில் சிக்கியவனின் அபயக் குரல்! அவனைக் காப்பாற்றி விட்டுப் போகலாம். புத்த

சங்கத்தில் சேருவதற்கு முன்னால் ஒரு புண்ணிய காரியம் செய்யலாம்!'' என்று இவ்விதம் கூறிவிட்டு இளவரசர் பாய்ந்து ஓட முயன்றார். அந்த முயற்சியில் திடீரென்று கீழே விழுந்தார். பூங்குழலி அவரைத் தாங்கிக் கொண்டாள்.

படகைக் கரை சேர்த்தவர்கள் இருவரும் ஓடி வந்தார்கள். மீண்டும் உணர்ச்சியை இழந்துவிட்ட இளவரசரை அவர்கள் மெதுவாகத் தூக்கிக் கொண்டு போய்ப் படகில் பத்திரமாய்ச் சேர்த்துப் படுக்க வைத்தார்கள்.

* * *

கால்வாயில் படகு போக ஆரம்பித்தது. இளவரசரைத் தவிர்த்த மற்ற மூவரும் இட நெருக்கடியுடன் அதில் உட்கார்ந்திருந்தார்கள்.

வந்தியத் தேவன், ''பூங்குழலி! நாலு பேரை இந்தப் படகு தாங்குவது கடினம். எப்படியும் நான் உங்களிடம் விடைபெற்றுக் கொள்ள வேண்டியவன். இங்கேயே இறங்கிக் கொள்கிறேன். இளவரசரைப் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்ப்பது உங்கள் பொறுப்பு. உங்களுக்கு அதிகம் நான் சொல்ல வேண்டியதில்லை!'' என்று சொன்னான்.

அவனுடைய குரல் தழுதழுத்தது. நிலாக்கிரணம் அவன் முகத்தில் விழுந்த போது கண்களில் முத்துத் துளிகள் ஒளி வீசித் திகழ்ந்தன.

''கோடிக்கரைக் காடு தாண்டிய பிறகு இறங்கிச் செல்லலாமே? என் குதிரையையும் அங்கேதான் நிறுத்தி வைத்திருக்கிறேன். அடையாளம் நினைவிருக்கிறதல்லவா?'' என்றான் சேந்தன் அமுதன்.

''வேண்டாம்; நான் இங்கேயே இறங்கிக்கொள்கிறேன். குழகர் கோயில் பிராகாரத்தில் சற்று நேரம் படுத்துத் தூங்கி விட்டுப் பொழுது விடிவதற்குள் எழுந்து புறப்படுகிறேன். இல்லாவிட்டால், நாளைக்குப் பிரயாணம் செய்ய முடியாது! வழியில் எவ்வளவு தடங்கல்களோ!'' என்றான் வந்தியத்தேவன்.

பூங்குழலி அத்தனை நேரமும் தன் மடியில் பத்திரப்படுத்தி வைத்திருந்த பொட்டணத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள். ''இந்தா! குழகர் கோயில் பிரஸாதம். இதைச் சாப்பிட்டு விட்டுத் தூங்கு!'' என்றாள்.

''நீங்களும் ஒன்றும் சாப்பிடவில்லையே, உங்களுக்கு வேண்டாமா?''

''கோடிக்கரையிலிருந்து காத தூரம் கால்வாயில் போய் விட்டால் எத்தனையோ கிராமங்கள். நானாவது சேந்தனாவது போய் உணவு சம்பாதித்துக் கொண்டு வருவோம். உன் விஷயம் அப்படியல்ல. நீ ஒருவர் கண்ணிலும் படாமல் பழையாறை போய்ச் சேர வேண்டும் அல்லவா?''

''படகில் இளவரசர் இருக்கிறார் என்பதை நீங்களும் மறந்துவிடக் கூடாது.''

''இந்தப் படகில் இருப்பவர் இளவரசர் என்று யார் நம்புவார்கள்? அதைப் பற்றிக் கவலைப்படாதே! எங்கள் பொறுப்பு. இந்த ஒட்டைப் படகை யாரும் கவனிக்க மாட்டார்கள்.''

''சரி; அப்படியானால் இங்கேயே இறங்கிக் கொள்கிறேன்.''

அச்சமயம் மறுபடியும் அந்த ஓலக் குரல் கேட்டது. ''ஆ! அது என்ன?'' என்று இளவரசர் கேட்டுவிட்டு மறுபடியும் உணர்வை இழந்தார்.

பூங்குழலி எழுந்து நின்றாள்.

''முடியாது; என்னால் முடியாது. இளவரசருக்குத் தெரிந்தால் என்னை மன்னிக்கமாட்டார். இன்னும் கொஞ்ச நேரம் படகில் இரு. அந்த மந்திரவாதியைச் சேற்றிலிருந்து எடுத்து விட்டு விட்டு வருகிறேன். இங்கிருந்து அந்த இடம் கிட்டத்தான் இருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே படகிலிருந்து கால்வாயின் கரையில் குதித்தாள்.

''அப்படியானால் நானும் உன்னோடு வருகிறேன். அந்தப் பாதகனிடம் உன்னைத் தனியாக விடமாட்டேன்'' என்றான் சேந்தன் அமுதன்.

''இல்லை; அமுதா! நீ படகில் இரு! இளவரசரை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். நான் பூங்குழலியுடன் போய் வருகிறேன். எனக்கும் அந்த மந்திரவாதியைப் பார்க்க வேண்டிய காரியம் இருக்கிறது!'' என்று சொல்லி விட்டுப் பூங்குழலியைப் பின்தொடர்ந்து வேகமாக ஓடினான் வந்தியத்தேவன்.

பூங்குழலியின் மனக் கண் முன்னால் மந்திரவாதி மார்பளவு சேற்றில் புதைந்திருக்க, அவனைச் சுற்றி நரிகள் நின்று அவனைப் பிடுங்கித் தின்னப் பார்க்கும் பயங்கரக் காட்சி தோன்றிக் கொண்டிருந்தது. அதற்கிடையே இளவரசர், அவளைப் பார்த்து, ''பெண்ணே! நீ கொலைபாதகி!'' என்று குற்றம் சாட்டும் காட்சியும் தோன்றியது! இந்தக் காட்சிகள் அவளுடைய கால்களுக்கு மிக்க விரைவைக் கொடுத்தன. மந்திரவாதியை அமிழ்த்திய சேற்றுப் பள்ளத்தை அதிவிரைவில் நெருங்கினாள். அங்கே மந்திரவாதியைக் காணாமல் பெரும் ஏமாற்றம் அடைந்தாள்.



பின்தொடர்ந்து வந்த வந்தியத்தேவன் அவள் பக்கம் நெருங்கியதும், அவள் தயங்கி நிற்பதன் காரணத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

''வேறு ஒரு சேற்றுப் பள்ளமாயிருக்கலாம். கோடிக்கரையில் எத்தனையோ பள்ளங்கள் உண்டு அல்லவா? நீ மறந்து போயிருப்பாய்!'' என்றான்.

புதரில் ஒரு முனை கட்டியிருந்த சேந்தன் அமுதனின் மேல் துண்டைப் பூங்குழலி சுட்டிக் காட்டினாள். பாவம்! அவளால் பேச முடியவில்லை.

''சேற்றிலே அமிழ்ந்திருப்பான் என்று நினைக்கிறாயா? இல்லை, இல்லை! ரவிதாஸனை அப்படியெல்லாம் கொன்று விட முடியுமா! அவனுக்கு நூறு உயிர் ஆயிற்றே! தப்பிப் போயிருப்பான்!'' என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் புதரில் கட்டப்பட்டிருந்த துண்டை அவிழ்த்து எடுத்துக் கொண்டான். பூங்குழலிக்கு ஆறுதலாக அவ்விதம் சொன்னானே தவிர, அவன் மனத்துக்குள், ''ரவிதாஸன் மாண்டுதான் போயிருப்பான். அவனுக்கு இந்தக் கோர மரணம் வேண்டியதுதான்!'' என்ற எண்ணம் தோன்றியது.

இருவரும் அங்கே மேலும் நிற்பதில் பயனில்லை என்பதை ஒருங்கே உணர்ந்தார்கள். மீண்டும் கால்வாயை நோக்கி நடந்தார்கள்.

கால்வாயின் கரைகளை அங்கே இருபுறமும் மரங்கள் மறைத்துக் கொண்டிருந்தன. ஒரு மரக் கிளையைப் பிடித்துக் கொண்டு நின்று இரண்டு உருவங்கள் எட்டிப் பார்த்தது தெரிந்தது.

அவற்றில் ஒன்று ஆண் உருவம்; இன்னொன்று பெண் உருவம்.

''அதோ!'' என்று பூங்குழலி சுட்டிக் காட்டினாள்.

''ஆமாம்; அவர்கள் யார் என்று தெரிகிறதா?''

''மந்திரவாதி ஒருவன்; இன்னொருத்தி என் அண்ணன் மனைவி. எனக்கு முன்னால் அவள் வந்து மந்திரவாதியை விடுவித்திருக்கிறாள்.''

''நல்லதாய்ப் போயிற்று!''

''நல்லது ஒன்றுமில்லை. கால்வாயில் படகு வருவதை அவர்கள் உற்றுப் பார்க்கிறார்களே!''

அச்சமயம் இரண்டு உருவங்களில் ஒன்று திரும்பி இவர்கள் வரும் திசையைப் பார்த்தது. உடனே இரண்டு உருவங்களும் புதர்களுக்கு அடியில் மறைந்து விட்டன.

''ஐயோ! அவர்கள் நம்மையும் பார்த்து விட்டார்கள்!''

''பேசாமல் என்னுடன் வா! நான் ஒரு யுக்தி செய்கிறேன். நான் என்ன சொன்னாலும் ஆச்சரியப்படாதே! என்னை ஒட்டியே பேசு!'' என்றான் வந்தியத்தேவன்.

இருவரும் மேற்கூறிய உருவங்கள் நின்ற இடத்துக்குச் சமீபமாகப் போனார்கள். அந்த இடத்தைக் கடந்து சிறிது அப்பால் சென்று கால்வாயின் ஓரமாக உட்கார்ந்து கொண்டார்கள்.

பின்னால் புதரில் மறைந்திருந்தவர்களுக்குத் தங்கள் பேச்சு நன்றாய்க் கேட்கும் என்று வந்தியத்தேவன் நிச்சயப்படுத்திக் கொண்டான்.

''பூங்குழலி! இதோ பார்! ஏன் கவலைப்படுகிறாய்! மந்திரவாதி செத்து ஒழிந்து போனான். போனதே க்ஷேமம்!'' என்றான் வந்தியத்தேவன்.

''ஐயோ! என்ன பயங்கரமான சாவு!'' என்றாள் பூங்குழலி.

''கொலை செய்தது செய்துவிட்டு, இது என்ன பரிதாபம்?''

''ஐயோ! நானா கொலை செய்தேன்?''

''பின்னே அவனைச் சேற்றில் விழச் செய்தது யார்? நீதானே? திடீரென்று அப்புறம் உனக்குப் பச்சாத்தாபம் வந்துவிட்டது. தப்புவிக்கலாம் என்று வந்தாய்! அதற்குள் அவனைச் சேறு விழுங்கி விட்டது. தப்புவிக்கத்தான் வந்தாயோ, அல்லது செத்துப் போய் விட்டானா என்று பார்ப்பதற்குத்தான் வந்தாயோ, யார் கண்டது?''

''உன்னை யார் என்னைத் தொடர்ந்து வரச் சொன்னது?''

''வந்ததினால்தானே நீ செய்த கொலையைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது? அடி கொலை பாதகி!''


''நானா கொலை பாதகி?''


''ஆம்; நீ கொலை பாதகிதான்! நான் மட்டும் யோக்கியன் என்று சொல்கிறேனா? அதுவும் இல்லை. நான் இளவரசரைக் கடலில் முழுக அடித்துக் கொன்றேன். நீ மந்திரவாதியைச் சேற்றில் அமுக்கிக் கொன்றாய். அதற்கும் இதற்கும் சரியாய்ப் போய் விட்டது. நான் செய்த கொலையைப் பற்றி நீ வெளியில் சொல்லாமலிருந்தால், நீ செய்த கொலையைப் பற்றி நானும் யாரிடத்திலும் சொல்லவில்லை!''

''இளவரசரைக் கொன்றவன் நீதானா? சற்றுமுன் அவரைப் பார்க்கவேயில்லை என்று சொன்னாயே?''

''வேண்டுமென்றுதான் அப்படிச் சொன்னேன். இனிமேல் அப்படி உன்னிடம் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நான் கூறியதை ஒப்புக் கொள்வாயா, மாட்டாயா?''

''மாட்டேன் என்று மறுத்தால்?''





திருமதி இந்திரா ஐயர் சொல்லுகிறார்
'வீட்டின் பிரகாசத்தை நீண்ட காலத்திற்கு நிலைபெறச் செய்வது நவீன ஆல்கைட்-ப்ளஸ் சேர்ந்த ஷாலிமார் டியூரோலாக் ஸிந்தெடிக் எனமல் பெயிண்டு ஒன்றுதான்.


"ஒவ்வொரு ஆண்டும் எனது இல்லத்தை வர்ணம் பூசி அழகுபடுத்த எனக்கு கட்டுப்படியாகி வராது. அதனால்தான் அதிக காலம் நீடித்து உழைக்கக்கூடிய, வேலைக்குகந்த சிறந்த பெயிண்டிங்கையே நான் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. அதுவே நவீன 'ஆல்கைட்-ப்ளஸ்' சேர்ந்த ஷாலிமார் டியூரோலாக் ஸிந்தெடிக் எனமல். பூசப்பட்ட பரப்பில் எஃகு போன்ற உறுதியுடன் சேர்ந்து கொள்வதோடு கண்ணாடிபோன்ற தோற்றத்தையும் அளிக்கிறது. விளையாட்டுத்தனமான எனது மூன்று குழந்தைகள், வீட்டுச் சுவர்களில் கிறுக்கவும், எண்ணற்ற விரல் அடையாளங்களை மையால் பதிக்கவும் செய்பவர்களாதலால் எனக்குத் தேவையானது, எளிதில் கழுவி துடைக்கக்கூடியதும் உறுதியாகவும் இருக்கக்கூடிய ஸிந்தெடிக் எனமல் பெயிண்டுதான். உதிர்ந்து விழாததும், கலர் மாறாததுமான டியூரோலாக் ஸிந்தெடிக் எனமல் பூசப்பட்ட பரப்பை திரும்பத் திரும்ப எத்தனை தடவை வேண்டுமானாலும் கழுவி சுத்தம் செய்ய முடியும்—அதன் மூலம் சிறந்த பிரகாசத்தையும் அன்றுதான் பூசப்பட்டது போன்ற புதிய பொலிவையும் வனப்பையும் பெற முடிகிறது.'

'உங்கள் இல்லங்களுக்கு அழகுக்கு மேல் அழகு சேர்ப்பதோடு பூசும் செலவும் சிக்கனமாகக் கட்டுப்படியாகி வரவேண்டுமானால் ஷாலிமார் டியூரோலாக் ஸிந்தெடிக் எனமல் பெயிண்டையே தேர்ந்தெடுங்கள். நீங்கள் தேர்ந்தெடுக்க மிக அழகான ஏராளமான கலர்கள் உள்ளன. இதனுடைய விலைக்கு ஈடாக கிடைக்கும் வேறெந்த எனமல் பெயிண்டுகளையும் விட அதிக பரப்பிற்கு பூச முடிகிறது. இல்லத்தின் நீடித்த, நிலை பெற்ற பிரகாசமுள்ள தோற்றத்தை ஷாலிமார் டியூரோலாக் ஸிந்தெடிக் எனமல் பூசப்படுவதின் மூலம் பெறுங்கள்.'



எப்பொழுதும் பிரகாசமாயிருக்க...!
சிறந்ததையே தேர்ந்தெடுங்கள்!!

ஷாலிமார் பெயிண்டுகளை வாங்குங்கள்



3526
93428
485267

''உடனே நந்தினி தேவியிடம் போய் நீ மந்திரவாதியைச் சேற்றில் அமுக்கிக் கொன்றதைக் கூறுவேன். நான் செய்த கொலைக்குச் சாட்சியம் இல்லை; உன் கொலைக்குச் சாட்சியம் உண்டு....''

'' நந்தினி என்னை என்ன செய்து விடுவாள் ?''

''வேறொன்றும் செய்ய மாட்டாள். உன்னைப் பூமியில் கழுத்து வரையில் புதைத்து யானையின் காலினுல் இடறும் படி செய்வாள்!''

''ஐயோ ! என்ன பயங்கரம் !''

''வேண்டாம் என்ருல், நான் கூறுகிற படி செய்வதாக ஒத்துக் கொள்.''

''என்ன செய்ய வேண்டும் ?''

'' அதோ உன் அத்தான் கொண்டு வருகிருனே, அந்தப் படகில் ஏறிக் கொள். இரண்டு பேரும் நேரே இலங்கைக்குப் போய்விட வேண்டும். அங்கே போய் உன் இளவரசரை நினைத்து அழுது கொண்டிரு !''

''எதற்காக நான் இலங்கை போக வேண்டும் ? இங்கேயே இருந்தால் உனக்கு என்ன ?''

''ஆ! நீ போய்ப் பழுவேட்டரையரிடம் என்னைப் பற்றிச் சொல்லிவிட்டால்! — அவருக்கு என்ன இருந்தாலும் இளவரசர் பேரில் அபிமானம் உண்டு. என்னைப் பழி வாங்கப் பார்ப்பார். எனக்கு இந்த உலகில் இன்னும் கொஞ்சம் வேலை இருக்கிறது.''

''அட பாவி! இளவரசரை ஏன் நீ கொன்ருய்? அதையாவது சொல்லிவிடு !''

'' சொன்னுல் என்ன ? நன்ருகச் சொல்லுகிறேன். இளவரசரும் அவருடைய தமக்கையும் சேர்ந்து ஆதித்த கரிகாலரின் இராஜ்யத்தைப் பறிப்பதற்குச் சதி செய்தார்கள். ஆதித்த கரிகாலர் என்னுடைய எஜமானர். அவருடைய விரோதி என்னுடைய விரோதி. அதனுல்நான் இளவரசரைக் கொன்றேன். தெரிந்ததா ?''

'' இந்த மகாபாவத்துக்கு நீ தண்டனை அநுபவிப்பாய்.''

''அதைப் பற்றி நீ கவலைப்படாதே ! நான் சொன்னபடி நீ செய்யப் போகிருயா, இல்லையா?''

''செய்யாவிட்டால் வேறு வழி என்ன? அதோ படகு வருகிறது; போய் ஏறிக் கொள்கிறேன்.''

''இதோ பார்! நன்ருய்க் கேட்டுக் கொள். படகில் ஏறியதும் நேரே கடலை நோக்கிச் செல்ல வேண்டும். கோடிக் கரைப் பக்கம் திரும்பினுயோ, உன் கதி அதோ கதிதான். இங்கேயே இருந்து நான் உங்கள் படகைப் பார்த்துக் கொண்டிருப்பேன். படகு கடலை அடைந்த பிறகுதான் இங்கிருந்து நகருவேன்.''

''சரி, சரி! இங்கேயே இரு ! உன்னை நூறு நரிகள் பிடுங்கித் தின்னட்டும்!''

வந்தியத் தேவன் செய்த சமிக்ஞையைப் பார்த்துவிட்டுப் பூங்குழலி அங்கிருந்து விரைந்து போய்ப் படகில் ஏறிக் கொண்டாள்.

படகு மேலே சென்றது.

வந்தியத்தேவன் அவனிடம் கூறியபடி அங்கேயே உட்கார்ந்திருந்தான்.

அரை நாழிகை சென்றது.

படகு கால்வாயில் வெகுதூரம் வரை சென்று மறைந்தது.

திடீரென்று வந்தியத் தேவனுக்குப் பின்னுல், ''ஹா, ஹா, ஹா !'' என்ற ஒரு பயங்கரச் சிரிப்புக் கேட்டது.

வந்தியத் தேவன் திடுக்கிட்டவன் போல் பாசாங்கு செய்து, 'சட்'டென்று எழுந்து நின்று பார்த்தான்.

மந்திரவாதி புதர்களுக்கு மத்தியில் எழுந்து நின்று பேய் சிரிப்பது போலப் பயங்கரமாகச் சிரித்தான்.

''ஐயோ! பிசாசு !'' என்று அலறிக் கொண்டு வந்தியத் தேவன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

ஒன்பதாம் அத்தியாயம்

ஓடத்தில் மூவர்

பொழுது புலர்ந்தது. கருநிற அழகியான இரவெனும் தேவி உலகநாயகனை விட்டுப் பிரிய மனமின்றிப் பிரிந்து செல்ல நேர்ந்தது. நாயகனைத் தழுவியிருந்த அவளுடைய கரங்கள் இலேசாகக் கழன்று விழுந்தன. வாழ்க்கையிலேயே கடைசி முத்தம் கொடுப்பவளைப் போல் கொடுத்துவிட்டு இரவெனும் தேவி இன்னமும் தயங்கி நின்றாள். ''மாலையில் மறுபடியும் சந்திப்போம். நாலு ஜாம நேரந்தானே இந்தப் பிரிவு? சந்தோஷமாகப் போய் வா!'' என்றது உலகம். இரவு தயங்கித் தயங்கி உலகத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு சென்றது.

உள்ளத்திலே அன்பில்லாத கள்ளக் காதலனைப் போல் இரவு பிரிந்து சென்றதும் உலகம் மகிழ்ச்சியினால் சிலிர்த்தது. ''ஆகா! விடுதலை!'' என்று ஆயிரமாயிரம் பறவை இனங்கள் பாடிக் களித்தன. மரங்களிலும் செடிகளிலும் மொட்டுக்கள் வெடித்து மலர்ந்தன. எங்கிருந்தோ வண்டுகள் மந்தை மந்தையாக வந்து இதழ் விரிந்த மலர்களைச் சூழ்ந்து கொண்டு இன்னிசை பாடிக் களித்தன. விதவிதமான வர்ணச் சிறகுகள் உள்ள தட்டாரப் பூச்சிகள் நாலா பக்கங்களிலும் ஆனந்தக் கூத்தாடின.

கீழ் வானத்தில் பொன்னிறம் கண்டது. வானச் சுடர்கள் ஒவ்வொன்றாக ஒளி மங்கி மறைந்தன. இதுவரையில் வான வீதியில் பவனி வந்து கொண்டிருந்த பிறைச் சந்திரன், ''நிற்கட்டுமா ? போகட்டுமா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான்.

ஓடையில் படகு மெள்ள மெள்ளச் சென்று கொண்டிருந்தது. பட்சிகளின் கோஷ்டி கானத்தோடு துடுப்பு தண்ணீரைத் தள்ளும் சலசல சத்தமும் பூங்குழலியின் செவிகளில் விழுந்தது. திடுக்கிட்டுக் கண் விழித்தாள். ஒரு கிளையில் வெடித்த இரண்டு அழகிய நீல நிற மொட்டுக்கள் ஒருங்கே மலர்ந்ததுபோல் அவளுடைய கண்ணிமைகள் திறந்தன. எதிரே இளவரசரின் பொன் முகம் தோன்றியது. இன்னும் அவர் தூங்கிக் கொண்டிருந்தார். தூக்கந்தானா? அல்லது சுரவேகத்தில் இன்னமும் உணர்ச்சியற்றிருக்கிறாரா? தெரியவில்லை. எனினும், அவருடைய திருமுகம் எவ்வளவு பிரகாசமாயிருந்தது !

அப்பால் சேந்தன் அமுதன் துடுப்புத் தள்ளிக் கொண்டிருந்தான்.

''பூங்குழலி! ஏன் அதற்குள் விழித்துக் கொண்டாய் ? இன்னும் சற்று நேரம் தூங்குவதுதானே?'' என்றான்.

பூங்குழலி புன்னகை பூத்தாள். முகத்திலிருந்த இதழ்களிலே மட்டும் அவள் புன்னகை செய்யவில்லை. அவளுடைய திருமேனி முழுதும் குறுநகை பூத்தது.

காட்டிலே பிறந்து வளர்ந்து வாழ்ந்தவள் பூங்குழலி. ஆயினும் பட்சிகளின் கானமும், வண்டுகளின் கீதமும் இவ்வளவு இனிமையாக அவளுடைய செவிகளில் என்றைக்கும் தொனித்ததில்லை.

'' அத்தான் ! உதய ராகத்தில் ஒரு பாட்டுப் பாடு !'' என்றாள் பூங்குழலி.

''நீ இருக்குமிடத்தில் நான் வாயைத் திறப்பேனா? நீதான் பாடு!'' என்றான் சேந்தன் அமுதன்.

''இராத்திரி இருளடர்ந்த காட்டில் பாடினாயே ?''

'' காரிய நிமித்தமாகப் பாடினேன். இப்போது நீ பாடு !''

'' எனக்கும் பாட வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. ஆனால் இளவரசருக்குத் தொந்தரவாயிருக்குமல்லவா?''

''எனக்குத் தொந்தரவு ஒன்றுமில்லை. இரண்டு பேரும் சேர்ந்து பாடுங்கள்!'' என்றார் அருள்மொழிவர்மர்.

பூங்குழலி வெட்கத்தினால் தலை குனிந்து கொண்டாள்.

''படகு எங்கே போகிறது ?'' என்று இளவரசர் கேட்டார்.

''நாகப்பட்டினம் சூடாமணி விஹாரத்திற்கு!'' என்றாள் பூங்குழலி.

''அப்படியானால், இராத்திரி நான் கண்டது கேட்டதெல்லாம் கனவல்லவா? உண்மைதானா?''

''ஆம், ஐயா ! இதோ இவர்தான் தங்கள் தமக்கையாரிடமிருந்து செய்தி கொண்டு வந்தவர்.''

''இளையபிராட்டி கூறியதையெல்லாம் விவரமாகச் சொல்லு, அமுதா! என்னைப் புத்தசங்கத்தில் சேர்ந்து விடும்படிதானே என் தமக்கை சொல்லி அனுப்பினார் ?''

இதற்கு என்ன விடை சொல்லுவதென்று அமுதன் தயங்கிய போது, குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது. பூங்குழலியும் சேந்தன் அமுதனும் திடுக்கிட்டார்கள்.

இளவரசரின் முகத்தில் மட்டும் ஒரு மாறுதலும் இல்லை.

''என் நண்பன் எங்கே? வாணர் குலத்து வீரன்?'' என்று இளவரசர் கேட்டார். கேட்டு விட்டுக் கண்களை மூடிக் கொண்டார்.

சிறிது நேரத்துக்குள் குதிரை மீது வந்தியத்தேவன் தோன்றினான்.

படகு நின்றது.

வந்தியத்தேவனும் குதிரை மீதிருந்து இறங்கி வந்தான்.

''ஒன்றும் விசேஷமில்லை. நீங்கள் பத்திரமாயிருக்கிறீர்களா என்று பார்த்து விட்டுப் போக வந்தேன். இனி அபாயம் ஒன்றுமில்லை'' என்றான் வந்தியத்தேவன்.

''மந்திரவாதி?'' என்று பூங்குழலி கேட்டாள்.

''இந்தப் படகில் இளவரசர் இருக்கிறார் என்ற சந்தேகமே அவனுக்கு இல்லை. நான் கூறியதை அவன் அப்படியே நம்பி விட்டான்.''

''அவனைப் பார்த்தாயா?''

''பார்த்தேன்; ஆனால் அவனுடைய பிசாசைப் பார்த்ததாகப் பயந்து பாசாங்கு செய்தேன்.''

''உன்னைப் போல் பொய் சொல்லக் கூடியவனை நான் பார்த்ததேயில்லை.''

''பொய் என்று சொல்லாதே! கற்பனா சக்தி என்று சொல்லு. இளவரசர் எப்படியிருக்கிறார்?''

''நடு நடுவே விழித்துக் கொண்டு இரண்டு வார்த்தை சொல்லுகிறார். அப்புறம் நினைவு இழந்துவிடுகிறார்.''

''இந்தச் சுரமே அப்படித்தான்.''

''எத்தனை நாளைக்கு இருக்கும்?''

''சில சமயம் ஒரு மாதம்கூட இருக்கும். சூடாமணி விஹாரத்தில் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள். பிக்ஷுக்கள் வைத்தியம் செய்தால் இரண்டு வாரத்தில் குணப்படுத்தி விடுவார்கள். ஜாக்கிரதை! பூங்குழலி! உன்னை நம்பித்தான் இளவரசரை ஒப்படைத்து விட்டுப் போகிறேன். உன் அத்தான் எங்கேயாவது கோவில் கோபுரத்தைக் கண்டால் தேவாரம் பாடிக் கொண்டு சுவாமி தரிசனத்துக்குப் போய் விடுவான்!''

சேந்தன் அமுதன், ''உன்னோடு பழகிய பிறகு அப்படியெல்லாம் செய்ய மாட்டேன். சிவ கைங்கரியம் செய்யும் ஆசைகூட எனக்குக் குறைந்துவிட்டது!'' என்றான்.

''என்னால் குறைந்துவிட்டதா? அல்லது இந்தப் பெண்ணினாலா? உண்மையைச் சொல்!''

சேந்தன் அமுதன் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், ''குதிரையை நான் சொன்ன இடத்தில் கண்டு பிடித்தாயா?'' என்று கேட்டான்.

''குதிரை என்னைக் கண்டு பிடித்தது. இது நான் உன்னிடம் தஞ்சையில் விட்டு வந்த குதிரை அல்லவா?''

''ஆமாம்.''

''இருட்டில் இது அடர்ந்த காட்டுக்குள்ளே என்னைப் பார்த்து விட்டுக் கனைத்தது. அராபியர்களிடம் 'நான் அகப்பட்டுக் கொண்டதில் ஒரு விஷயம் தெரிந்து கொண்டேன், அமுதா! குதிரைகளை வெறுங் காலோடு ஓடச் செய்வது பாவம்! குளம்புக்கு அடியில் இரும்புக் கவசம் அடித்து ஓட்ட வேண்டும். முதன் முதலில் நான் பார்க்கும் கொல்லுப் பட்டறையில் இதன் குளம்புக்குக் கவசம் அடிக்கச் சொல்லப் போகிறேன். சரி, சரி! அதையெல்லாம் பற்றிப் பேச நேரமில்லை. மறுபடியும் உங்களையும் இளவரசரையும் பார்ப்பேனோ, என்னமோ, தெரியாது. இளவரசர் மறுபடி விழித்தால் நான் பழையாறைக்குப் போகிறேன் என்று சொல்லுங்கள். அங்கிருந்து விரைவில் செய்தி அனுப்புவதாகவும் சொல்லுங்கள். அப்போது தான் நிம்மதியாக இருப்பார்.''

வந்தியத் தேவன் குதிரையைத் திருப்பி விட்டுக் கொண்டு போனான். விரைவில் இவர்களுடைய பார்வையிலிருந்து அவன் மறைந்தான்.

இருபுறமும் தாழம் புதர்கள் அடர்ந்திருந்த ஓடைக்காலின் வழியாகப் படகு போய்க்கொண்டிருந்தது. பொன்னிறத் தாழம் பூக்களும், தந்த வர்ண வெண் தாழம் பூக்களும் இருபக்கமும் செறிந்து கிடந்தன. அவற்றின் நறுமணம் போதையை உண்டாக்கிற்று. சில இடங்களில் ஓடைக் கரையில் புன்னை மரங்கள் வளர்ந்திருந்தன. சில இடங்களில் கடம்ப மரங்களும் இருந்தன. முத்து நிறப் புன்னை மரங்களும் குங்கும வர்ணக் கடம்ப மலர்களும் ஓடைக் கரைகளில் சொரிந்து கிடந்தன.

பூலோகத்திலிருந்து புண்ணியசாலிகள் சொர்க்கத்துக்குப் போகும் பாதை ஒன்று இருந்தால், அது இப்படித்தான் இருக்கும் என்று பூங்குழலிக்குத் தோன்றியது.

நாகப்பட்டினம் சூடாமணி விஹாரத்தின் பின்புறத்தில் படகை நிறுத்தி விட்டு மூவரும் கரையில் இறங்கினார்கள். அச்சமயம் சூடாமணி விஹாரத்தில் ஏதோ குழப்பம் நேர்ந்து கொண்டிருப்பதாகத் தோன்றவே காரணம் தெரிந்து வர சேந்தன் அமுதன் சென்றான். அப்போது, இளவரசருடன் தனித்து விடப்பட்ட பூங்குழலி, காதல் நெஞ்சத்துடன் அவருக்குப் பணிவிடை செய்வதை அட்டைப்படத்தில் வண்ண ஓவியமாகக் காண்கிறீர்கள்.

சித்திரம்: மணியம்

இடையிடையே கிராமம் தென்பட்ட இடத்தில், சேந்தன் அமுதன் சென்று இளவரசருக்குப் பாலும் பூங்குழலிக்கு உணவும் வாங்கிக்கொண்டு வந்தான்.

இளவரசர் கண் விழித்தபோதெல்லாம் பூங்குழலி சற்று விலகி நின்றாள். நேருக்கு நேர் அவரைப் பார்க்க முடியாமல் அங்குமிங்கும் பார்த்தாள். அவர் உணர்விழந்திருந்த நேரங்களில் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். சேந்தனுடன் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டுமிருந்தாள். சில சமயம் இரண்டு பேரும் சேர்ந்து பாடிக் களித்தார்கள்.

சேந்தன் அமுதன் உணவு தேடிக் கிராமங்களுக்குச் சென்ற சமயங்களில் பூங்குழலி இளவரசரின் நெற்றியைத் தடவிக் கொடுத்தும் தலையைக் கோதி விட்டும் பணிவிடை செய்தாள். அப்போதெல்லாம் அவள் உள்ளம் பொங்கி, உடல் சிலிர்த்து, பரவச நிலையிலிருந்தாள்.

இம்மாதிரி அவள் எத்தனை எத்தனையோ பூர்வ ஜன்மங்களில் அவருக்குப் பணிவிடை செய்தது போன்ற உணர்வு தோன்றியது. உருவமில்லாத ஆயிரமாயிரம் நினைவுகள் இறகுகளைச் சடசடவென்று அடித்துக் கொண்டு அவளுடைய உள்ளத்தில் கும்பல் கும்பலாகப் புகுந்து வெளியேறிக் கொண்டிருந்தன.


ஒரு பகலும் ஓர் இரவும் அவர்கள் அந்த ஓடைக் கால் வழியாகப் படகில் சென்றார்கள். பூங்குழலியும் சேந்தனும் முறை போட்டுக் கொண்டு அவ்வப்போது சிறிது நேரம் கண்ணயர்ந்தார்கள். கண்ணயர்ந்த நேரத்திலும் உருவந் தெரியாத இன்பக் கனவுகள் பலவற்றைப் பூங்குழலி கண்டாள்.

மறு நாள் சூரியோதய நேரத்தில், உலகமே பொன்னிறமாக ஜொலித்த வேளையில், படகு நாகப்பட்டினத்தை அடைந்தது. நாகப்பட்டினத்தின் அருகில் அந்த ஓடையிலிருந்து ஒரு கிளை பிரிந்து சூடாமணி விஹாரத்துக்கே நேராகச் சென்றது. அந்தக் கிளை வழியில் படகைக் கொண்டு போனார்கள். புத்த விஹாரத்தின் பின்புறத்தில் கொண்டு போய் நிறுத்தினார்கள்.

அச்சமயம் அந்தப் புகழ்பெற்ற சூடாமணி விஹாரத்தில் ஏதோ குழப்பம் நேர்ந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது. விஹாரத்தின் வாசலில் ஜனக் கூட்டத்தின் இரைச்சல் கேட்டுக்கொண்டிருந்தது. பிக்ஷுக்கள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

படகிலிருந்த மூவரும் கரையில் இறங்கினார்கள். சேந்தன் அமுதன் தான் விஹாரத்துக்குச் சென்று குழப்பத்தின் காரணம் என்னவென்று தெரிந்து வருவதாகச் சொல்லிவிட்டுப் போனான்.

(தொடரும்)



ஆண்டவனுக்கு அலங்காரம்


ஆண்டவனுக்கும் பல்ப் பல விதங்களில் இரண்டாயிரம் நடவைகளுக்கு மேல் அலங்காரம் செய்து பார்த்திருக்கிறார் ஒருவர். தஞ்சை ஜில்லா திருவலஞ்சுழியில் பிறந்து கும்பகோணம் பாணபுரீஸ்வரர் ஆலயத்தில் அர்ச்சகராகப் பணிபுரியும் திரு சிவஸ்ரீ கே. மகாலிங்க சிவாசாரியார்தான் அந்தப் புண்ணியாத்மா. ஆகம விதிப்படி ஆண்டவனுக்கு அழகுற அலங்காரம் செய்கிறார். அலங்காரம் செய்வதில் இவருக்கு இணை இவரேதான் என்று கூடச் சொல்லலாம். சான்று ?

காஞ்சி காமகோடி சுவாமிகள் இவருக்கு 'ஆகம அலங்கார கலாரத்தினம்' என்ற பட்டத்தைச் சூட்டியிருக்கிறார். பக்தியை வாரி, வாரி வழங்கும் வாரியார் இவருக்கு 'ஆகம வேத அலங்கார மாமணி' என்ற பட்டத்தை வழங்கியிருக்கிறார்.


நாம் பணிபுரியும் ஆலயத்தில் மட்டுமல்ல; சுற்று வட்டாரத்தில் உள்ள பல்ப்பல ஊர்களிலும் விசேட தினங்களில் சுவாமியை அலங்கரிக்க இவரைத்தான் அழைக்கிறார்கள்.



'சிவஸ்ரீ' பட்டம் எல்லோருக்கும் கிடைக்காது. ஆச்சாரியான், அபிஷேகம் ஆன பிறகு பல விசேஷ தீட்சை பெற்றவர்களுக்கு மட்டும் சிவஸ்ரீ பட்டம் வழங்குவதுண்டு. இவர் 'சிவஸ்ரீ' பட்டமும் பெற்றவர். —அன்பு



ஹாஸன் அப்தாலில் உள்ள குருநானக்கின் கரம்



குருநானக் அவதரித்த நன்கானா ஸாஹிப்

சீக்கிய வீரர்களின் சீரிய தலைவர்

ஐந்து வருஷ பாலகன் அவன். ஆனால் அவன் உள்ளிருந்து ஐந்நூறு என்ன, ஐயாயிரம் வருடத்து அநுபவம் பேசியது.

கம்பன் வீட்டுக் கட்டுத் தறி கவி பாடிய கதையும், மண்டன மிச்ரர் வீட்டுக் கிளி தத்துவார்த்தம் பேசிய கதையும் இன்றைய உலகத்துக்குக் கதையாகத் தோன்றலாம். ஆனால் அவற்றிலும் உண்மையுண்டு என்பதை வாழையடி வாழையாக இலைக்கும் மனித சமுதாயம் நிரூபித்துக் கொண்டே வருகிறது.

அவனை அன்றுதான் பள்ளியில் சேர்த்தார்கள். தன் குருவை வணங்கி எழுந்தவன் ஒரு கேள்வி கேட்டான்: "தாங்கள் என்ன படித்திருக்கிறீர்கள், எனக்குச் சொல்லித் தரும் அளவுக்கு?"

ஒரு கணம் உபாத்தியாயர் திகைத்துப் போனார். அடுத்தகணமே சமாளித்துக் கொண்டு, "நான் வேத சாத்திரங்கள் படித்திருக்கிறேன். கணக்கு — வழக்குகள் பயின்றிருக்கிறேன்! அவற்றை யெல்லாம் சொல்லித் தருவேன்!" என்றார்.

"அந்த ஏட்டுப் படிப்பெல்லாம் வீண். வீணில் தப்புக் கணக்குப் போட்டுக் குட்டையைக் குழப்பாதீர்கள்!" என்ற பாலகன் மேலும் கூறினான்: "உண்மையில் தாங்கள் கல்வி புகட்ட விரும்பினால், இந்த உலகத்தின் ஆசாபாசங்களையும் மாயை — மோகங்களையும் விட்டு உதறுங்கள். மனத்தை ஒருமுகப் படுத்தி அதனை மசியாக்குங்கள். நம்பிக்கையென்னும் வெள்ளைக் காகிதத்திலே, விவேகத்தை எழுத்தாளனாக்கி இருதயத்தை எழுதுகோலாக்கி, சான்றோரின் புனித வாக்கை எழுதுங்கள், பற்றற்றான் பற்றினைப் பற்றி. இப்பற்றை விட அதுவே சிறந்த வழி; தவறில்லாத கணக்கு! தாங்களும் கற்று எனக்கும் போதியுங்கள்!"

இப்படி வயதுக்கு மீறிய பேச்சைப் பேசியவர் ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் நமது பாரத தேசத்திலே தோன்றிய குருநானக் என்னும் மகான்.

ஒரு நாமம் ஒருருவம் இல்லாத ஒருவனுக்கு ஆயிரம் நாமம் சூட்டி, ஆயிரம் உருவம் கொடுத்து மகிழ்ந்த மணிவாசகப் பெருமான் பரம்பரையில் வந்தவர்தான் குருநானக். அவரும் ஒருவனே தேவன், அவன் அருவமானவன் என்பதைத் திரும்பவும் உலகுக்கு எடுத்துச் சொன்னார்.

உலகத்தில் எத்தனையோ மதங்கள், மறைகள், வழிகள் இருக்கின்றன. இத்தனை வேறுபாட்டுக்கும் இடையே அவை ஒரே குறிக்கோளை நாடிச் செல்கின்றன என்பதும் கண்கூடு.

சீக்கிய மத ஸ்தாபகரான குரு நானக், பிரகலாதனைப் போல, துருவனைப் போல, ஒன்பது வயது நிறைவேறுவதற்கு முன்பாகவே, அவன் வழிபாட்டில் மனத்தைச் லயிக்க விடலானார்.

பிரும்மத்தை அறிய முயல்பவன் எத்தகைய பண்பை வளர்க்க வேண்டும் எ…



பழைதப் பல சான்றோர்களையும் போலவே, அவரும் கூறுகிறார்:

சின்னஞ் சிறு அருகம் புல்லைப் போலவே, ஆணவமின்றிச் சிறியவனாக இருக்கப் பழக வேண்டும். பெரிய மரமாக உயர்ந்து வளர முயன்றால், சூறைக் காற்று, தலை சாய்த்துச் சென்று விடும். சிறு அருகம் புல்லோ வளைந்து கொடுத்து, பெரும் புயலுக்குப் பின்னும் **அவன்** பெருமையை பறை சாற்றிக் கொண்டு வாழும்.

அடியார்க்கு அடியாராக வாழும் மாண்பை மணிவாசகர், ராமதாசர் போலவே அறிந்து செயற்பட்ட நானக்குக்கு அந்தச் சிறு வயதிலும், **அவன்** சிந்தனையைத் தவிர வேறு சிந்தனை இல்லை. தந்தை ஆடு மேய்க்க வயற்காட்டுக்கு அனுப்பினார். ஆடுகளின் நினைவை மறந்து, **அவன்** நினைவில் ஈடுபட்ட நானக்குக்கு ஆடுகள் பயிரை மேய்ந்து விட்டன என்பது, தந்தை அதட்டிய பிறகே தெரிய வந்தது. அது மட்டுமா ? இன்னும் சற்று வயதுவந்தபின், தந்தை ஏதாவது தொழில் நடத்திப் பிழைத்துக் கொள் என்று அவருக்கு இருபது ரூபாய் கொடுத்தார். ஆனால் அடியார்க்குப் பணி புரிவதையே தம் தொழிலாகக் கருதிய அவர், அவர்கள் பணிக்கே அந்த ரூபாயைச் செலவிட்டு விட்டார். சினம் கொண்ட தந்தை, கல்யாணம் செய்து ஒரு கால்கட்டுப் போட்டால் சரியாகி விடுவாரோ என்று எண்ணினார்.

திருமணம் ஆனதும் நானக், சுல்தான் பூருக்குச் சென்று, தமது மைத்துனரின் உதவி கொண்டு, ஓர் உத்தியோகம் பெற்றார். அந்த உத்தியோகத்தில் மனம் நிலைக்கவில்லை. யாருக்கோ பொருள் அளக்கும் பொழுது, பதின்மூன்று என்னும் பொருள் தரும் 'தேரா' என்னும் சொல் அவருக்கு வேறு ஒரு பொருள் தந்தது. 'தேரா' என்றால் 'உன்னுடையது' என்று பொருள். எல்லாம் 'உன்னுடையது' ஆனபின் 'என்னுடையது' என்று சொல்ல இந்த உலகில் என்ன இருக்கிறது ? இப்படிச் சிந்தனை ஓடவே, அவர் தம்மை அவனுக்கே அர்ப்பணம் செய்தார்.

உள்ளத் தூய்மையால் உயர்ந்து பற்றற்ற நிலையை எட்டிப் பிடித்து, எவ்வுயிரிலும் அவனைக் கண்ட நானக், இனம் — மதம் இவற்றுக்கு அப்பாற்பட்ட உதாரண புருஷராக விளங்கினார். உள்ளத் தூய்மைக்கு அவர் தரும் விளக்கம்:

'கங்கையில் குளித்தால் கடைத்தேறிவிடலாம் என்று சொல்கிறீர்களே ! அப்படியானால், கங்கை நீரிலேயே வாழும் மீன்கள் எப்பொழுதோ கடைத்தேறியிருக்க வேண்டுமே !' இவ்விளக்கத்தில் அவர் உள்ளம் மட்டுமா தெரிகிறது? மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதையும் அல்லவா எடுத்துக் காட்டுகிறது?

'சான்றோர் நாயையும் புலையனையும் சமமாகக் கருதுவர்' என்னும் பொருள் தரும் கீதை சுலோகத்துக்கு இணங்க வாழ்ந்த அவர் ஒரு நாள் ஒரு தச்சர் வீட்டில் தங்கினார். சாதி மக்கள் இதனை எதிர்த்தனர். 'இன்ன ஜமீந்தார் வீட்டில் தங்கக் கூடாதா?' என்று கேட்டனர். காரணம் அவர் 'கத்ரி' என்னும் க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர்.

நானக்கின் செவிகளில் இந்தச் செய்தி விழுந்ததும், அவர் கூறினார்: ''இந்தத் தச்சர் உடல் உழைப்பால் பொருள் சேர்த்து வாழ்க்கை நடத்துபவர். இவர் வீட்டு உணவு எனக்குப் பாலும் தேனும் கலந்த சிற்றுண்டியாக இனிக்கிறது. அவர்கள் குறிப்பிடும் ஜமீன்தாரோ உட்கார்ந்து சாப்பிடுபவர். ஏழை மக்களை வருத்தித் தாம் வாழ்பவர். அதில் எனக்கு இரத்த வாடை அடிக்கிறது!''

சர்தார் பூரண்சிங் என்பவர் இந்த நிகழ்ச்சியை இப்படிக் கட்டுரையாக வடிக்கிறார்: 'குருநானக் ஏழைத் தச்சனின் வீட்டு ரொட்டியைப் பிழிந்த பொழுது அதில் பால் வடிந்ததாம். பாகோ என்னும் ஜமீந்தாரின் வீட்டு ரொட்டியைப் பிழிந்த பொழுது குருதி வடிந்ததாம்!' இந்த நிகழ்ச்சி மெய்யோ, பொய்யோ உள்ளத்தால் துறவியானாலும் உடலுழைப்புக்கு அவர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பது விளங்கவில்லையா ?


நம் தமிழ் நாட்டுச் சித்தர்களைப் போலவே, குரு நானக்கின் சிந்தனையும் ஓடியிருக்கிறது. 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி' என்னும் பாடலின் பொருளை குருநானக் எங்கிருந்து கற்றாரோ, 'ஆண்டவன் ஒரு குயவன். உலகத்து மண்ணை எடுத்துப் பல்வகைப் பாண்டங்கள் செய்கிறான். ஐந்து தத்துவங்களைப் பிசைந்து அவன் செய்யும் பாண்டங்களில் சிறிது பெரிது என்று வேறுபாடு காண்பானேன்?' என்று கேட்கிறார்.

இந்து சமயத்துக்கு உழைப்பும் உன்னத நோக்கமும் உடன்பாடு என்று கூறினால், அதுவே, எந்தச் சமயத்துக்கும் உடன்பாடு என்று கூறும் நானக், எத்தனையோ பழைய பழக்கவழக்கங்களை எதிர்த்தாலும், சமுதாயத்துக்கு நல்லதையே நாடுகிறார்.

பூணூல் அணிய அவர் தயார்தான். ஆனால் அந்தப் பூணூல் எத்தகையதாக இருக்க வேண்டும்? இதை அவரே கூறுகிறார், கேளுங்கள்:

''தயைதான் பருத்தியாக இருக்க வேண்டும். அதன் நூல் 'திருப்தி'யாக அமைய வேண்டும். முப்புரி நூலுக்கு முடியுண்டே, அது அடக்கமாக இருக்க வேண்டும். மெய் ஒன்றே இந்தப் பூணூலின் பணி. இப்படிப்பட்ட பூணூல் இருந்தால் நான் அணியத் தயார். ஏனென்றால், இது அறுகாது; அழுக்கும் அடையாது. எரியாது; கெடவும் கெடாது!'' இப்படிக் கூறும் குருநானக் தெய்விகக் கவிஞர். அவரது '**ஜப்ஜீ**' சீக்கியர்களுக்குக் கீதை போன்றதாகும்.

அன்றைய பாரதத்துக்கு எந்த குண நல இயல்புகள் எல்லாம் தேவையாயிருந்ததோ, அதுவே, இந்தக் காலத்துக்கும் தேவை. அன்றுதொட்ட மேனியாக இந்த உலகம் இன்னும் இயங்கி வருகிறது. வரவேண்டும் என்றால் குரு நானக் போன்ற சான்றோர்களின் விழாவைக் கொண்டாடினால் மட்டும் போதாது. இந்து மதமானாலும், எந்த மதமானாலும் பரிபூரணமாக வாழ்ந்து பாருக்கு நல்லது செய்வதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன அந்தக் காலம்தொட்டு. இந்தக் காலத்திலும் அப்பணி சிறக்க வேண்டும். இதுவே குருநானக்குக்கு நாம் காட்டும் சிரத்தைப் பணியாகும். — **ரா. வீ.**



37. பரத்வாஜ ஆசிரமம்

பரதன் பரிவாரத்துடன் பரத்வாஜ ஆசிரமத்தை நோக்கிச் சென்றான். பிரயாக வனம் போய்ச் சேர்ந்ததும் சிறிது தூரத்தில் ரம்மியமான ஒரு சோலையும் அதன் மத்தியில் பர்ண சாலையும் இருக்கக் கண்டார்கள். அதுவே பரத்வாஜ ரிஷியின் ஆசிரமம் என்று அறிந்து பரதன் தன் பரிவாரக் கூட்டத்தை நிற்கச் சொல்லி விட்டு வசிஷ்டர் முதலிய சில முக்கியமான பெரியவர்களுடன் அடக்கமாகச் சென்றான். தன்னுடைய பட்டாடை, வில், அம்பு, கத்தி முதலிய க்ஷத்திரிய வேஷங்களைக் கழற்றி வைத்துவிட்டு வசிஷ்ட முனிவரை முன்னிட்டுக் கொண்டு காலால் நடந்து சென்றான். பிறகு மந்திரிகளையும் ஓர் இடத்தில் நிற்கச் சொல்லி விட்டான். வசிஷ்டரை மட்டும் கூட அழைத்துச் சென்றான். வசிஷ்டரைக் கண்டதும் பரத்வாஜர் ஆசனத்திலிருந்து எழுந்தார். சிஷ்யர்களை ராஜகுமாரனுடைய பாதத்துக்கு ஜலம் கொண்டு வரச் சொல்லி வசிஷ்ட முனிவரை எதிர்கொண்டார்.

பரத்வாஜ முனிவரைப் பரதன் வணங்கினான். அவரும் இவன் யார் என்பதை அறிந்து கொண்டார். ராஜகுமாரனுக்குச் செய்ய வேண்டிய உபசாரத்தை முறைப்படி செய்வித்து க்ஷேம சமாசாரம் விசாரித்தார். ஏற்கனவே தெரிந்த துயரமான விஷயமானபடியால் தசரதனைப் பற்றிக் கேட்கவில்லை.▌

* * *

நான் எழுதுவது வால்மீகி ராமாயணத்தின்படி. குகன் எப்படிப் பரதனுடைய பரிவாரத்தைக் கண்டு சந்தே

இத்தானே அப்படியே பரத்வாஜரிஷியும் பரதனுடைய எண்ணத்தைச் சந்தேகித்துக் கேட்டதாக வால்மீகி இந்த இடத்தில் பாடியிருக்கிறார். துளசி ராமாயணத்தில் இப்படி இல்லை. துளசி ராமாயணம் முற்றிலும் பக்தி மயம். ரிஷிகளுக்குத் தெரியாத ஒரு விஷயமில்லை. ஆனபடியால் துளசி ராமாயணத்தில் பரதனைப் பற்றிப் பரத்வாஜருக்குச் சந்தேகம் எப்படியிருக்க முடியும்? ஆனால் கம்பர் பாடியிருப்பது வால்மீகி முனிவரைப் பின் பற்றியே இருக்கிறது. இந்தக் கட்டத்தில் மட்டிலுமல்ல. இன்னும் பல இடங்களிலும் நன்றாகக் காணப்படுகிறது. கம்பர் வால்மீகி ராமாயணத்தை மிகக் கவனமாகப் பின் பற்றியே தம்முடைய தனிச் செல்வமான கற்பனா சக்தியையும் உபயோகித்து அபார அழகுடன் தம் ராமாயணத்தைப் பாடியிருக்கிறார். ஏதும் மாற்றுமலே அநேக இடங்களில் சாமர்த்தியமாகச் சிக்கல்களைச் சரிப்படுத்திவிட்டிருக்கிறார். மாற்றிப் பாடியிருப்பது வெகு சில இடங்களிலேயே.

துளசி ராமாயணம் அப்படியில்லை. ஏராளமான மாறுதல்கள் செய்திருக்கிறார். தம் சொந்தச் சொத்தாகவே பாவித்துத் துளசிதாசர் ராமனைப் பாடியிருக்கிறார். அது அவருடைய அபார பக்தியினால் உண்டான உரிமை.

கம்பர், பரத்வாஜ—பரத சம்பாஷணையை வால்மீகி சொல்லிய படியே வைத்துக் கொண்டு ரிஷி சொன்னதைக் கேட்ட பரதன் பெருஞ் சினங்கொண்டு பதில் சொன்னதாக மிக அழகாகப் பாடியிருக்கிறார்.

எப்படியாயினும் பரத்வாஜ ரிஷி பரதனைச் சந்தேகப்பட்டுக் கேட்டது நமக்கு 'ஒரு மாதிரி'யாகத்தான் இருக்கிறது. குகன் கேட்டதில் தனியழகு பொதிந்து கிடக்கிறது. பரத்வாஜர் சந்தேகித்தது நியாயமாகத் தோன்றவில்லை. இதற்குச் சமாதானம், ''அப்பனே, உன்னை நான் அறியாதவனா? உன்னுடைய குணத்தைத் திண்ணமாக்கி, விளக்கிக் காட்டி உன்னைப் புகழ்பெறச் செய்வதற்காகவே பரீக்ஷையாகக் கேட்டேன். பரிசுத்தமான எண்ணத்தை ஊர்ஜிதப்படுத்துவதற்காகவே கேட்டேன்'' என்று ரிஷி சொன்னதாக வால்மீகி ராமாயணத்தில் காணப்படுகிறது.

நம்முடைய காலத்தில் ரிஷிகளைப் பற்றி நாம் கொண்டுள்ள சித்திரம் வேறு; வால்மீகி காலத்தில் வேறு. எப்படி ஸ்ரீ ராமன் சாக்ஷாத் பகவானுடைய திருஅவதாரமாயினும், வால்மீகி ராமாயணத்தில் ஒரு வீரபுருஷனாகச் சித்திரிக்கப்படுகிறானே, அப்படியே பரத்வாஜ ரிஷியும் அவர் ராமனிடம் வைத்த வாத்சல்யத்தினால் பரதனைச் சந்தேகித்ததாகச் சொல்லப்படுகிறது; ''ராகவ ஸ்நேக பந்தத்தால்'' ரிஷி இவ்வாறு கேட்டதாகவும், பிறகு பரதன் வருந்தியதைக் கண்டு சமாதானமாகச் சில மொழிகளைச் சொன்னதாகவும் வால்மீகி பாடியிருக்கிறார். வால்மீகி ராமாயணத்தில் எல்லாப் பாத்திரங்களும் அபூர்வ குணங் கொண்ட மானிடர்கள். தெய்வீகத் தன்மை இளம் சூரியனைப் போல் இலேசாக வீசுகிறது. அவ்வளவே. மானிட இயல்பு அதிகம். பின்னால் வந்த துளசிதாஸர் காலத்தில் பக்தி ரசம் நடுப் பகல் போல் விளங்குகிறது. வேறு எதற்கும் இடமில்லாமல் பூரண ஒளிபெற்று விட்டது. கம்பருடைய சித்திரத்தில் பக்தி பிரதானமாகவே இருந்தாலும் வால்மீகி சித்திரத்தினுடைய மானிட வண்ணம் அழிந்து போகாமல் பக்தியைப் பின்னால் எழில் வீசும்படி வைத்து, மானிட சித்திரத்தை இன்னும் பேரழகு படும்படி செய்திருக்கிறார்.

* * *

பரதனைக் கண்டதும் பரத்வாஜர் க்ஷேம சமாசாரம் விசாரித்து விட்டு, ''பரதனே, நீ ஏன் ராஜ காரியத்தை விட்டு விட்டு இங்கே வந்தாய்? உன் பொறுப்பு அயோத்தியில் அல்லவா இருக்கிறது? எனக்குக் கொஞ்சம் சந்தேகம் தோன்றுகிறது. இளைய மனைவியின் பேச்சைக் கேட்டுத் தசரதன் ராமனைப் பதினான்கு வருஷம் காட்டில் வசிக்கும்படி ஆணையிட்டதனால் அவன் தன் தம்பியையும் மனைவியையும் அழைத்துச் சென்று வனத்திலிருக்கிறான். உன் ராஜ்ய பரிபாலனத்துக்கு இன்னும் கொஞ்சம் இடையூறு இருக்கிறதென்று எண்ணினாயா? அதை நீக்குவதற்காக ஏதாவது இன்னும் யோசனையா?'' என்று கேட்டார்.

இந்த மொழிகள் முனிவர் வாயினின்று வர, பரதன் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகிற்று. பேச்சுக் குளறிப் போயிற்று.

''ஐயோ, நான் செத்தேன்!'' என்றான். ''தாங்களே, என்னைச் சந்தேகித்து விட்டீர்களா? பகவானே, வேண்டாம். என்னைப் பெற்றவள்

நான் எங்கேயோ இருந்த சமயத்தில் எனக்குத் தெரியாமலும், என் சம்மதம் கொஞ்சமும் இல்லாமலும் செய்துவிட்டதை என் பேரில் சுமத்தலாகாது. எப்படியாவது ராமனுக்குச் சமாதானம் சொல்லி அயோத்திக்கு அழைத்துப் போய் அவனை அரசனாக்கி அவனுக்கு நான் ஆயுள் முழுவதும் அடிமையாக இருந்து சேவை செய்ய வேண்டும் என்றல்லவா வந்திருக்கிறேன்? ராமன் இருக்குமிடம் தங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அவனைப் பிரார்த்தித்து அழைத்துப் போக வந்திருக்கிறேன். என்னை இப்படிச் சொல்லாதீர்!'' என்று பரதன் அழுதான்.

அதன்மேல் பரத்வாஜர், ''பரதனே, உன் உள்ளத்தின் பான்மை எனக்குத் தெரியும். ரகு வம்சத்தில் பிறந்த நீ வேறு எப்படியிருக்க முடியும்? ராமனிடத்தில் உனக்குள்ள பக்தி எப்போதும் உறுதியாக இருந்து உன் கீர்த்தி வளர்ந்து ஓங்குவதற்காகவே நான் இவ்வாறு கேட்டேன். வருத்தப்பட வேண்டாம். சக்கரவர்த்தித் திருமகன் சித்திரகூட மலையில் இருந்து வருகிறான். இன்று இங்கே தங்கி நாளை மந்திரிகளுடன் அவ்விடம் போவாயாக. இந்த ஆசிரமத்தில் இன்று தங்குவதற்கு ஒப்புக் கொண்டு என்னை மகிழச் செய்வாய்!'' என்றார்.

''சுவாமி, தாங்கள் எனக்குச் செய்த அர்க்கியம், பாத்யம் இவை போதாதா? எல்லா அதிதி பூஜையும் பெற்றுப் பெரிய விருந்தும் உண்ட மாதிரி அடியேன் திருப்தி அடைந்துவிட்டேன்'' என்றான் பரதன்.

வனத்தில் வசிக்கும் ஏழைத் தவசிக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்று அரசகுமாரன் எண்ணுகிறான் என்பதை பரத்வாஜர் தெரிந்து கொண்டு புன்சிரிப்புச் சிரித்து, ''அப்படியில்லை. உன் பக்திக்கும் பதவிக்கும் தக்க உபசாரம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று சொல்லி, ''உன் சேனை பரிவாரம் எல்லாரும் ஏன் தூரத்தில் நின்று விட்டார்கள்? ஏன் நீ அவர்களை அழைத்து வரவில்லை?'' என்று கேட்டார்.

''பரிவாரங்களோடு ரிஷிகளின் ஆசிரமத்தின் அருகில் போகக் கூடாது என்கிற நியமப்படி அவ்வாறு செய்தேன். என்னுடன் வந்திருக்கும் கூட்டம் மிகப் பெரிது. அது இங்கே வந்தால் உங்களுக்குப் பெரிய தொல்லையாகவிருக்கும்'' என்றான் பரதன்.

''அப்படியில்லை. எல்லாரையும் வரச் சொல்லி உத்தரவிடுவாய்!'' என்றார்.

அவ்வாறே பரதனும் தன் பரிவாரத்துக்குச் சொல்லி அனுப்பினான்.

பரத்வாஜர் தம் ஹோம சாலைக்குச் சென்று மூன்று தரம் மந்திரத்தோடு நீர் அருந்தி முகத்தைத் துடைத்துக் கொண்டு, ''ஏ, விசுவகர்மாவே! ஏ, மயனே!'' என்று தேவாசுர சிற்பிகளைக் கூவியழைத்தார். ''பரதனுக்கும் அவன் பரிவாரத்துக்கும் நான் விருந்து செய்ய விரும்புகிறேன். அதற்கு வேண்டியனவெல்லாம் நடைபெற வேண்டும்'' என்றார் பரத்வாஜர்.

யமன், வருணன், குபேரன், அக்னி முதலிய தேவர்களையும் வரவழைத்து, ''உங்கள் உதவியைக் கொண்டு பரதனுக்கு நான் அதிதி பூஜை செய்ய விரும்புகிறேன்'' என்றார்.

அற்புதமான நிகழ்ச்சி நடந்தது. முன் விசுவாமித்திரருக்கு வசிஷ்டர் செய்த விருந்து போல் பரத்வாஜரின் ஆசிரம வனத்தில் நடந்தது. ஆனால் அப்போது விசுவாமித்திரர் நடத்தியது போல் பரத்வாஜர் ஆசிரமத்தில் ஒரு விவகாரமும் கலகமும் நடைபெறவில்லை. எல்லாருக்கும் தகுந்த விடுதிகள், ஸ்னானதி விஷயங்களுக்குச் சௌகரியங்கள், சந்தனம், புஷ்பம், அன்னபானாதிகள், பணியார வகைகள் அப்ஸரஸ்களின் நிருத்தியம், கந்தர்வ சங்கீதம் எல்லாம் நினைக்க முடியாத தெய்வீக ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டு எல்லாரும் மெய்ம்மறந்து அநுபவித்தார்கள். பரதனுடைய சேனையிலுள்ள படை வீரர்கள் மகிழ்ச்சி மயக்கத்தில் 'இனி நாம் தண்டகாரண்யம் போக வேண்டியதில்லை. அயோத்திக்கும் திரும்பப் போவதில்லை. இங்கேயே இருந்து விடுவோம்' என்று எண்ணினார்கள். பரத்வாஜருடைய விருந்து தினந்தோறும் நடக்கும் என்று எண்ணி விட்டார்கள். கூத்தாட்டவையானது ஆட்டம் முடிந்ததும் மறைவது போல், காலையில் எல்லாம் மறைந்து போகும் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.


எல்லையில்லாத சம்பத்தை அடைந்த ஒரு மகாராஜன் மற்றொரு மகாராஜாவுக்கும் அவன் பரிவாரத்துக்கும் தன் ராஜதானியில் நடத்தும் பெரிய விருந்தைப் போல் பரத்வாஜர் வசித்த ஆசிரம வனத்தில் விடுதிகள், வாகனங்கள், பணியாட்கள் உட்பட எல்லாம் ஒரு கணத்தில் உண்டாயின. அனைவரும் எல்லை மீறி அநுபவித்து மெய்ம் மறந்து தூங்கி விட்டார்கள்.

(தொடரும்)

பண்பும் படைப்பாற்றலும்

அறிவாற்றலிலும், நுண்ணிய இலக்கிய உணர்விலும் சிறந்த ஸ்ரீ கெ. சந்திரசேகரன் அவர்களை 1966லிருந்து இரண்டாண்டுகள் 'தாகூர் பேராசிரிய'ராகப் பெற்றதற்காகச் சென்னை சர்வகலாசாலையைப் பாராட்ட வேண்டும். முதலாண்டில் அவர் நிகழ்த்திய பதினொரு சொற்பொழிவுகள் ''பண்பும் படைப்பாற்றலும்'' (Culture and Creativity) என்ற தலைப்பில் புத்தகமாக வெளிவந்துள்ளன. கலை, கலை ஆற்றும் பணி, கலாரசனை, மற்றும் இது குறித்த விஷயங்களை இவ்வுரைகளின் பொருள். தாகூர், அவரது தேசியம், சர்வ தேசியம், அவர் நமது பண்புக்குப் புரிந்த பணி ஆகியன மூன்று உரைகளில் குறிப்பாக விளக்கப்படுகின்றன. மற்றவற்றிலும் அந்தந்த விஷயமாகத் தாகூர் ஆற்றிய பங்கு குறிப்பிடப்படுகிறது. மொத்தத்தில் இவ்வுரைகள் தாகூரின் பல படித்தான மேதாவிலாசத்தின் வெவ்வேறு கோணங்களிலும் செய்த ஆராய்ச்சியாக விளங்குகின்றன. இந்தப் பணிக்கு இந்நூலாசிரியர் முதற் தகுதி வாய்ந்தவர்.

பிரதிபா சக்தி, தீர்க்கதிருஷ்டி, ஆழ்ந்த சிந்தனை இவற்றின் மூலமே கவி வெளிப்படுகிறான் என்பதைக் கவி தர்மம் குறித்த முதல் உரையிலும், ''கவியும் ஞானியும்'' என்ற உரையிலும் விளக்குகிறார். கவிதையில் பௌதிக அதீதமான அற்புத உணர்வுகள் பரிமளிக்கும் சிறந்த பாரம்பரியம் வேத காலத்திலிருந்து நம் நாட்டில் தழைத்து வந்திருப்பதை இன்னொரு சொற்பொழிவில் விளக்குகிறார். சம்ஸ்கிருத இலக்கியத்தில் மட்டுமின்றி மற்ற இந்திய மொழிகளிலும் இவ்வித அற்புத திருஷ்டி வாய்ந்த கவிகள் இருப்பதைத் தெளிவுபடுத்துகிறார். 'சமூகமும் கவிதையும்' என்ற உரையில், இந்தியாவில் உன்னதமான காரியம் பிறப்பதற்குச் சமயமே உந்துதல் அளித்திருக்கிறது என்கிறார். கவிதை என்பது ஆன்மாவின் தூண்டுதலில் பிறப்பதே: இதனால்தான் உலகம் முழுதிலுமே ஆன்மிகமான அடிப்படையில் பிறந்த கவிதைதான் தலைசிறந்ததாக விளங்குகிறது எனக் காட்டுகிறார். திறனாய்வு குறித்த உரையில், நுண்சுவை உணர்வு குன்றிவிட்ட இன்று, கலாரசனைக்குத் தகுந்த வழி காட்ட வேண்டும் எனக் கூறி, விமரிசகனுக்கும் கலைஞனுடைய, படைப்பிலக்கிய கர்த்தனுடைய சிறப்புக்கள் இருத்தல் வேண்டும் என்கிறார். விமரிசகன் அநுதாபத்துடன் ஆய்வுப் பொருளை அணுக வேண்டும். வெறுமே குற்றம் காண்பதோடு நிறுத்திக் கொள்ளக் கூடாது என்கிறார்.



ஸ்ரீ கெ. சந்திரசேகரன்

இந்த உரைகளிலெல்லாம் கீழ்நாட்டு மேல்நாட்டு சிந்தனையாளர்கள் பலப் பலரின் கருத்துக்கள் மேற்கோள்களாகத் தரப்பட்டுள்ளன.

கலையில் மரபின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவது ஓர் உரை. இசை, நடனம், சித்திரம், சிற்பம் ஆகிய எந்தப் படைப்புக் கலையிலுமே உள்ளுணர்ச்சியையும் ஆன்மிக உட்பார்வையையும் இணைத்து வந்திருப்பது இந்திய இனத்தின் மரபாகும் எனக் காட்டுகிறார். இந்தியச் சூழலிலேயே அந்நியராக வளர்ந்து வரும் புதுத் தலைமுறையினரை மீண்டும் இந்தியராக்கும் அளவுக்குப் பாரத பாரம்பரியத்தில் ஆழ்ந்த அக்கறை பிறக்க வேண்டும் என்ற ஆனந்த குமாரஸ்வாமியின் ஆர்வத்தை இங்கு ஆசிரியர் பிரதிபலிக்கிறார். ''இரு ஞானிகள்: தாகூரும் ஆனந்த குமாரஸ்வாமியும்'' என்ற உரையில் குறிப்பாகப் பின்னவரைப் பற்றி மதிப்பு மிகுந்த பல உண்மைகள் வெளியாகின்றன. தாகூரின் இலக்கியப் பணியைப் பற்றிக் கூறித் தலைக் கட்டுரையில் ஆசிரியர், ''சமீப காலத்தில் அவரது கவித்துவத்தின் புதுமைக்கு இணை காண முடியாது: வால்மீகி வியாஸரின் இதிகாச காலம் தவிர வேறு எக்காலத்திலுமே அவரது பரந்துவிட்டிருந்த கற்பனைக்கு ஈடு காண முடியாது'' என்கிறார்.

தாகூரின் சுதேசியம், சர்வ தேசியம் இவற்றைப் பற்றிச் சொல்கையில் அவரது விசுவம் தழுவிய மனிதாபிமானத்தை வெளிப்படுத்துகிறார். ஒத்துழையாமை, அந்நியத் துணி எரிப்பு இவற்றில் தாகூரும் காந்திஜியும் தீவிரக் கருத்து வேற்றுமை கொண்டிருந்தனர். எனினும், இருவரும் மனிதாபிமானத்தை மதமாகக் கொண்டவரே. ''தாகூர் மனித குலம் என்பதன் மூலம் இந்தியாவை அணுகினார்; காந்தி இந்தியாவின் மூலம் மனித குலத்தை அணுகினார்.'' இருவரும் பரஸ்பரம் மரியாதையும் அன்பும் கொண்டிருந்தனர்.

''பண்பாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி'' என்ற உரை மிகுந்த சிந்தனை சக்தியில் பிறந்தது ; பண்பாடு என்பது என்ன என்று தெளிவாகப் பகுத்து விளக்கி, இன்றைய இந்தியாவில் அதற்கேற்பட்டுள்ள நெருக்கடியையும் விவாதிக்கிறது.

ராஜாஜிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்நூலின் பயனை உயர்த்துவதாக உள்ளது இதில் உபயோகமாகியுள்ள புத்தகங்களின் அட்டவணையும், பொருட்களின் குறிப்பு அகராதியும். எல்லா நூலகங்களிலும் — குறிப்பாகக் கல்வி நிலைய நூலகங்களில் — இடம் பெறவேண்டிய நூல். — **கே. சம்பத்கிரி ராவ்**

கிடைக்குமிடம் : மாக்மில்லன் கம்பெனி, சென்னை - 2; விலை ரூ. 22 - 50.


சிலையைத் தேடி.. கதை: வாண்டுமாமா
9
சித்திரம்: ரமணி..
நீலாவும் ரவியும் இடிபாடுகளிடையே பொம்மையைத் தேடலானார்கள்..
ரவிக் கண்ணா! ஜாக்கிரதை ஏதாவது கல் சரிந்து மேலே விழப் போகிறது.
பொம்மையை எப்படியும் கண்டு பிடித்து விடலாம் அக்கா.
அதோ.. அதோ.. உன் அழகுப் பொம்மை..
ஆமாண்டா! அதிஷ்டம்தான்.. ஆனால் அங்கே நம்மால போக முடியுமா? நாம் வைக்கும் இடமெல்லாம் கல்லும் மரமும் தடதடத்துச் சரியுதே...
இதே வேளையில் வீ வருகிறான்..
அவர்களேதான், சந்தேகமே இல்லை! இனித் தப்ப முடியாது. நாம் அவசரப் பட வேண்டாம்.
ரவி! அவன்.. அந்த மஞ்சக் கோட்டுக் காரன், இரண்டு பேரோடு இங்கு வருகிறான்.
ரவிக்கும் நீலாவுக்கும் எங்கிருந்துதான் அப்படியொரு பலமும் துணிவும் வந்ததோ? பொம்மையை நோக்கிப் பாய்ந்தார்கள். உருண்டு, புரண்டு, சரிந்து விழுந்து பொம்மையைக் கைப்பற்றிய அதே நேரத்தில், இந்த அதிர்ச்சி தாங்காதது போல் கலகலத்து நின்ற மேலோர் பகுதி நொறுங்கிச் சரிந்தது..
பொல பொலவென்று இடிந்து ஒருபுறம் மண் மூடினாலும்....
ரவி, அதோ பார்! இடிந்து விழுந்த சுவருக்குப் பின்னால்.. அதென்ன? ரகசியப் பாதையா? நாம் தப்பிச் செல்ல ஒரே மார்க்கம்.
உண்மைதான் அக்கா.. ஆனால் கரு கும்மென்று இருட்டாயிருக்கிறதே...


படிகளைப் பார்த்து இறங்கு ரவி. ஜாக்கிரதை.
ஜீயும் சிப்பாய்களும் இடிபாடுகளில் புகுந்து தேடினார்கள்..
கிடைத்தார்களா?
காணவேயில்லை. எப்படியோ மாயமாக மறைந்து விட்டார்கள்..!
ஐயா, இங்கே ஏதோ சுரங்கப் பாதைபோல வழிபோகிறது..
சுரங்கப் பாதையா? சீக்கிரம் அதில் இறங்கித் தேடுங்கள். விடுதலைப் படையினருக்கு ஏதோ தகவலை கொண்டு போகிறார்கள் அவர்கள். நாம் அதைத் தடுத்துக் கைப்பற்ற வேண்டும்.
சுரங்கப் பாதையில் நீலாவும் ரவியும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.
ஐயையோ! சுரங்கப் பாதை இடிந்து மண் மூடிக் கிடக்கிறது. இப்போது நாம் என்ன செய்வது?
அவர்கள் வேறு நம்மைப் பின் தொடர்ந்து வருகிறார்கள். அதோ.. கேட்டாயா காலடிச் சத்தத்தை..?

தொடரும்...

பக்கத்து வீட்டுப் பிரமுகர்



(பத்திரிகைத் தொழிலில் பல நாட்கள் ஈடுபட்டிருந்து இப்போது திரைப் படத் துறையில் உதவி இயக்குனராகப் பணி யாற்றுபவர் திரு ப. புகழேந்தி. கோபால புரத்தில் முதலமைச்சர் திரு கருணாநிதி அவர்கள் வீட்டுக்கு அருகில் வசிக்கும் இவர் முதலமைச்சரைப்பற்றிக் கூறுகிறார்.)

நான் இந்தக் கோபாலபுரம் பகுதிக்கு இடம் பெயர்ந்து வந்து சுமார் ஐந்து வருடங்களாகின் றன. அதற்கு முன்பு பல ஆண்டுகளாகவே மாண்பு மிக்க முதல் அமைச்சர் கருணாநிதி அவர்கள் இந்தப் பகுதியில் வசித்து வருகிறார். நான் இங்கு வந்த புதிதில் அவர் எம். எல். ஏ. தான்.

நான் இரவு நேரங்களில் வெகு நேரம் கண் விழித்து எழுதிக் கொண்டோ படித்துக் கொண்டோ இருப்பவன். அநேகமாக பல இரவு களில் நள்ளிரவு நேரத்துக்குப் பிறகு அவர் வீட்டு 'காலிங் பெல்' ஒலிக்கும் ஓசை என் செவிகளில் விழும். அதைத் தொடர்ந்து சன்னமாக ''தயாளு! தயாளு!'' என்ற குரல் ஒலிக்கும். அதைத் தொடர்ந்து கதவு திறக்கப்படும் அரவமும் கேட்கும்.

இப்போதெல்லாம் அந்த ஒலி கேட்ப தில்லை. இவர் மந்திரியான பிறகு இவர் வீட்டுக் கதவு எப்பொழுதும் திறந்து தானிருக்கிறது. காவலர்கள் நின்று கொண்டிருப்பதால். அவர் வந்து இறங் கும் கார் ஓசை கேட்கிறது. கனிவு கலந்த சோர்வுடன் மனைவியின் பெய ரைச் சொல்லிக் கூப்பிடும் குரல் கேட்ப தில்லை.

ஒரு சந்தர்ப்பத்தில் என் குழந்தை கைப்பிடிச் சுவரிலிருந்து கீழே விழுந்து விட்டது. சற்றுப் பலமான அடி. ஆஸ் பத்திரிக்குப் போய் தையல் போட வேண்டிய நிலை. இதைக் கருணாநிதி கவனித்து விட்டார். உடனே தம் டிரைவரைக் கூப்பிட்டுக் காரில் என் குழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பணித்து விட்டார். அவருக்கு எத்தனை அவசர அலுவல்கள் இருந் தனவோ?

இதே போல மற்றொரு சந்தர்ப்பத் திலும் அவர் உதவினார். நள்ளிரவு வேளை. என் மனைவிக்குப் பிரசவ வேதனை கண்டு விட்டது. மருத்துவ மனைக்குப் போயாக வேண்டும். சட் டென்று — டாக்ஸி பிடிக்க முடியாத நேரம். எங்கள் வீட்டில் நிலவிய பதட்ட நிலை அவருக்கு எப்படியோ தெரிந்து விட்டது. தம் காரை எடுத்துப் போகச் சொல்லி விட்டார். அத்துடன் நிற்க வில்லை. டிரைவரிடம் ''இவங்களை ஆஸ் பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்து கொஞ்ச நேரம் காத்திருந்து என்ன குழந்தை பிறந்தது என்கிற தகவலை யும் தெரிஞ்சுக்கிட்டு வந்து சொல்லு'' என்றும் சொல்லி அனுப்பினார். மனி தாபிமானம் நிறைந்த மனிதர்.

இந்த நன்றிக் கடனை ஓரளவு தீர்க்க எனக்கும் ஒரு வாய்ப்புக் கிட்டியது. இந்த வாய்ப்பு அவருடைய கடமை உணர்ச்சியைத் தெரிந்து கொள்ளவும் உதவியது.

அவர் மந்திரி பதவி ஏற்று, பொது மராமத்து இலாகாவை நிர்வகித்து வந்த காலம். ஏற்கனவே கட்சிப் பிரமுகர் என்ற வகையில் இவரைச் சந்திக்க வரும் நண்பர்கள் ஏராளம். இவர் மந்திரி பதவியையும் மேற்கொண்ட பிறகு இவர் ஊரில் இருக்கும் நாட்களில் இவர் வீடு திருவிழா நடக்கும் இடம் போலவே இருக்கும். வந்து போகின்ற வர்கள் குறைகளைக் கேட்டுக்கொண்டே இருந்தால், இவர் பார்வைக்காகவும் உத்திரவுகளுக்காகவும் காத்திருக்கும் ஃபைல்கள் என்னாவது? அதற்கு ஒரு வழி கண்டுபிடித்தார்.

தம் சொந்தச் செலவில் நகரில் உள்ள ஒரு ஹோட்டலில் அறை எடுத்துக் கொண்டார். அந்த ஹோட்டல் எங்

கருணாநிதி





புகழேந்தி

இருக்கிறது என்று இவருடைய ஆப்த நண்பர்களுக்குக் கூடத் தெரியாது. அதிகாலையிலேயே ஃபைல்களுடன் அங்கே போய் உட்கார்ந்து விடுவார். அவைகளை ஆற அமரப் படித்துப் பார்த்து உத்தரவுகள் போட்டு விட்டுப் பிறகுதான் திரும்புவார்.

ஒரு நாள் அதிகாலை நேரம். அவருடைய கார் டிரைவர் குறிப்பிட்ட நேரத்தில் வரவில்லை. ஏதாவது டாக்ஸி கிடைக்குமா என்று பார்த்து வரச் சொன்னார். அந்த நேரத்தில் என்னை அழைத்துப் போகத் திரைப் பட நிறுவனம் ஒன்றிலிருந்து கார் வந்திருந்தது. அந்தக் காரை உபயோகப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டேன். அவரும் ஒப்புக் கொண்டார்.

குறிப்பிட்ட ஓட்டலில் போய் இறங்கிக் கொண்டதும் டிரைவரிடம் என்ன சொல்லி அனுப்பினார் தெரியுமா? ''நண்பர் புகழேந்தியிடம் கூட எந்த ஓட்டலில் என்னை இறக்கி விட்டேன் என்று சொல்ல வேண்டாம்'' என்றாராம். தம் இலாகா வேலைகளை நிம்மதியாகச் செய்து முடிக்க வேண்டுமே என்ற அக்கறை. அங்கேயும் யாரும் பேட்டி காண வந்து இடையூறு செய்யக் கூடாதே என்ற அச்சம்!

கலகலப்பான மனிதர் கருணாநிதி அவர்கள். நகைச்சுவை உணர்ச்சி நிறைய உள்ளவர். அவருடைய சம்பாஷணைகளில் சிலேடை நயம் நிறைந்த நகைச்சுவை ததும்பி நிற்கும். எதிர்பாராமல் வேடிக்கைத் துணுக்கைச் சொல்லி கூட இருப்பவர்களைச் சிரிப்பில் ஆழ்த்துவார்.

திரு ஏ. எல். சீனிவாசன் பரணி ஸ்டுடியோவைக் குத்தகைக்கு எடுத்த புதிது. அதற்கு முன் பல நாட்கள், சீனிவாசன் கருணாநிதி அவர்களைச் சந்திக்கவில்லை. அவரைச் சந்தித்தவுடன், ''என்னங்க! உங்களைப் பார்க்கவே முடியவில்லையே!'' என்றார் சீனிவாசன்.

''நான் என்ன **பரணி**யிலா உட்கார்ந்திருக்கிறேன்?'' என்று பளிச்சென்று சிலேடையாகப் பதில் வந்தது.

முன்பெல்லாம் நாங்கள் மாலை வேளைகளில் சந்தித்துப் பேசிக் கொண்டிருப்பது உண்டு. இப்போது அதற்கெல்லாம் அவகாசமே கிடையாது. எப்போது வீட்டுக்கு வருகிறார், எப்போது வெளியே போகிறார் என்பதே தெரிவதில்லை. ஓய்வு இல்லாமல் உழைக்கும் ஒரு முழு நேரத் தொண்டர். எப்போதுதான் தூங்குவாரோ தெரியாது.

பிறரைப் பற்றிக் குறை கூறி இவரிடம் கலபமாகப் பேசிவிட முடியாது. உடனடியாக அந்த நபருடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு உண்மையை விசாரித்துத் தெரிந்துகொண்டு விடுவார். ஆகையால் புறம் கூறிப் பேசும் தன்மை உள்ளவர்கள் இவரை அணுகத் தயங்குவார்கள். மேலும் பெரிய மனிதர்கள் சொல்வதில்தான் நியாயமும் நேர்மையும் இருக்கும் என்று நம்புபவரல்ல இவர். ஒரு சாதாரணக் கட்சி ஊழியரிடமும் சத்தியமும் நேர்மையும் உண்டு என்ற அடிப்படையில் அவர் சொல்லுவதையும் கவனமாகக் கேட்டு ஆவன செய்யத் தயங்க மாட்டார்.

ஒரு சமயம் நான் நடத்தி வந்த பத்திரிகையின் பொங்கல் இதழுக்காக இவரிடம் ஒரு கட்டுரை கேட்டிருந்தேன். தருவதாக ஒப்புக் கொண்டார். ஆனால் கடைசி நேரம் வரை கட்டுரை கைக்குக் கிடைக்கவில்லை. அவருக்கு எத்தனையோ அலுவல்கள், பிரயாணங்கள். அவரை நினைவூட்டித் தொந்திரவு செய்ய நான் விரும்பவில்லை. இதழை, இருக்கும் கட்டுரைகளைக் கொண்டு முடித்து விட வேண்டியதுதான் என்று எண்ணி அச்சகத்துக்குப் போனேன். கருணாநிதி அவர்களின் கட்டுரை அங்கே காத்திருந்தது! எப்படியோ நினைவில் கொண்டு, காலதாமதத்தைச் சரிக்கட்டக் கட்டுரையை அச்சகத்துக்கே அனுப்பி விருந்தார். பொங்கல் இதழ் அவர் கட்டுரையைத் தாங்கித்தான் வெளிவந்தது.

எத்தனைக்கெத்தனைக் கண்டிப்புக்காரரோ அத்தனைக்கத்தனை உணர்ச்சி வசப்படக்கூடியவரும் கூட. ஒரு சந்தர்ப்பத்தில் அவருடைய மகனை வெகுவாகக் கண்டித்துக் கடிந்து கொண்டு விட்டார். பையன் முகத்தில் எந்த வித மாறுதலுமில்லை. அவன் போய்விட்டான். அவன் போன பிறகு இவருடைய கண்கள் குளமாயின. அந்தக் குளம் அருவியாகவும் மாறியது! வெகு நேரம் கழித்துத்தான் துடைத்துக் கொண்டார். ஒரு பிஞ்சு உள்ளத்தை அதிகமாக நோகச் செய்துவிட்டோமே என்று பச்சாதாபப்பட்டார்.

அவர் ஒரு நாள் காரில் வந்து கொண்டிருக்கும்போது என் குழந்தை ஒன்று நடுத் தெருவில் நின்று விளையாடிக் கொண்டிருந்ததைக் கவனித்து விட்டார். காரை நிறுத்திக் குழந்தையை வீட்டுக்கு அனுப்பச் செய்தார். அத்தோடு நிற்கவில்லை. அன்று மாலையில் என்னைச் சந்தித்தபோது குழந்தைகளை நடுத் தெருவில் விளையாட அனுமதிக்கக் கூடாது என்பது பற்றியும் குறிப்பிட்டார்.

பெரிய பெரிய அரசியல் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், பிரமுகர்கள் எல்லாருமே அடிக்கடி பக்கத்து வீட்டுக்கு வருகிறார்கள். சாமானிய மக்களும் ஏராளமாக வருகிறார்கள். தமக்கிருக்கும் அலுவல்களை உணர்ந்து, சந்திக்க வருபவர்களிடம் கொஞ்சமாகப் பேசினாலும் இனிய சொற்களுக்குப் பஞ்சமில்லாமல் பேசும் பழக்கமுள்ளவர்.

பேட்டி : **கோமதிஸ்வாமிநாதன்**

சார்லஸ் கோபலாண்ட் என்ற பேராசிரியரிடம் ஒரு மாணவன் கேட்டான்:


''சம்பாஷணை செய்யும் கலையைப் பெற நான் ஏதாவது கற்றுக்கொள்ள வேண்டுமா?''

''ஆமாம்; ஒன்று இருக்கிறது. நீ கவனித்தால் உனக்குச் சொல்கிறேன்.''

பல நிமிடங்கள் மௌனம் நிலவியது. மாணவன் கேட்டான்: ''நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன், சார்!''

பேராசிரியர் உடனே, ''ஆம்! அதுதான் நீ கற்றுக் கொண்டே வருகிறாயே!'' என்றார்.

காரனெட் - மீரா கோபாலன்



✿ மைசூரில் பல ஊர்களிலும் ஆப்பிள் பழம் கிலோ இவ்வளவு என்று நிறுத்தே விற்கப்படுகிறது.

✿ பெங்களூரில் சில தியேட்டர்களில் தினமும் காலைக் காட்சி உண்டு. மாலையில் காட்டப்படும் படம் அன்று. வேறு. பல் வேறு தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கான பேர் ஷிப்ட் முறையில் வேலை செய்ய வேண்டியிருப்பதால், காலை நேரம் வீட்டில் இருப்போருக்கு இந்த வசதி.

மைசூர் மாநிலத்தில்...

✿ மைசூரிலிருந்து ஹாஸனுக்குப் போகும் வழியில் ஓர் ஹோட்டலில் கை கழுவ வாஷ்பேஸின் இல்லை. ''தட்டிலேயே கழுவிக் கொள்ளுங்கள்'' என்றார் ஹோட்டல்காரர்.

✿ ஹாஸன் பஸ் நிலையத்துப் புதிய ஹோட்டலில், சாப்பிட்ட பிறகு பில்லை ஒரு தட்டிலே கொண்டு வைத்தார் சர்வர். கூடவே, உள்ளங்கை அகலம் அழகாய்ப் பழைய தினசரித் தாள் இரண்டையும் வைத்தார். எதற்கு இது எனப் புரியாமல் விழித்த போது, கையைத் துடைத்துக் கொள்ளத்தான் என்று செய்து காட்டி விளக்கினார்.

✿ மைசூர் மகாராஜா அரண்மனைக்குத் தெற்கேயுள்ள கட்டடமும் ஓர் அரண்மனைபோலவே இருக்கிறது. விசாரித்தால் இது, ''அரண்மனை அலுவலகம்'' என்று தெரிகிறது.

✿ அரை குறையாக இரண்டொரு கன்னடச் சொற்களைக் கற்றுக் கொண்டதைக் காட்ட ஆசைப்பட்டால் என்ன ஆகும்? சாப்பாட்டில் இரண்டு சப்பாத்தி போட வந்த ஹூப்ளி ஹோட்டலில், ''ஒன்றே போதும்'' என்பதற்கு 'ஒந்து பேகு' என்றதால், மற்றும் ஒன்று, மூன்றாவதாகத் தட்டில் விழுந்தது !

✿ ஹூப்ளி காமத் ஹோட்டல் அறைகளில் மெழுகு வர்த்தி கொடுத்து வைக்கிறார்கள். மின்சாரக் கோளாறு நேர்ந்தால் உதவிக்கொள்ள.

✿ மைசூர் அரசின் தூரப் பயண பஸ்களில் நின்று பயணம் செய்வது சகஜம். பத்துப் பேர் நிற்கலாம் என்று அறிவிப்புக் கூறுகிறது. ஆனால் கண்டக்டர் தாராள மனத்துடன் இருபத்தைந்து பேரைக் கூட ஏற்றிக் கொள்கிறார்.

முந்நூறு மைல் தூர, பன்னிரண்டு மணிப் பயணமான மைசூர் — ஹூப்ளி பஸ்ஸிலும் நிற்பவர் உள்ளனர். இருபது இருபத்திரண்டு வயதிருக்கும். கைக் குழந்தையும் நிறை வயிறுமாய் இடை வழியில் ஏறி நின்று வந்த ஒரு பெண்ணுக்குத் தம் இடமளித்தார் ஒரு கல்லூரி மாணவர். கலகலப்பாய்ச் சிரித்துப் பழகிய பெண், அந்த மாணவரையும் உட்காரச் செய்தாள். இருவர் இடத்தில் மூவராய் அமர்ந்தனர்.

✿ பேலூர் கோவில் தூண் உச்சியில் உள்ள 42 'மதனக' சுந்தரிகளின் சிற்பங்கள் புகழ் பெற்றவை. இந்த அழகிய கன்னி ஒவ்வொருவரையும் பற்றி ஒரு தனிக் கவிதை இயற்றி, புகைப்படங்களுடன் '' அந்தப்புர கீதம் '' என்ற நூலை வெளியிட்டிருக்கிறார் கன்னட ஆஸ்தான கவி டி. வி. குண்டப்பா.

✿ ஹூப்ளிக்கும் தார்வாருக்கும் இடைவெளி 12 மைல். இரண்டும் முக்கிய நகரங்கள். தினசரி 120 டிரிப் பஸ் போகின்றன. 120 டிரிப் வருகின்றன. இருந்தும், இரண்டு நிலையங்களிலும் எப்போதும் நீண்ட கியூ.

✿ ஹூப்ளி நிலையத்திலிருந்து ஒரு பஸ் புறப்பட்டதோ இல்லையோ, முன் வரிசையில் இருந்த ஐந்தாறு குடியானவப் பெண்டிர் கோரஸ் குரலில் ஏதோ கோஷித்தனர். திருப்பதிக்குப் போவோர், 'கோவிந்தா, கோவிந்தா' என்று ஒலிப்பது போல இருந்தது.

விசாரித்ததில், அப்படிப்பட்ட ஒரு பிரார்த்தனைப் பயணமாகத்தான், பெல்காம் மாவட்டத்தில் உள்ள எல்லம்மன் கோவிலுக்கு அவர்கள் போவது தெரிந்தது.


❁ தார்வாட் பல்கலைக் கழகத்தில் அழகிய பெரிய நீச்சல் குளம் கட்டி விருக்கிறார்கள். ஆனால் விளையாட்டு மைதானம் என்று தனியே இல்லை.

❁ தார்வாட் பல்கலைக் கழகக் கட்டிடம் நகருக்கு மூன்று மைல் தள்ளி, பரந்த வெளியில் ஒரு மேட்டில் அமைந்திருக்கிறது. அதில் நாற்பதடி உயரத்தில் உள்ள ஒரு கடிகாரம் அரை மணிக்கு ஒரு முறை ஒலிக்கிறது. அந்த வெண்கல நாதம் ஓய்ந்த பிறகு அரை நிமிஷ நேரம் 'ஓம்ம்ம்' என ரீங்கார மிடுவதைக் கேட்பது ஒரு தனி அனுபவம்.

❁ ஹூப்ளி பத்திரிகைக் கடையில் ''பெங்களூர் எக்ஸ்பிரஸ் வேண்டுமா, பம்பாய் எக்ஸ்பிரஸ் வேண்டுமா?'' என்று விசாரிக்கிறார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸின் இரண்டு பதிப்பும் உள்ளூர் கன்னடக்காரர்களிடையும் மராத்தியர்களிடையேயும் விற்பனையாகிறது.

❁ வடக்கு மைசூர் ஓட்டல்களில் சாப்பிடும் போது நாலைந்து டம்ளருக்குக் குறையாமல் எல்லாரும் நீர் அருந்துகிறார்கள். காரணம், காரம்.

❁ கதக்போகும் பாசஞ்சர். வறுத்த மசாலா மணிலாக்கொட்டை, 'ஹாத் ஹாத் பைசா' என்று விற்பவன் வந்தான். கூலி வேலை செய்யும் தன் தாயுடன் பயணம் செய்த சிறு பெண், அதை வாங்க ஆசைப்பட்டாள். கையிலோ மிட்டாய் வாங்கிய மிச்சம் ஐந்து காசுதான் இருந்தது. மணிலாக் கொட்டைக் காரன்பொட்டலத்தைக்கொடுத்துவிட்டான். அப்போது பார்த்து தாய், ''சில்லறை இல்லையே'' என்றாள். குழந்தை பரிதாபமாக ''திருப்பிக் கொடுத்துவிடட்டுமா?'' என்று பொட்டலத்தை நீட்டினாள். நீண்ட நேரம் இடுப்பு முடிச்சுக்களில் தேடி எட்டணா நாணயம் ஒன்றை எடுத்தாள் அன்னை. அப்போது மசாலாக்காரனிடம் சில்லறை இருக்கவில்லை! குழந்தையின் முகம் ரொம்ப வாடிவிட்ட தருணத்தில், ''பரவாயில்லை. ஐந்து பைசாவே போதும்'' என்று குழந்தையிடமிருந்த காசைப் பெற்றுக் கொண்டு நடந்






தான் அந்தச் சில்லறை வியாபாரி — பெருந்தன்மையுடன்.

❁ பெல்லாரி ரயில் நிலைய முகப்பில் அழகு செய்யப் படுகிறது. இது ரயில் நிலையம்தானா என்ற சந்தேகம் இனி யாருக்குமே எழாது. ரயிலடிக்கு மூன்று கஜ தூரத்தில், ஒரு குட்டித் தோட்டப் பரப்பில் ஸ்லீப்பரும் தண்டவாளமும் பொருத்தி, அதில் ஒரு முழு நிஜ என்ஜினையே வைத்திருக்கிறார்கள். அந்த என்ஜின் வயது 100 வருஷம்.

❁ சமூக அரசியல் விஷயங்களைச் சாடு சாடு என்று—சாடி, சிரிக்க வைத்துச் சிந்திக்கச் செய்பவர் பூசி. (பூ என்பதைக் கன்னடத்திலும் சி என்பதை ஆங்கிலத்தில் Chi என்றும் கையெழுத்திடுபவர்.) முன்னாள் போலீஸ் இலாகா அலுவலர். பெயர் ஆர். பீம்ஸேன் ராவ். தினசரி ஒரு பத்திரிகையிலும், மற்றும் வார, மாதப் பத்திரிகைகளிலும் இவரது கட்டுரைத் தொடர்கள் வருகின்றன. இவை, புத்தகங்களாகவும் நிறைய விற்பனையாகின்றனவாம். இங்கே சோ; அங்கே சி!

❁ சுதந்திர தினத்துக்கும் குடியரசு தினத்துக்கும் அடுத்தபடி சென்ற பதின்மூன்று ஆண்டுகளாக மைசூர் மாநிலத்தார் கொண்டாடுவது நவம்பர் முதல் தேதியை. ராஜ்யப் புனரமைப்பு நேர்ந்த அந்த நாளை ராஜ்யோத்ஸவ நாள் என்று கலை — இலக்கிய விழாவாகக் கொண்டாடுகிறார்கள். இந்த ஆண்டு இந்நாளில் திருமதி ஜெயதேவி தாயி லிகடெ என்பவர் இயற்றிய ''ஸ்ரீ சித்தராம புராண'' என்னும் பெருநூலை யானை மீது ஏற்றி, நீபமேந்திய மகளிர் முன் செல்ல, ஹூப்ளியின் முக்கிய வீதிகளில் பவனி விட்டுக் கொண்டாடினர்.

❁ பல்லாவரம் மலையைக் குடைந்து, தகர்த்து சல்லிக் கருங்கல் எடுக்கிறார்கள். பெல்லாரி ஜங்ஷன் ரயிலடியின் எதற்கே ஒரு குளம். கருங்கற் பாறையில் ஒரு கலை போலும். அந்தக் குளத்தைச் சுற்றி வெட்டி இன்னும் ஆழமாக்குவது போல கருங்கற் சல்லி எடுக்கப் படுகிறது. சுத்தியும் உளியும் வெடியும் சத்தமுமாக ஓயாத இயக்கம். ஏதோ திருப்பணி போல.

பயணம்: டி. எஸ். வி.

ரகுபதி ராகவ மகாத்மா காந்தி

தமிழாக்கம்:
ராஜாஜி



8

என்னைப் பொறுத்த மட்டில் கடவுள் என்பதும் சத்தியம், அன்பு என்பதும் ஒன்றே. கடவுளே ஆசாரம். கடவுளே நன்னெறி. கடவுளே சீலம். கடவுளே அச்சம் இன்மை. ஒளியைத் தருபவனும், உயிருக்கு மூலமும் கடவுளே. இவை யெல்லாம் உண்மையாயினும் இவை மட்டுமே கடவுள் அல்ல. இவற்றிற்கு அப்பால் நிற்பவன் ஆண்டவன். நாஸ்திகனுடைய நாஸ்திகமும் அவனே. அவனுடைய எல்லையற்ற காருண்யமே நாஸ்திகனையும் 'இரு' என்று அனுமதி தருகிறது. அவன் நம் உள்ளங்களைச் சோதித்து உள்ளதை உள்ளபடி அறிகிறான். வாக்கும் மனமும் தாண்டி அப்பால் நிற்கிறான். அதாவது அவன் தன்மையைக் கருத்தில் கொள்வதும் சொல்லால் விளக்குவதும் முடியாத காரியம்.

நம்மை நாம் அறிவதில்லை. நம் உள்ளங்கள் நமக்குப் பூரணமாகத் தெரிவதில்லை. அவன்தான் நம் உள்ளங்களை அறிவான். நம்மைப் பற்றி நாம் சொல்வதை அவன் ஒப்புக் கொள்ள மாட்டான். நம்மைப் பற்றியும் நம் எண்ணங்களைப் பற்றியும் பேசும்பொழுது நாம் உண்மை பேசுவதில்லை. உண்மையை மாற்றிச் சொல்லுகிறோம். அவனே உண்மையைக் கண்டு கொள்கிறான்.

ஆண்டவன் கல்யாண குணங்கள் கொண்ட புருஷோத்தமன் ஆவான், அத்தகைய கடவுளை வேண்டுவோருக்கு. அதை வேண்டாத ஞானிகளுக்கு அவ்யக்தப் பொருளாக நிற்பான். கையால் தொட்டு வழிபட வேண்டும் என்று ஆசைப்படும் மக்களுக்கு அழகிய மூர்த்தியும் ஆவான். ஞானிகளுக்குச் சுத்த ஸத்வமாக அருவமாய் நிற்பான். அவரவர்களது வழிபாட்டு அவசியத்தின்படி மூர்த்தியாகவோ, அருவமாகவோ விளங்குவான். அவரவருடைய அறிவின்படி ரூபமும் அரூபமும் கொள்வான். நம் உள்ளத்தில் நமக்குள் கோவில் இருக்கிறான். நமக்கு அப்பாலும் வெளியிலும் இருக்கிறான்.


காங்கிரஸ் நடவடிக்கைகளிலிருந்து கடவுள் என்ற சொல்லை நீக்கித் தள்ளிவிடலாம். ஆனால் சொல்லை அப்புறப்படுத்த முடியும். பொருளை அப்புறப்படுத்திவிட முடியாது. ''உறுதி மொழி'' என்றால் என்ன, ''கடவுள் சாட்சியாக'' என்றால் என்ன? இரண்டும் ஒன்றே இல்லையாயின், உறுதிமொழி என்பதில் பொருளில்லை. நான்கு எழுத்துக்கள் கொண்ட ''கடவுள்'' என்பதையே 'மனச்சாட்சி' என்று நீட்டியும் பொழிப்புரையாகவும் சொல்வது.

கடவுள் பேரில் சிலர் அநீதியும் அக்கிரமமும் கொடூரமும் செய்வதினால், அவனில்லாமல் போக மாட்டான். அவனை வைத்துச் செய்யப்படும் அக்கிரமங்களை அவன் பொறுத்து வருகிறான். பொறுத்தாலும் அவனை அலட்சியம் செய்ய முடியாது. மகா பயங்கரன். கடன்களை யெல்லாம் ஒன்று விடாமல் வசூலிப்பான் அவன். நிர்த்தாட்சிண்யமாக வசூலிப்பான். வட்டிக்குக் கடன் கொடுக்கிற எவனும் அவனைப் போல் கண்டிப்புக்காரன் இல்லை. மனிதர்களோ மிருகங்களோ மற்றப் பிராணிகளிடம் நாம் எந்த மாதிரி நடந்து கொள்ளுகிறோமோ அவ்வித அநுபவத்தையே நாமும் பெறுவோம். நியதியை அறியாமல் செய்து விட்டேன் என்றால் அது அவனிடம் ஒரு சாக்காகச் செல்லாது. ஆயினும் அவனுடைய கருணைக்கு எல்லை இல்லை. குற்றத்தை உணர்ந்து மனம் வருந்துவதற்கு எப்போதும் இடம் தருவான். காலம் கடந்து மீறிவிட்டது என்பதில்லை. உலகத்தில் அவனைப் போன்ற ஜனநாயகக் கொள்கைக்காரன் இல்லை. நன்மையோ தீமையோ எது வேண்டுமானாலும் செய் என்று நம் ஒவ்வொருவருக்கும் பூரண சுதந்திரம் தந்திருக்கிறான். ஆயினும் அவனைப் போன்ற கொடுமைக்காரனும் இல்லை. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமல் செய்து விடுகிறான். ஆத்ம சுதந்திரம் என்று கொடுத்ததாகக் காட்டித் தன் விளையாட்டைத்தான் காட்டுகிறான். நம்முடைய சாஸ்திரங்களில் அவனுடைய காரியங்களை அவனுடைய விளையாட்டு என்றுதான் சொல்வார்கள். லீலை என்றோ மாயை என்றோ சொல்லப்படுவது இதுவே. நாம் இருப்பது என்பதே ஒரு இல்லாத விஷயம். இருப்பது அவன் ஒருவனே. கடவுள் ஒன்றே மெய்ப்பொருள். நாமும் இருக்க வேண்டும் என்று விரும்பினோமானால் அவனைத் துதித்துக் கொண்டிருக்க வேண்டும். விடாமல் துதித்துக் கொண்டும், விடாமல் அவன் அடிமைகளாக நடந்து கொள்ள வேண்டும். அவன் கருத்துக்கு நாம் கருவிகளாக வாழ வேண்டும். அவனுடைய வேணுகானத்துக்கு நாம் ஆட வேண்டும். அப்போது எல்லாமே நலமாக முடியும். [யங் இந்தியா 5-3-25]


புதியது !
மொரமொரப்பான,
சுவையான உப்பு பிஸ்கட்
பிரிட்டானியா
சக்ரா
ஒன்றுக்கு பின் ஒன்று
மேலும் ஒன்று. மறுபடி.
மற்றொன்று
முழுசாகக் கடித்துச் சுவைக்க உப்பு பிஸ்கட்தான் என்ன அருமை ! வாய் கொள்ளும் அளவுக்கும் மேலே சுவைக்கத்தூண்டும் பிரிட்டானியா சக்ரா பிஸ்கட்டுகள். மிகவும் இலேசானவை. வாயிலிட்டவுன் கரையக் கூடியவை. மொரமொரப்பானவை. சுவையானவை. கை நிறைய, தட்டு நிறைய சுவைத்தாலும் திகட்டாது.
பிரிட்டானியா என்றாலே உயர்தரம்.

இருந்த இடத்தை விட்டு அசையாமல் நாள் முழுதும் ஓய்ச்சலின்றிப் பக்கம் பக்கமாக 'டைப்' அடித்துத் தள்ள வேண்டிய நிலையில் பல தட்டெழுத்தர்கள் உள்ளனர். இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர் சிலருக்குக் கைகளில் வலியேற்படுவதுண்டு. விரல் நுனி, மணிக்கட்டு, புஜங்கள் ஆகிய இடங்களில் வலி தோன்றும். காலத்தில் சிகிச்சை தொடங்கா விட்டால், நாளடைவில் வலி, தோள் பட்டைக்கும் கழுத்துக்கும்கூடப் பரவி விடும். ஆரம்பத்தில், சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டவுடன் வலி மறைந்து விடும். தொழிலுக்கு எவ்விதத்திலும் இடையூறு இராது. ஆனால், இந்த அறிகுறிகள் காணப்பட்டவுடன் சிகிச்சை செய்யாமல் அலட்சியம் செய்தால் வலி நிரந்தரமாகி விடும்! காலையில் பொதுவாக அதிக வலி இராது. ஆனால் மாலை நேரத்தில் வலி கூடுதலாகி விடும். வலி கண்டவுடன் டாக்டரிடம் போவது நலம். வருமுன் காப்பது மிகச் சிறந்ததல்லவா?





மேற்கு ஜெர்மனியில் 70,000 அலுவலக ஊழியர்கள், வேலை நேரத்தில் 2 நிமிடம் முதல் 10 நிமிடம் வரை 'ஐசோமெட்ரிக்' என்னும் உடற்பயிற்சிகளைச் செய்வதில் ஈடுபடுகிறார்கள். உதாரணமாக, காரியதரிசிகள், தங்கள் தட்டெழுத்து இயந்திரத்தின் மீது கை வைத்து அழுத்துகிறார்கள் அல்லது தங்கள் தலையில் வைத்துக் கைகளை அழுத்துகிறார்கள். பிறர் அறியா வண்ணம் இவ்வுடற்பயிற்சிகளைச் செய்து, தசைகளை வலுப்படுத்தலாம். (யூ.பி.எஸ்.)

தட்டெழுத்துத் தடையின்றித் தொடர..

வலி வராமல் தடுக்கத் தட்டெழுத்தர்கள் என்ன தற்காப்பு முறைகளைக் கையாளலாம்? விரல்கள், முன் கை, புஜம் — இவைகளைத்தும் ஒரே சீராக இயங்கும் வண்ணம் சரியான நிலையில் அமர வேண்டும். சிலர் குறிப்பிட்ட சிலவிரல்களை மட்டுமே அதிக அழுத்தம் கொடுத்து உபயோகிப்பார்கள். அது தவறு. எல்லா விரல்களையுமே ஒரே அளவு அழுத்தம் கொடுத்து உபயோகித்து 'டைப்' செய்வதுதான் உசிதம். முழங் கைகளை மடித்து 'டைப்' செய்யும் பொழுது முழங்கையும் டைப்ரைட்டரில் உள்ள எழுத்துக்களும் ஒரே மட்டத்தில் இருக்கும்படி வைத்துக் கொள்ள வேண்டும். சரியான உயரமுள்ள மேசை, நாற்காலிகளைத் தேர்ந்தெடுத்து நிமிர்ந்து அமர வேண்டியது அவசியம். தட்டெழுத்துக்காரர்கள் சோர்வுறாமல் செம்மையாகப் பணியாற்றுவதற்கென ருஷ்ய மருத்துவக் கழகம் சில யோசனைகளை வழங்குகிறது. தொடர்ந்து 55 நிமிடங்கள்



டைப் செய்த பிறகு ஐந்து நிமிடங்கள் ஓய்வுபெறவேண்டும்; அல்லது 80 நிமிடவேலைக்குப் பிறகு 10நிமிடஓய்வு தேவை. இந்த ஓய்வு நேரத்தில் தட்டெழுத்தர் எழுந்து நின்று மூச்சை பலமாக இழுத்து. வெளியே விடும் சுவாசப் பயிற்சி செய்யவேண்டும். கை விரல்களை இறுக மூடி மூடித் திறக்க வேண்டும். கைகளை வீசிச் சுழற்ற வேண்டும்.

இரவு படுக்கச் செல்லு முன், 36°-37° சென்டிகிரேட் உஷ்ணத்தில் 2 சதவிகிதம் சோடா உப்பு (சமையல் சோடா - **Baking Salt**) கரைந்த நீரில் 8 அல்லது 10 நிமிட நேரம் கைகளை மூழ்கிய பிறகு, மணிக்கட்டுக்களையும் முன் கைகளையும் இதமாகத் தேய்த்து விட வேண்டும்; பின்னர் கதகதப்பாக வைத்துக் கொள்ளக் கையுறை சற்று நேரம் அணிதல் நலம்.

தட்டெழுத்தர் பணியாற்றும் அறை போதிய அளவு காற்றோட்டமுள்ளதாய் இருக்க வேண்டும். மின் விளக்கின் ஒளி பின்

பக்கம் இடது புறத்திலிருந்து வீச வேண்டும். சப்தத்தைக் குறைக்க இழுப்பு அறைகள் இல்லாத மேசையின் மீது, கம்பளம் போன்ற மெத்தென்ற துணி பரப்பி அதன்மீது டைப்ரைட்டரை வைத்தல் உகந்தது. ஒரே அறையில் பல தட்டெழுத்தர்கள் பணியாற்ற வேண்டியிருந்தால் ஒலி பரவாமல் இரகிக்கும் துவாரமுள்ள அட்டைகளைச் சுவர்களில் பொருத்த வேண்டும்.

இவை தவிர, வீட்டிலிருக்கும்பொழுதும் தட்டெழுத்தர்கள் சில முக்கியமான விதி முறைகளை அனுசரிக்க வேண்டும். கைகளுக்குச் சிரமம்தரும் கடுமையான வேலைகளைத் தவிர்க்க வேண்டியது அவசியம். குறிப்பாக, மிகப் பளுவான பொருள்கள் எதையும் தூக்கலாகாது. குறைந்தபட்சம் ஏழு மணி நேரத் தூக்கம் தட்டெழுத்தர்களுக்கு இன்றியமையாதது. காலையில் இலேசான உடற்பயிற்சியும் மாலையில் விளையாட்டுக்களில் ஈடுபடுவதும் நல்ல பலனை அளிக்கும். — ஐ.பி.எஸ்.

தமிழில்: ரா. பா.



உலகத்திலேயே தட்டெழுத்து இயந்திரத்தில் அதிக வேகத்தில் 'டைப்' செய்யும் 'சிக்கி' எனும் ஜெர்மானியப் பெண் 'நிமிடத்துக்கு 716·6 சொற்கள் வீதம் 'டைப்' செய்கிறார். (யூ. பி. எஸ்.)

வானிலே பந்தாட்டம்!



விமானத்திலிருந்து குதித்து பாராசூட்டின் உதவியுடன் பத்திரமாய்ப் பூமியை அடைவது என்பது நமக்கெல்லாம் தெரிந்த விஷயம். ஆனால் இப்போது மேனாடுகளில் ஒரு விசித்திர, ஆபத்தான விளையாட்டு உருவாகி வருகிறது. அதாவது விமானத்தில் ஏறி மிக மிக உயரே சென்று விடுவது. அங்கிருந்து குதிப்பது. ஆனால் பாராசூட் விரிய விசையை இழுப்பதில்லை. அப்படியே காற்றில் மிதந்து அதள பாதாளத்தை நோக்கி ஆனந்தமாக விழுகிறார்கள். இப்படி மணிக்கு 115 மைல் வேகத்தில் பூமியை நோக்கி விரைகிறார்கள். சுமார் ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் அடி தூரம் இப்படி ஆனந்தமாக விழுந்த பிறகு [பூமியிலிருந்து சுமார் இரண்டாயிரம் அடி உயரத்தில் இருக்கும்போது பாராசூட்டைப் பிரியச் செய்யும் விசையை இயக்குகிறார்கள். பத்திரமாய் நிலத்தில் மெல்ல இறங்குகிறார்கள். கொஞ்சம் காலதாமதம் நேர்ந்தாலோ?

மரணபத்தான இந்த விளையாட்டில் இன்னொரு விளையாட்டையும் சேர்த்துக்கொள்கிறார்கள் ருஷ்ய வீரர்கள். காற்றிலே மிதக்கும்போது வாலிபால் ஆடுவதுதான் இந்த விளையாட்டு! மணல் நிரம்பிய பன்னிரண்டு பவுண்டு எடையுள்ள பந்தை இதற்குப் பயன்படுத்துகிறார்கள். வானிலே ஆடப்படும் இந்தப் பந்தாட்டம் முப்பது விநாடிகளுக்கு நீடிக்கிறது. இந்தக் கால அளவில் அவர்கள் கிட்டத்தட்ட ஒரு மைல் தூரம் பூமியை நோக்கி விழுகிறார்கள்.

படத்தில் நீங்கள் காண்பது ஜெர்மானிய பாராசூட் விளையாட்டு வீரர் அலாய்ஸ் வீரர்.

படம்: யூ. பி. எஸ். தகவல்: பாலி

காதலைக் கொல்ல ஓர் ஆயுதம்!

'இன்டர் கா'மில் ரிஸப்ஷனிஸ்ட் லில்லியின் குரல் ஒலித்தது:

''டாக்டர் வேணுகோபால் வந்திருக்கிறார்.''

சாருலதாவின் முகத்தில் வியப்பும் பரபரப்பும் புயல் வேகத்தில் சுழல் வதைக் கண்டான் எதிரே இருந்த சாரங்கன்.

''வரச் சொல்லு! வரச் சொல்லு!'' என்ற சாருலதா எழுந்து போய் அறைக் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டு நின்றாள்.

வேணுகோபால் தன் தோற்றத்தில் வழக்கத்தை விடச் சற்று விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறான் என்பது அவளுக்குப் பார்த்த மாத்திரத்திலேயே புரிந்து போயிற்று.

''வாருங்கள் வேணு! ஐ ஆம் ஹானர்ட்'' என்றாள் அவள் பெருமிதத்துடன்.

''உன்னை நான் கௌரவப்படுத்தி விட்டதாக நீ நினைக்கலாம்; ஆனால் எனக்கென்னவோ ஓநாய்க் குகைக்குள் நுழைந்து விட்டது போல் ஒரு பிரமை'' என்றான் வேணுகோபால் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே. ''இங்குதானே சாருலதாவின் சாம்ராஜ்ய விஸ்தரிப்புத் திட்டங்கள் உருவாகின்றன?''

சாரங்கன் தன் சுபாவப்படி கலகலவென்று சிரித்துவிட்டான்.

''நீங்கள் ஆடாக இல்லாதவரை ஏன் பயப்பட வேண்டும்?'' என்றாள் சாருலதா புன்னகையுடன். ''இவர் சாரங்கன். என் பெர்ஸனல் ஸெக்ரட்டரி.''

''இவரைப் போய் ஆடு என்கிறீங்களே? சிங்கம் போலல்லவா இருக்கிறார்!'' என்றான் சாரங்கன். சாருலதாவின் முக மலர்ச்சியையும் கவனித்துக் கொண்டான்.

''தாங்க்யூ'' என்றான் வேணு.

''மணி நாலே முக்கால் ஆகிவிட்டதே. டிஸ்கஷனை நாளைக்குத் தொடர்வோமா? வேறு ஏதாவது அவசரமாக நான் கவனிக்க வேண்டியிருக்கிறதா?'' என்று கேட்டாள் சாருலதா.

''நாளைக் காலை வரை காத்திருக்க முடியாதபடி இங்கு அவ்வளவு அவசரமான விஷயம் ஏதுமில்லை. ஆனால் ஆறு மணிக்கு 'எலைட் கிளப்'பில் காசிராஜனைச் சந்திப்பதாகச் சொன்னீர்கள்'' என்ற சாரங்கன் ''நான் வருகிறேன் டாக்டர்! உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி'' என்றான்.

''வேணு என்று கூப்பிடுங்கள். நண்பர்களாய்ப் பழகுவோம்'' என்ற வேணு



சாருலதா

கீ.ராஜேந்திரன்

கோபால் இரு கரங்களையும் நீட்டி அவன் கையைப் பற்றினான்.

சாரங்கன் போனதும் சாருலதா மறுபடியும், ''வேணு! இதென்ன அதிசயம்? எனக்கு நம்பவே முடியவில்லை; நீங்கள் தானா இங்கு வந்திருக்கிறீர்கள்? அதுவும் இந்த நேரத்தில்?'' என்றாள்.

''என்ன இவ்வளவு சந்தேகிக்கிறாய்? என்னைக் கிள்ளிப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறதா? இந்தா கிள்ளிக்கொள்!'' என்று அவள் முகத்தருகே தன் விரல்களைக் கொண்டு போனான் வேணுகோபால்.

அந்த விரல்களைப் பட்டும் படாமலும் பற்றி ஸோபா அருகே அழைத்துப் போனாள் சாருலதா. ''உட்காருங்கள்; என்ன சாப்பிடுகிறீர்கள்? புதன் கிழமை கான்டீனில் குலாப் ஜாமூனும் ஊத்தப்பமும் கிடைக்கும். வேறு ஏதாவது வேண்டுமானால் எதிரே உள்ள ஹோட்டலிலிருந்து வரவழைக்கிறேன்.''

''ஓவல்டின்னோ அல்லது போர்ன்விட்டாவோ கொண்டு வரச் சொல்லு; வேறொன்றும் வேண்டாம்.''

இன்டர்காமில் பில்லிக்கு உத்தரவிட்டு விட்டு வேணுகோபால் எதிரே வந்து, அவன் கூறப் போவதைக் கேட்கும் ஆர்வத்துடன் உட்கார்ந்தாள் சாருலதா. செவிப் புலன்களைத் தவிர அவளிடம் வேறு எதுவுமே அடுத்த சில விநாடிகளுக்கு இயங்காது என்பதை உணர்ந்த வேணுகோபால் சிரித்துக் கொண்டே சொன்னான்:

''என் அம்மாவிடம் ஒரு ரம்பையையோ அல்லது ஊர்வசியையோ அழைத்துக் கொண்டு வந்து காட்டுவதாகச் சொன்னேன். எனக்குத் தெரிந்த ரம்பை, ஊர்வசி எல்லாம் நீதான்!''

''ஐ ஆம் ப்ளாட்டர்ட்'' என்றாள் சாருலதா புகழ்ச்சியில் மலர்ந்த புன்னகையுடன். ஆனால் அதே சமயம் வேணுகோபால் கூறியதன் உட்பொருளையும், அவ்வாறு நடந்தால் அதை அடுத்து அதன் தொடர்ச்சியாக நிகழக் கூடியவற்றையும் நினைத்து அவள் முகபாவம் மாறி, பயம் அதில் குடிகொண்டது. ''ஆனால் வேணு! ஆறு மணிக்கு எனக்கு எலீட் கிளப்பில் ஒரு காரியம் இருக்கிறதே! சாரங்கன் நினைவு படுத்திவிட்டுப் போனாரே!''

''கான்ஸல் இட்!'' என்றான் வேணுகோபால்.

''என்ன?'' சற்றுத் திடுக்கிட்டவளாய் நிமிர்ந்தாள் அவள்.

''இன்று வர முடியாது, இன்னொரு நாள் சந்திக்கலாம் என்று டெலிபோனில் கூப்பிட்டுச் சொல்லிவிட்டேன்'' என்றான் வேணுகோபால் மறுபடியும் அலட்சிய பாவனையில்.

சாருலதாவுக்குக் கோபம் வந்தது. ''வேணு, நீங்கள் ஐந்து மணி நேரம் உங்கள் நோயாளிகளைத் தட்டிக் கொட்டிப் பார்த்தால் ஐம்பது ரூபாய் தேறலாம்; ஆனால் நான் இன்று ஐந்து நிமிஷம் காசிராஜனுடன் பேசாமல் போனால் எனக்கு ஐம்பதாயிரம் ரூபாய் நஷ்டமாகும்!''

பியூன் வேதாசலம் ஓவல்டின் கொணர்ந்து வைத்து விட்டுப் போனான்.

வேணுகோபால் கூறினான்: ''சாரு! ரொம்ப அவசரக் கேஸானால் டாக்டர் சிவராமனிடம் அழைத்துப் போகும்படி கம்பௌண்டரிடம் சொல்லிவிட்டு வந்தேன். எங்களுக்குள் இப்படி ஓர் ஏற்பாடு. சிவராமனுக்கு என்றாவது லீவு தேவைப்பட்டால் அவசர கேஸ்களை என்னிடம் அனுப்பி வைப்பார். ஆனாலும் என் வீட்டுக்கு இன்று சாயங்காலம் வரும் நோயாளிகள் டாக்டரைக் காணோம் என்றதும் எவ்வளவு ஏமாற்றம் அடைவார்கள்? இன்று மாலை நான் சம்பாதிக்கக் கூடியது ஐம்பது ரூபாய்தான். ஆனால் அதை மட்டும் நான் துறக்கவில்லை. அத்துடன் ஐந்து லட்சம் பெறுமானமுள்ள நல்லெண்ணத்தையும் இழந்து விட்டு வந்திருக்கிறேன்.''

''ஏன் அப்படிச் செய்தீர்கள்?''

''உனக்காக ஐந்து லட்சத்தை நான் துறக்கத் தயாராக இருக்கிறேன் என்பதை நிரூபிக்கத்தான்!''

''ஆனால் ஐம்பதாயிரத்தை நான் உங்களுக்காக இழக்கத் தயாராக இல்லை என்று குத்திக் காட்டுகிறீர்களா? தியாகம் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை.''


''சுதந்திரப் போராட்டத்தின் போது தியாகம் செய்தவர்கள் கூட நாட்டு விடுதலை என்ற லட்சியத்துக்காகத்தான் தியாகம் செய்தார்கள். பிரதி பலனை எதிர்பார்ப்பது தியாகம் ஆகுமா? நானும் தியாகம் செய்யவில்லை சாரு. எனக்கும் ஓர் உள் நோக்கம் உண்டு!''

''என்ன நோக்கம்? என்னை உங்கள் வீட்டுக்கு அழைத்துப் போய் 'ரம்பை' என்று உங்கள் அம்மாவிடம் அறிமுகப்படுத்துவதுதானே?''

''சாரு! ஊட்டியிலிருந்து நீ வந்த மறுநாள் எனக்கு டெலிபோன் செய்தாயல்லவா?''



பிளக்கும் தலைவலியிலிருந்து விரைவில் குணமடைந்தேன் !



அமிர்தாஞ்சனம்

மிக உதவியது

அமிர்தாஞ்சனம் தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு, தசைவலி இவற்றிலிருந்து விரைவில் குணமளிக்கிறது. உபாதை ஏற்பட்டுள்ள இடத்தில் சிறிதளவு அமிர்தாஞ்சனம் தடவி துரித நிவாரணம் பெறுங்கள். 75 வருடங்களாக குடும்பங்களில் பயன்பட்டுவரும் நம்பகமான நிவாரணி அமிர்தாஞ்சனம். எப்போதும் ஒரு பாட்டில் கைவசம் இருக்கட்டும். அதுசிக்கனமான ஜாடிகளிலும், கைக்கு அடக்கமான டப்பாக்களிலும் கிடைக்கிறது.



10 மருந்து பொருள்கள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற நிவாரணி

அமிர்தாஞ்சன் லிமிடெட், சென்னை - பம்பாய்-கல்கத்தா - புதுடில்லி - ஹைதராபாத் - பெங்களூர்

AM-5339

''இல்லையே? நீங்கள்தான் எனக்கு ஃபோன் செய்தீர்கள்!''

'' அப்போது என்ன சொன்னாய்? 'வேணு! எனக்கிருந்த ஒரே நண்பரையும் இழந்து விட்டேனோ என்று பயந்து போனேன்' என்றாயல்லவா?''

''ஆமாம்.''

''அதற்கு என்ன அர்த்தம்? எத்தனையோ பேர்களுடன் நீ பழகுகிறாய்; ஒரே நண்பன் நான்தான் என்றால்...?''

''எத்தனையோ பேருடன் தொழில் வர்த்தக ரீதியில் தொடர்பு கொண்டு பழகுகிறேன், பேசுகிறேன். அதெல்லாம் நட்பு ஆகுமா? அநேகமாக எல்லாருமே எந்த நிமிஷத்தில் என்னைக் காலை வாரி விடலாம் என்றுதான் காத்திருப்பார்கள். பரஸ்பரம் பிரதிபலனை எதிர்பாராமல் உண்மையான சிநேக பாவத்துடன் மட்டும் பழகுவது அபூர்வம். அத்தகைய தூய நட்பைத்தான் உங்களிடம் நான் எதிர்பார்க்கிறேன்.''

டாக்டர் வேணு ஏமாற்றம் அடைந்தவனும் மேலே பேச வார்த்தைகளைத் தேடுபவனும் எழுந்து நடந்தான். ஜன்னல் ஓரம் சென்று வெனிஷியன் பிளைண்ட்ஸ்ஸின் கயிற்றை இழுத்தான். அப்போது ஏற்பட்ட சிறிய சிறிய இடைவெளிகள் பலவற்றுள் ஒன்றின் வழியாகச் சாலையைக் காண முடிந்தது. மாலை நேர மவுண்ட் ரோட், அவசரக் கோலம் பூண்டு எட்டாவது மாடியிலிருந்து பார்க்கும்போது எறும்புப் புற்றின் சுருசுருப்புடன் தோற்றமளித்தது.

''இந்த பைனுகுலர்ஸை ரேஸ் கோர்ஸில் மட்டுமில்லை. மவுண்ட் ரோடை வேடிக்கை பார்க்கவும் நான் பயன்படுத்துவதுண்டு'' என்றாள் சாருலதா வேணுகோபாலின் அருகே வந்து நின்று. அவள் கையிலிருந்த பைனுகுலர்ஸை விளையாட்டாக வாங்கி, சாலையை ஆராய்ந்தான் வேணு. சாருலதா பில்டிங்கின் எதிரே, சாலையின் மறுபுறம் இருந்த கட்டடத்தின் சுவரில் ஒரு தோளைச் சாய்த்து, கரங்களை நெஞ்சோடு சேர்த்துக் கட்டிக்கொண்டு காத்திருந்த சாரங்கன் பளிச்சென்று பைனுகுலர்ஸில் தெரிந்தான்.

''உன் காரியதரிசி, நாம் எப்போது வெளியே வருவோம் என்று காத்திருப்பதாகத் தோன்றுகிறது சாரு'' என்றான் வேணுகோபால்.

பைனுகுலர்ஸ் கரம் மாறியது. சாருலதாவும் கவனித்தாள்.

''நாம் இருவரும் சேர்ந்து ஒரே காரில் போகிறோமா என்று பார்க்கக் காத்திருப்பான். க்யூரியாஸிடி யாரை விட்டது?''

''அது மட்டுமா? எந்தக் காரில், இருவரும் எப்படி, எந்த அளவுக்கு நெருங்கி உட்கார்ந்து பிரயாணம் செய்கிறார்கள் என்பதைக் கூடக் கணிக்கும் அவன் கண்கள். நட்பு என்ற எல்லைக் கோட்டில் நின்று நாம் பழகினாலும் உலகம் நம்மைக் காதல் கண்ணோட்டத்தில் தான் பார்க்கும், சாரு! தொழில் வர்த்தகத் துறைத் தொடர்பு ஏதும் நமக்கிடை ஏற்பட நியாயமில்லை அல்லவா?''

''உலகத்தின் கண்ணோட்டம் பற்றி எனக்குக் கவலை இல்லை. நாலு பேர் என்ன சொல்வார்களோ என்று பயந்து காலத்தை ஓட்டினால் அது வாழ்க்கை அல்ல; அடிமைத்தனம். நான் உங்களைக் கல்யாணம் செய்து கொண்டு விடுவதாகவே வைத்துக் கொள்ளுங்கள். அப்போதும் இந்த உலகம் என்ன சொல்லும் தெரியுமா? நீங்கள் என்னிடம் உள்ள பணத்துக்காகவே என்னை மயக்கி விட்டீர்கள் என்றுதான் கூறுமே தவிர நம்மிடையே காதல் நிலவியதாக ஒப்புக் கொள்ளாது! ஊர் வம்பு பிரபலஸ்

ஆயிரம் கார்களுக்கு ஆய்வுக்கூடம்

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பிராங்க்பர்ட் என்ற நகரில் மோட்டார் கார்களைப் பரிசோதிக்க பிரமாண்டமான ஆய்வுக்கூடம் ஒன்றை அமைத்து வருகின்றனர். ஒரே நேரத்தில் ஆயிரம் வாகனங்களை இந்த ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை செய்ய இயலும். இத்தனை பெரிய ஆய்வுக் கூடத்துக்கான அவசியம் என்ன?

மேற்கு ஜெர்மனியில் சாலை விபத்துக்களைத் தடுப்பதற்காக ஒரு சட்டம் இருக்கிறது. அதன்படி ஒவ்வொரு மோட்டார் காரும் இரண்டு வருடத்துக்கு



ஒரு முறை நிபுணர்களின் பரிசோதனைக்கு உள்ளாக வேண்டும். தேவையான ரிப்பேர்கள் செய்யப்பட வேண்டும். அதன் பின் வாகனத்தின் நம்பர் பிளேட்டில் ஒரு முத்திரை குத்துவார்கள். அதன் பின்னரே கார் ஓட்ட அனுமதிக்கப்படும்.

இப்படி ஆய்வுக்காக வரும் ஆயிரக் கணக்கான கார், மோட்டார் சைக்கிள், லாரி முதலிய வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கும், கார் ஓட்டி வருபவர்கள் தங்குவதற்கும் இந்தப் புதிய பெரிய ஆய்வுக் கூடத்தில் வசதிகள் உண்டு.

வசதிகள் நிறைந்த இந்தப் பிரும்மாண்டமான ஆய்வுக் கூடம் 1970ல் கட்டி முடிக்கப்படும்.

-ஜெர்மன் கூரியர்

தர்களாய் உள்ள யாரைத்தான் விட்டு வைத்தது? நாலு பேரைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம் வேணு; நம்மை நாமே சரியாய்ப் புரிந்து கொண்டால் போதும்!''

தர்க்கத்தில் இன்னொரு முறையும் தான் தோற்றுப் போனதை வேணு உணர்ந்தான். அவனுக்கு உதவவே போல் இன்டர்காமில் லில்லியின் குரல் ஒலித்தது : ''காசிராஜன் டெலிபோனில் காத்திருக்கிறார்.''

''நான் பேசுகிறேன்'' என்றாள் சாருலதா.

கருப்பு டெலிபோன் மணி ஒலித்தது. ரிஸீவரை எடுக்க அவள் கரம் நீளு முன்னர் வேணுகோபாலின் உள்ளங்கை டெலிபோன் மீது பதிந்து அதை அழுத்திப் பற்றியது.

''இன்று அவரைச் சந்திக்க முடியாது என்று சொல்லிவிடு, சாரு'' என்ற வேணு கோபால், போனால் போகட்டும் என்பது போல் ''ப்ளீஸ்'' என்றும் சேர்த்துக் கொண்டான்.

சாருலதாவின் கண்கள் ஒருவித மிரட்சியுடன் வேணுகோபாலை ஏறிட்டுப் பார்த்தன. அவளுக்கு அவனது நட்பை இழக்கவும் விருப்பமில்லை. அவன் சொற்படி கேட்டுப் பணிந்து போகவும் இஷ்டம் இல்லை. அவன் கோரிக்கையை இன்று நிறைவேற்று விடில் நட்பையும் அது பாதிக்குமோ என்ற கவலையும் பயமும் அம்முகத்தில் குடிகொண்டது.

வேணுகோபாலின் கரம் அகன்றது. குழப்பத்துடன் சாருலதா ரிஸீவரை எடுத்தாள். ''சாரு ஹியர்!''

சற்று நேரம் அவள் காசிராஜன் பேசுவதைக் கேட்டாள். அவள் முகத்தில் தெளிவு பிறந்தது; சாந்தி பரவியது. ''தட் இஸ் ஆல் ரைட் ராஜ்! நாளைக்கு நான் ஃபோன் செய்கிறேன். குழந்தையைக் கவனியுங்கள். யார் டாக்டர் உங்களுக்கு?...... ஓ யெஸ்! பெஸ்ட் சைல்ட் ஸ்பெஷலிஸ்ட். எனக்குத் தெரியும் அவரை... கவலைப்படாதீர்கள் எல்லாம் சரியாகப் போய்விடும். குட்லக்!'';

சாருலதா டெலிபோனை வைத்து விட்டு நிமிர்ந்தாள். ''ஸாரி, உங்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே இன்னொரு டாக்டரைப் புகழ்ந்துவிட்டேன்.'' அவளுடைய இயல்பான கலகலப்பு சுபாவம் திரும்பியது.

''என்ன சொன்னான் காசிராஜன்?''

''குழந்தைக்கு உடம்பு சரியில்லையாம். அதனால் இன்று க்ளப்புக்கு வர முடியாது என்றார்.''

''பார்த்தாயா! கடவுளே என் பக்கத்தில் இருக்கிறார், கிளம்பு போகலாம்!''

சாருலதா தடை கூறாது புறப்பட்டாள். கதவருகே அவள் போனதும், ''ஒரு நிமிஷம் இப்படி உன் மேஜைப் பக்கம் வந்து ஆபீஸ் விஷயமாக உன் மனத்தில் ஏதாவது இருந்தால் 'மெமோ பேடில்' எழுதி வைத்து விட்டு வா! மனத்தைத் துடைத்து விட்டு என்னுடன் வரவேண்டும் நீ!'' என்றான் வேணுகோபால்.

சாரு சிரித்தபடியே கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள். வேணு பின்தொடர்ந்தான். 'ரிஸப்ஷனிஸ்ட்' அருகே வந்ததும் சாருலதா, ''லில்லி! டிரைவரை வீட்டில் காரை விட்டு விட்டுப் போகச் சொல்லு. எனக்கு இன்றைக்கு இனிமேல் கார் தேவைப்படாது'' என்று போகிற போக்கில் கூறியபடி மேலே நடந்தாள்.

கார் நகர ஆரம்பித்ததும் சாருலதாவின் முகத்தில் மீண்டும் கலவரம் நிலவியது. ''வேணு, எங்கே போகிறோம் நாம்?'' என்று மிரண்டவள் போல் கேட்டாள்.

''வீட்டுக்கு. அம்மாவைப் பார்க்க!''

''இன்னொரு நாள் நான் வருகிறேன் வேணு!''

''ஏன்? இன்று வந்தால் என்னவாம்?

''எனக்கு மனசு சரியில்லை. ஏதேதோ சொல்லிக் குழப்பி விட்டீர்கள்.''

''உனக்கு மனசு என்று கூட இருக்கிறதா என்ன?''

''என்ன சந்தேகம் உங்களுக்கு?''

''ஏதாவது பாங்கின் ஸேஃப் டெபாஸிட் வால்ட்டில் உன் இதயத்தைக் கழற்றி வைத்துப் பூட்டியிருக்கிறாயோ என்று பல நாட்களாகவே எனக்கு ஒரு சந்தேகம்!''

''நான் உயில் எழுதும்போது எந்த பாங்கில் எந்த நம்பர் ஸேஃபில் இருச்


இந்த விவசாயிகளிடையே பொதுவாகக் காண்பது என்ன?



ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டும், அதன்மூலம் கிடைத்த சுபிட்ச வாழ்வும்.

நாடெங்கும் உள்ள விவசாயிகளின் வாழ்வை வளம் கொழிக்க வகை செய்வது. பெஸ்ட் அண்ட் கம்பெனி தயாரிக்கும் நம்பகமான ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள்.

ஈடு இணையற்றது என்று புகழ் பெற்ற 'மாஜேுபிளாக்' பம்பு செட்டுகள் உட்பட பலவகை சென்டிரிப்யூகல் பம்புகளையும் **பெஸ்ட்** அளிக்கிறது. ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள் கண்டிப்பான தரக்கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்படுபவை. விற்பனைக்குப் பிறகும் சேவை செய்ய, நாடெங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், தக்க பம்புகளை தேர்ந்தெடுப்பதற்கு ஆலோசனைகளையும் அளிக்கிறது, **பெஸ்ட்!**



BEACON

பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட.

(ஸ்தாபிதம் : 1879)
13/15, நார்த் பீச் ரோடு, சென்னை-1.

தமிழ் நாட்டில் கிளைகள்:
6/434 திருச்சி ரோடு, கோயமுத்தூர்.
49-D, மதுரை ரோடு, திருச்சி-1.

Focus.BC.19(Tam(a)

கிறது என்று குறிப்பிட்டு இதயத்தை உங்களுக்கே சொந்தமாக்கி விடுகிறேன்!"

"அதுவரை காத்திருக்க எனக்குப் பொறுமை கிடையாது. உன் வக்கீல் அல்ல; நீயே அதை என்னிடம் ஒப்படைக்கப் போகிறாய் வெகு சீக்கிரம்!"

"நாம் இப்போது எங்கே போகிறோம்?"

"நீதான் வீட்டுக்குப் போக வேண்டாம் என்று கூறி விட்டாயே. விட்டுப் பிடிக்கிறேன். அதற்குப் பதில் சொர்க்க லோகத்துக்கே அழைத்துப் போகிறேன் உன்னை!"

"வழி தெரியுமா?"

"ஓ எஸ்! திருவான்மியூர் தாண்டி முத்துக்காடு சாலையில் நேராகப் போய் பத்தாவது கிலோ மீட்டர் கல் அருகே இடது பக்கம் திரும்பிக் கொஞ்சம் கரடு முரடான சாலையில் போனால் சொர்க்கத்தைச் சென்றடையலாம்! பூலோக சொர்க்கம்!"

"அடேயப்பா! அத்தனை அழகான இடம் சென்னையின் சுற்றுப்புறத்தில் இருக்கிறதா என்ன?"

"உனக்கு இதெல்லாம் எங்கே தெரியும்? சதா சர்வ காலமும் 'டெவலப் மெண்ட் ரிபேட்' என்றும் 'டிப்ரிஸியேஷன் வால்யு' என்றும் ஏதாவது கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தால்...?"

பேசிக் கொண்டே போனார்கள். சுமார் அரை மணி நேரத்துக்குப் பிறகு அவர்கள் சொர்க்க பூமிக்கு வந்து சேர்ந்தார்கள்.

கடற் கரைதான்; ஆனால் அங்கு அதன் கன்னித் தன்மை அழியாமல் காக்கப் பட்டிருந்தது. அலை ஓசைக்கு ஏற்ப ஈர மண்ணில் நண்டுகள் நர்த்தன மாடுவதைக் காரை விட்டிறங்கி வந்த அவர்கள் பார்த்தார்கள். சற்று தொலைவில் காற்றில் அசைந்து 'உய்ய்' என்று சத்தம் எழுப்பிய சவுக்குத் தோப்பில் ஒரு பச்சைப் பாம்பு மரம் ஒன்றின் மேல் கொடியாகப் படர்ந்து கிடந்தது. அதை அவர்கள் கவனிக்க வில்லை. இந்த ஜீவராசிகளைத் தவிர அந்தப் பிரதேசத்தில் வேறு யாருமே இல்லை. வெறும் மணல் மேடுகள், சரிவுகள், கிளிஞ்சல் குவியல்கள். காற்று மணல் பரப்பில் வரைந்து சென்ற விசித்திரக் கோலங்கள் அப்படி அப்படியே அலுங்காமல் இருந்தன. வெண் மணலில் செம்மைப் புழுதி படியவில்லை. வேர்க்கடலைத் தோலியோ காகிதக் குப்பையோ காணப்பட வில்லை.



செயற்கை இடி!

மழை பெய்யும்போது, எங்கே தங்கள் கார் மீது இடி விழுந்துவிடுமோ என்று காரோட்டிகளோ, கார் பிரயாணிகளோ இனி அஞ்சவேண்டிய தில்லை. இடியைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்த புதுமையான சாதனம் ஒன்று, ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் உருவாக்கப் பட்டிருக்கிறது. இதனைக் காரில் பொருத்திக்கொண்டால், இடியை இச்சாதனம் தாங்கிக்கொள்ளும். மேற்கு பெர்லின் நகரில் சீமென்ஸ் ஸ்தாபன நிபுணர்கள், இந்தக் கருவியைக் கண்டுபிடித்துள்ளனர்.

படத்தில் செயற்கை மின்னலையும் இடியையும் கார் மீது விழச் செய்து பரிசோதிப்பதைக் காண்கிறோம். காருக்கோ காருக்குள் இருப்பவருக்கோ ஆபத்தேதும் ஏற்படவில்லை. - (யூ. பி. எஸ்)

"ஆதமும் ஈவும் வாழ்ந்த ஆதி காலத்து உலகுக்கு வந்து விட்டது போலிருக்கிறதல்லவா?" என்றான் வேணு. "ஞாயிற்றுக் கிழமைகளிலாவது இங்கே கார் வசதி உள்ள சிலர் வருவார்கள். மற்ற நாட்களில் ஈ, காக்காய் கிடையாது. இந்தக் கடற் கரை ஓரமாக ஏகாந்தத்தை உத்தேசித்துக் கொஞ்சம் நிலம் வாங்கிப் போடலாம் என்று யோசனை."

"அதோடு ஒரு பர்ணசாலையும் அமைத்துத் தாடி வளர்த்துக்கொண்டு நிஷ்டையிலும் ஆழ்ந்து போகலாம்!"

"என்னுடைய கற்பனை வேறு சாரு! வசதியான சின்னஞ் சிறு வீட்டைக்

கட்டிக் கொண்டு ஹனிமூனுக்கு வரலாம்!''

''என்ன பயங்கரம்! மின்சாரத் தொடர்பு கூடக் கிடையாதே இங்கே! நடு ராத்திரியில் நரி ஊளையிடும்!''

''அதைக் கேட்டுப் பயந்து என் மனைவி என்னை இறுகக் கட்டிக்கொள்ளுவாள்!''

''அவள் கட்டிக் கொள்வது தலையணையாகத்தான் இருக்கும்! நீங்கள் பயத்தில் கட்டிலுக்கு அடியில் பதுங்கிக் கொண்டிருப்பீர்கள்!''

''எனக்குக்கூட இப்போது ஊளையிடலாம் போலிருக்கிறது. அதாவது பாடலாம் என்று தோன்றுகிறது! ஆனால் வேணுவின் கானத்தை உனக்குக் கேட்கச் சகிக்காது என்பதால் வேணு கானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்!''

வேணுகோபால் மணலில் ஒரு துண்டைப் பரப்பிக் காரிலிருந்து கொண்டு வந்திருந்த டேப் ரிகார்டரை அதன் மீது வைத்து இயக்கினான். காரின் பாட்டரியையும் டேப் ரிகார்டையும் நீண்ட ஒயர் இணைத்தது. குழலொலி அந்த இனிய சூழ்நிலைக்கு இனிமை கூட்டியது.

''ஸ்ரீரஞ்சனிதானே இது?'' என்று கேட்டாள் சாருலதா.

''அடடே! உனக்குக் கர்நாடக ராகங்கள் கூடத் தெரிகிறதே!''

''சின்ன வயதில் வாய்ப்பாட்டுக் கூடக் கற்றுக் கொண்டிருக்கிறேன்.''

''விட்டிலா பள்ளிக்கூடத்திலா? எந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தாய் நீ?''

''பழைய கதை எதற்கு? நான் எதிர்காலத்தில் நிற்பவள்!''

''அப்படிச் சொல்லித்தான் உன்னைப் பேட்டி காண வரும் பத்திரிகை நிருபர்களைக்கூடத் திருப்பி அனுப்பி விடுகிறாயாம். உன் நிலையில் உள்ளோர் பிராபல்யம் அடைவதை வரவேற்பார்கள். நீ மட்டும் எதற்காக ஒடி ஒளிகிறாய் சாரு?''

''அவர்கள் திரும்பிப் போய் என் வாழ்க்கையே ஒரு மர்மம் என்று எழுதுகிறார்களே, அதற்காகத்தான். அப்படி மர்மப் பெண்ணாக விளங்குவதிலே ஒரு 'கிளாமர்' இருக்கிறது!''

''அது மட்டும்தானா? அழகாக விளங்குவதிலும் கல்யாணமாகாமல் இருப்பதிலும் கூடக் 'கிளாமர்' இருக்கிறது. அந்தக் 'கிளாமர்' தொழில் வர்த்தகத் துறையில் பல காரியங்களைச் சுலபமாகச் சாதித்துக் கொண்டு போக, துரிதமான முன்னேற்றம் காண உனக்கு உதவுகிறது. இதைத்தான் நீ அடிக்கடி சொல்கிறாய். ஆனால் நான் வேறு விதமாக நினைக்கிறேன்.''

''என்னவென்று?''

''இன்னதென்று எனக்குத் தெரியாத ஏதோ ஒரு காரணத்துக்காக நட்பு என்ற ஆயுதத்தால் என் காதலை நீ கொல்ல முற்படுகிறாய் என்று கருதுகிறேன்.''

''உங்கள் காதலை நான் ஏற்று அது கல்யாணத்தில் முடியக் கூடுமானால் என் தம்பி குணசீலன் ரொம்ப சந்தோஷப்படுவான் வேணு. கமலாவை அவன் கல்யாணம் செய்துகொள்ள இருக்கும் தடை நீங்கிவிடும்! ஆனால் அது நடக்க முடியாத காரியம்!''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்? உன் பிடிவாதத்தால் உன் தம்பியின் வாழ்க்கையையும் ஏன் பாலைவனமாக்குகிறாய்? சாரு! என்னிடம் என்ன குறையைக் கண்டாய் நீ?''

''வேணு! யூ ஆர் வேஸ்டிங் யுவர் டைம்'' என்றாள் சாருலதா. மணலில் அமர்ந்திருந்தவள் எழுந்து புடவையை உதறினாள்.

''சாரு! இந்த டேப் ரிகார்டரை நான் எதற்காகக் கொண்டு வந்தேன், தெரியுமா? உனக்காக அல்ல; எனக்காக. வேணு கானத்தைக் கேட்டு நான் மகிழ அல்ல. இந்தப் புல்லாங்குழல் இசை உன் மனத்தை அசைக்கிறதா என்று பார்க்க. கணக்குப் பார்ப்பவளின் முகத்தில் கனிவு பிறக்கிறதா, இயந்திரமாக இயங்கும் உள்ளம் இந்த இனிமையில் நெகிழ்கிறதா என்று பரிசோதனை செய்ய!''

''டாக்டர், நான் 'கினிபிக்' இல்லை. வெள்ளெலிகளோ முயல்களோ வாங்கி வைத்துக் கொண்டு சோதனை நடத்துங்கள். இல்லையென்றால் வாழைத் தோட்டத்தில் உட்கார்ந்து வயலின் வாசித்துப் பாருங்கள்!''

சாருலதா திரும்பிக் காரை நோக்கி நடந்தாள்.

வேணு கோபத்துடன் பாய்ந்து அவள் தோளைப் பற்றித் திருப்பினான். புருவங்கள் நெறிய விழித்துப் பார்த்தான்.

''வேணு! நமது சிநேகத்துக்கு எந்த விதமான இடையூறும் வரக் கூடாது என்பதுதான் என் ஆசை. ஆனால் அந்த நட்புக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க நேர்ந்தால் அது என்னால் ஏற்பட்டதாக இருக்காது; உங்கள் நடத்தைதான் காரணமாக இருக்கும்'' என்றாள் சாருலதா. அவள் கண்கள் குளமாகியிருந்தன.

(தொடரும்)

மறைந்தார் நினைவு நாள்!



R. K. இண்டஸ்ட்ரீஸ் உரிமையாளர் ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1915ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ந் தேதி பிறந்தார். 1968ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ந் தேதி ராமா, ராமா என்ற ராமநாமாவை சொல்லிக் கொண்டே இறைவனடி சேர்ந்து விட்டார். 1941ம் ஆண்டிலிருந்து பேப்பர், மை வியாபாரம் ஆரம்பித்து, தம் சொந்த முயற்சியாலும், விடாத உழைப்பாலும் அதை பெரிய ஸ்தாபனமாக்கியுள்ளார். அதன் பிறகு R. K. இண்டஸ்ட்ரீஸ் என்ற பெயர் அமைப்பில் பிளாஸ்டிக் தொழிற்சாலையை அமைத்து விரிவு படுத்தினார். இன்றைக்கும் வேளச்சேரி மெயின் ரோட்டில் அத்தொழிற்சாலை மேன்மேலும் விரிவாக நடந்து வருகிறது. அவருக்கு மக்களிடம் இருந்த நம்பிக்கையைவிட இறைவன் வழிபாட்டில் திடநம்பிக்கை பரிபூரணமாக இருந்தது. அதிலும் ஸ்ரீராமரை இதயத்தில் வைத்து பூஜித்து வந்தார். அவர் பகவானுக்கு பல திருப்பணிகள் செய்திருக்கிறார். இருந்தபோதிலும் அவருடைய ஞாபகார்த்தமாகவும் ஆத்மா திருப்தி அடையும் படியும் அவருடைய மனைவி ஸ்ரீமதி குஞ்சம்மாள் அவர்கள் சில தர்ம காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அவர் ஆத்மா சாந்தி அடைக!



ஆர். கிருஷ்ணமூர்த்தி
உரிமையாளர், ஆர். கே. இண்டஸ்ட்ரீஸ்
தோற்றம் : 9-11-1915
மறைவு : 26-11-1968

1. ஸ்ரீ கோதண்டராமர் கோவிலும் எதிரில் ஆஞ்சநேயர் சந்நிதியும் வேளச்சேரி மெயின்ரோட்டில் அமைந்துள்ளது.

2. வேதம் கற்றுக்கொள்பவர்களுக்காக மண்டபம் ஒன்று பிச்சு பிள்ளை சந்து, மயிலாப்பூரில் அமைக்கப் பட்டுள்ளது.

3. மக்கள் எல்லோருக்கும் இறுதிக் காலத்தில் நடத்த வேண்டிய உத்தர கிரியைகளைச் செவ்வனே செய்வதற்கு ராயபுரத்தில் பிரும்ம தீர்த்தம் என்ற இடத்தில் இரண்டு அறைகள் கட்டப் பட்டிருக்கின்றன. இந்த தர்ம கைங்கரியங்களில் அவருடைய திருப்பெயர் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது.

நாங்கள் இப்பொழுது நல்ல காய்கறி, பழம், பூ இவற்றை மலிவாக விற்க முடிகிறது.

இந்தியன் பாங்கின் சுலபக் கடனுதவிக்கு நன்றி







குறைவான வசதி உள்ளவர்களுக்குத் தேவையான உதவிகளை அளிக்கும் இந்தியன் பாங்கின் சுலபக் கடனுதவி மூலம் மேலும் அதிகமான காய்கறி, பழம், பூக் கடைக்காரர்கள் பயனடைகிறுர்கள்

சொந்தக் கடைகள் துவக்கவும், கடைகளை புதுப்பிக்கவும், கூட்டுறவு முறையில் குளிர் சாதன கிடங்குகளை நிறுவவும், தேவையான தவணைக் கடனுதவிகள் குறைந்த வட்டி. திருப்பிக் கொடுக்கும் சுலபத் தவணைகள்.
ஆந்திரா, பிகார், டில்லி, குஜராத், கேரளம், மகாராஷ்டிரம், மைசூர், ஒரிசா, தமிழ் நாடு, மேற்கு வங்காளம், இம் மாகாணங்களில் உள்ள 259க்கும் அதிகமான எமது கிளைகளில் இவ்வசதிகள் கிடைக்கும்.


"நிதி உதவிக்கு இந்தியன் பாங்க்"

(முழுவதும் இந்திய அரசாங்கத்துக்குச் சொந்தமானது)

கஸ்டோடியன்: ஜி. லக்ஷ்மி நாராயணன்

நாட்டின் நல்வளத்தின் சிறப்பு சேமிப்பாளர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு

Nas. 118



பார்வை இழந்தும் பார்க்கலாம்

கண் பார்வை முற்றிலும் இழந்து, எங்கும், எப்போதும் இருளை மட்டுமே பார்த்து அவதிப்படும் ஒருவரைக் கடற்கரைக்கு அழைத்துப் போகிறோம். அங்கு சென்றதும் நீலக் கடலில் வெள்ளை அலைகள் ஓய்வில்லாது தரையைத் தொட்டுச் செல்லும் சிறப்பு பற்றிக் குதூகலத்துடன் குறிப்பிடுகிறார் அவர்; நாம் வியக்கிறோம்.

அழகான பெண்ணின் ஓவியத்தை எடுத்து வைத்துக் கொண்டு, இவள் கூந்தலிலே ஒரு மலரைச் சூட்டியிருந்தால் அது அவளின் அழகைக் கூட்டும் என்று யோசனை சொல்கிறார்; நாம் யோசிக்கிறோம்.

ஏதோ ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார் என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கையில், ''இதில் 32ஆம் பக்கத்தில் இன்னாரின் வீரச் செயல்கள் பற்றி விளக்கியிருப்பதைப் படிக்கும் போதே மெய் சிலிர்க்கிறது'' என்கிறார்; நமக்கு ஒன்றும் புரியவில்லை.

பார்வை இழந்த இவருக்கு இவையெல்லாம் எப்படிப் புரிகின்றன என்பதுதான் நமது வியப்புக்குக் காரணம். ''செயற்கைக் கண்'' கொண்டு பார்க்கிறார் என்று அறியும் போது வியப்பு அதிகரிக்கிறது. ''இது சாத்தியமா....?'' என்ற கேள்விக்கு ''விரைவில் 'சாத்தியம்'' என்று நம்பிக்கையுடன் பதிலளிக்கிறார்கள் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள்.

அவர் பார்வை இழந்தவர்தான்; ஆனாலும் நாம் பார்க்கும் பொருள்களைப் புரிந்து கொள்ள அவரால் முடிகிறது. அவரது விழிகள்தான் பழுதடைந்து விட்டனவே தவிர, மூளை பழுதாகிவிடவில்லையே! அதனால்தான் பார்வையில்லை என்றாலும் பார்ப்பதை உணர முடிவதற்குக் காரணம் விழிகளின் வேலையைச் செயற்கை முறையில் வேறு ஒரு 'கண்' செய்து, விவரத்தை மூளைக்கு உணர்த்துவதுதான். இதுவே 'எலக்ட்ரானிக்' கண் கண்டுபிடிப்புக்கான அடிப்படை.



'குருடர்' என்று குறிப்பிடும் ஒருவருக்கு விழி அல்லது பார்வை நரம்பு அல்லது இரண்டுமே பாதிக்கப்பட்டிருக்கும். இவை சேதப்பட்டு இருப்பதால் அவர் எதைப் பார்த்தாலும் என்ன பார்க்கிறோம் என்று உணர முடிவதில்லை. இதுதான் குறை. நாம் பார்க்கும் ஒரு பொருளைப் படம் பிடிக்கிறது விழி; பிறகு அந்த உணர்வு அலைகளை மூளைக்கு அனுப்புகின்றன பார்வை நரம்புகள்; இவ்விரண்டு பாகங்களும் இவ்விரண்டு வேலைகளையும் செய்வதால்தான் நாம் எதைப் பார்க்கிறோம், அது எப்படி இருக்கிறது என்பனவற்றை மூளை அறிய முடிகிறது. இவ்விரு வேலைகளும் தடைப்பட்டால் பார்ப்பதை உணர முடியாது. குருடர்களாக இருப்பவர்களின் குறை இதுதான்.

ஆனால், இவ்விரு பாகங்களை இழந்து தவிக்கும் ஒருவரின் மூளைக்கு நேரடியாக உணர்வு அலைகளை அனுப்பி வைப்பதன் மூலம் அவரும் எதைப் பார்க்கிறோம், அது எப்படி இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. இதுதான் இப்போதைய கண்டுபிடிப்பு.

இதற்காக மூளையின் 'காட்சிப் பகுதி'யில் 'எலக்ட்ரோட்' என்னும் மின்வாய்களைப் பொருத்துகிறார்கள். இவை பிளாட்டினத்தால் ஆனவை. மூளையின் காட்சிப் பகுதி முழுவதையும் மூடும் வகையில் எண்பது எலக்ட்ரோட்களைப் பொருத்தி விடுகிறார்கள். தன்னிடம் வந்து சேரும் உணர்வு அலைகளை மூளையைத் தொட்டுக் கொண்டிருக்கும் எலக்ட்ரோட்கள் மூளைக்குள் செலுத்துவதால் பார்த்தவற்றை உணர முடிகிறது.

இதில் அடுத்த கட்டம், உணர்வு அலைகளை இந்த எலக்ட்ரோட்களுக்கு எப்படி அனுப்புவது என்பதுதான். வெளியிலிருந்து இந்த 'சிக்னல்'களை உள்ளே எடுத்துச் செல்லத் தோலின் வழியே கம்பிகளைப் பொருத்துவது, வேறு வகை சங்கடங்களைத் தோற்றுவிக்கும் என்று உணர்ந்து இதற்கு ஒரு வழி கண்டனர். மண்டை ஓட்டின் உட்புறமாக மிகச் சிறிய ரேடியோ டிரான்ஸ்மிட்டர்களைப் பொருத்தி எலக்ட்ரோட்களுடன் இணைத்து விடுகிறார்கள்.


இப்போது அடுத்துச் செய்ய வேண்டியது ரேடியோ டிரான்ஸ்மிட்டருக்கு உணர்வு அலைகளை அனுப்பி வைப்பதுதான். மிகவும் சிரமமானதும் முக்கியமானதுமான இந்தக் கட்டத்துக்காகப் பரீட்சார்த்த முறையில், அறுவை சிகிச்சை செய்து, மண்டையைத் திறந்து, சோதனைகள் நடத்திப் பார்த்தனர். இதைத் தொடர்ந்து இதற்கு நிரந்தரமான ஓர் அமைப்பு ஏற்படுத்தும் ஆராய்ச்சியில் இப்போது பிரிட்டிஷ் உடற்கூறு நிபுணர்களும், மருத்துவ நிபுணர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்தச் சோதனையின் வெற்றியில்தான் பார்வையிழந்தவர்களின் ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது. எலக்ட்ரானிக் யுகத்தில் எதுதான் நடக்காது?


பால்வாகன் — பி. ஐ. எஸ்.

இந்தியாவின் ரேடியோக்கள் மற்றும் டிரான்ஸிஸ்டர்கள் தொழிலிலேயே அதிகமாக ஏற்றுமதிசெய்யும் மர்பி அளிக்கும்...



மினி மாஸ்டர் 4
2 பாண்ட் ஆல்-வேவ்
ரூ. 220.00*






நம்நாட்டிலும்,
வெளிநாட்டிலும்
டிரான்ஸிஸ்டர்களில்
அதிகமாக விரும்பி
வரவேற்கப்படுவது!

மினி பாப் 2
2 பாண்ட் ஆல்-வேவ்
ரூ. 175.00*

ம்யூஸிஷியன்
மீடியம் வேவ்
ரூ. 125.00*



முஸாபிர்
3 பாண்ட் ஆல்-வேவ்
ரூ. 283.00*

சில டிரான்ஸிஸ்டர்களே நீங்கள் செலவழிக்கும் பணத்திற்கு சிறந்த பலனை அளிக்கிறது-கஷ்டத்தை குறைப்பது!

இதனாலேயே, இந்நாட்களில் மேலும் மேலும் அதிகமான ஜனங்கள் மர்பியையே விரும்பி வாங்குகிறார்கள். உண்மையாக 60,000 த்திற்கு மேற்பட்ட மர்பி-இந்தியா ரேடியோக்களும், அதன் கருவிகளும், சென்ற வருடம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன-மேலும் 70,000த்திற்கு மேற்பட்ட ஆர்டர்கள் கைவசமுள்ளன.

இதை நீங்கள் படிக்கும்போதே, அண்மையில் தானாவில் துவக்கப்பட்ட மர்பியின் தொழிற்சாலையில் மேன் மேலும் தரமான டிரான்ஸிஸ்டர்கள் உற்பத்தியை பெருக்கத் துவங்கி விட்டது.

ஆனால், இதன் தன்மையை மதிப்பிடுவதை உங்களிடமே விட்டு விடுகிறோம். அண்மையிலுள்ள விற்பனையாளர்களிடம் சென்று இதன் ஆச்சர்யமான தரத்தை ஒத்திட்டு பாருங்கள். பிறகு உண்மையான தரமான செட்டிலிருந்து கிடைக்கும் பேரானந்தத்தை உணர்வீர்கள்!

* விலை விற்பனை வரி உள்பட-இதர வரிகள் தனி.



மர்பி வெற்றியை மகிழ்விக்கிறது!

விளையாட்டு மைதானம்



'அய்க்கண்'

எங்கள் ஆபீஸ் அன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. ஆபீஸ் மட்டுமா, ஆபீஸில் பணியாற்றும் எல்லோரும் 'ஜம்'மென்று 'டிரஸ்' செய்து கொண்டு வந்திருந்தார்கள்.

அழுக்கு வேட்டி அப்பாசாமி என்ற விருதுப் பெயர் கொண்ட காஷியர்கூட, தூய்மையான தும்பைப்பூ நிற வேட்டியுடன் அன்று ஜொலித்தார். ஒவ்வொரு பொத்தானும் ஒவ்வொரு 'கலராக' வான வில்லாக அமைந்திருக்கும் 'கோட்' அணிவதுதான் அக்கௌண்டெண்ட் கிருஷ்ண மூர்த்தியின் 'டிரேட் மார்க்'. அவரே அன்று எல்லாப் பொத்தான்களையும் ஒரே கலராக வைத்துத் தைத்திருந்தார். என்னைப் போல் இளைஞர்கள், தங்கள் 'மாரியேஜ் ஸூட்'டிலே கம்பீரமாகக் காட்சியளித்தார்கள்.

'டெஸ்பாட்சிங் க்ளார்க்' சபேசனின் 'கோட்'டை, 'வெள்ளைக்காரன் இந்தியாவுக்கு வந்த போது தைத்த கோட்' என்று தாராளமாகச் சொல்லலாம். அந்தப் புராதன கோட் அன்று அவர் உடலை அணி செய்யவில்லை. புதிதாக ஒரு கோட் அணிந்திருந்தார். "என்ன ஸார், பழைய 'கோட்'டை மியூஸியத்துக்கு டெஸ்பாட்ச் செய்திட்டீங்களா?" என்று கேலி செய்து கொண்டிருந்தோம்.

எல்லாரும் வாசலுக்கு ஓடி வரவேற்றோம். சொக்கலிங்கத்தைப் பார்த்ததும் எங்கோ பார்த்த நினைவு என் மனத்தில் பளிச்சிட்டது.

ஒ.... இவன் என் 'காலேஜ் மேட்' அல்லவா ?

பழைய மானேஜர் ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்தினார். என் முறை வந்த போது —

"இவர் மிஸ்டர் அழகப்பன். அக்கவுண்ட் செக்ஷன் க்ளார்க்...." என்று அவர் அறிமுகப்படுத்தும் போது என்னைக் கூர்ந்து பார்த்தார் சொக்கலிங்கம்.

"அடே, நீ அழகு இல்லே ?... டேய், ஸ்டேன்லி மாத்யூஸ் ! சௌக்கியமா?" என்று மகிழ்ச்சியால் பொங்கி என்னைக் கட்டித் தழுவிக் கொண்டான், சொக்கலிங்கம், அது ஆபீஸ் என்பதையும் மறந்து.

'டேய், 'லெப்ட்' சொக்கு!' என்று கூவ வேண்டும் போல் இருந்தது எனக்கு.

அடேயப்பா ! கல்லூரி நண்பர்கள் எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கிறோம்?

" அழகு !.... 'ஸெம்ஸைடு கோல்' கந்தரம் எங்கேயிருக்கிறான்? தெரியுமா?" என்று மேலும் விசாரித்தான் சொக்கலிங்கம்.

"திருவெறும்பூர் ஒர்க்ஷாப்பில் இருக்கிறதாகக் கேள்விப்பட்டேன்."

பழைய நினைவுகளில் சில விநாடிகள் லயித்து நின்றோம் நாங்கள் !

பீட்டில்ஸ் கிராப்பும் கௌபாய் ட்ரௌஸரும் 007 — ஸீன்கானரி ஸ்டைலுமாக ஆபீசுக்கு வருபவன் குமார். எத்தனையோ தடவை முயற்சி செய்து பார்த்தும், பி. ஏ. பட்டத்துக்கு அவன் பெயரின் பின்னால் சேர்ந்து கொள்ளும் பாக்கியம் கிடைக்கவில்லை ! எங்கள் ஹெட் ஆபீஸில் க்ளார்க்காகச் சேர்வதற்கு வேண்டிய எந்த 'க்வாலிபிகேஷனும்' அவனுக்கு இல்லைதான். ஆனால் மற்றவர்கள் பெற முடியாத தகுதி அவனுக்கு இருந்தது. முதலாளியின் தங்கை மகனாக அவன் பிறந்திருந்தான் ! நாளொரு சினிமாவும் பொழுதொரு ஹோட்டலுமாகச் சுற்றும் அந்த 'மைனர்'கூட அன்று ஒழுங்காகத் தலை வாரி, 'டீக்'காக டிரஸ் செய்து வந்திருந்தான்.

எப்பொழுதும் 'லோகட் ஜாக்கெட்'டும், 'ரவிக்'கும் நைலானும் 'லிப்ஸ்டிக்'குமாக, சினிமா நட்சத்திர பாணியில் கவர்ச்சியாக வரும் ஸ்டெனோ லாவண்யா அன்று வாயல் புடவையும் ரவிக்கையுமாக அடக்கத்துடன் ஸிம்பிளாக டிரஸ் செய்திருந்தாள். ஆனால் எப்பொழுதும் கைத்தறிப் புடவையில் எளிமையாகத் தோன்றும் 'டைப்பிஸ்ட்' மீனு அன்று நைலக்ஸில் கவர்ச்சியாகக் காட்சியளித்தாள்! இந்த விநோதத்தைப் பார்த்து எல்லோரும் மூக்கின் மேல் விரல் வைத்துக் கொண்டிருந்தோம் !

அன்று என்ன விசேஷம் ?

எம். ஏ. பட்டம் பெற்ற பிறகு அமெரிக்காவில் 'பிஸினஸ் மானேஜ்மெண்ட் அண்ட் அட்மினிஸ்ட்ரேஷனி'ல் டிப்ளமா வாங்கிய சொக்கலிங்கம் என்ற புது மானேஜர், எங்கள் ஹெட் ஆபீசுக்கு வருகிறார். அவர், முதலாளிக்கு நெருங்கிய உறவினர் என்றும், அவர் சொல்லும் வார்த்தையில் சிறிதுகூட மீறமாட்டார் முதலாளி என்றும் விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக் கொள்ளப் பட்டது.

ஆபீஸ் கடிகாரம், 'டாண், டாண்...' என்று ஒலிக்க ஆரம்பித்தது. மணி பத்து.

அதே சமயத்தில் வாசலில் கார் சப்தம்.


புது மானேஜர் வந்து விட்டார். அமெரிக்கா ரிட்டர்ன்ட்டா, கொக்கா?

'பங்க்சுவலா'கப் பத்து மணிக்கு வந்திருக்கிறார் சொக்கலிங்கம்.

நாங்கள் முதன் முதலில் அழகப்பா கல்லூரியில் கால் பந்து விளையாட்டு மைதானத்தில்தான் நண்பர் களானோம். அப்பொழுது ஜூனியர் இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்திருந்தோம்.

உயர்நிலைப் பள்ளியிலிருந்தே நான் கால்பந்து விளையாட்டில் நிபுணன். கல்லூரியில் முதலாண்டி லேயே கால் பந்து டீம் காப்டனாகத் தேர்ந்தெடுக் கப்பட்டிருந்தேன். 'ரைட் இன்ஸைடு பொஸிஷனில்' ஆடுபவன் நான்.

ஆட்டம் துவங்கும் போது, இரண்டு 'டீம்' விளையாட்டாளர்களும் அவரவர் இடங்களில் நின்று கொண்டிருப்பார்கள். ஆட்டம் ஆரம்பிக்க 'அம் பயர் விசில்' ஊதியதும், 'சென்டர் பார்வர்டு' என்னிடம் பந்தைத் தட்டிக் கொடுத்தால், உடனே எதிரிகள் எதிர்பாராத விதத்தில் மின்னல் வேகத் துடன், நாகப் பாம்பு போல் வளைந்து நெளிந்து எதிரியின் மூழுக்குள் ஊடுருவி, பல ஆட்டக்காரர் களுக்கும் 'டிமிக்கி' கொடுத்து விட்டு, எதிரியின் 'பாக் ஏரியா' வுக்குள் நுழைந்துவிடும் தனித் திறமை எனக்கு உண்டு. அங்கே வந்ததும், என் பக்கத்தில் ஓடி வரும் 'ரைட் அவுட்'டுக்கோ, 'லெப்ட் பார்வர்டு'க்கோ பந்தை சப்ளை செய்ததும் அவர்கள் 'கோல்' அடிக்க வேண்டியதுதான் பாக்கி. எதிரி 'டீம்' ரொம்ப 'வீக்'காக இருந்தால் நானே கோலுக்குள் பந்தை அடித்து விடுவேன்.



பந்தை முதலில் தட்டும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், பெரும் பாலும் ஒரு கோல் அடித்து விடு வோம், இந்தத் திடீர்ப் பாய்ச்சல் முறையில். இந்த அதிரடித் தாக்குத லினால் பல டீம்களைத் திணற வைத் திருக்கிறோம். ஆகையால், இங்கிலாந் தின் உலகப் புகழ்பெற்ற கால் பந்து விளையாட்டு நிபுணரின் பெயரை வைத்து, செல்லமாக 'ஸ்டேன்லி மாத்யூஸ்' என்று என்னைக் கூப்பிடு வது வழக்கம்.

கல்லூரியில் நானும் 'லெப்ட்' சொக்கலிங்கமும், 'லெம் சைட் கோல்' சுந்தரமும் எப்பொழுதும் ஒன்றாகவே சுற்றுவோம். 'த்ரீ மஸ் கட்டியார்ஸ்' என்று கேலி செய்வார் எங்கள் கல்லூரி 'பிஸிகல் டைரக்டர்'.

அந்த இனிமையான கல்லூரி வாழ்வு முடிந்ததும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலைக்குச் சிதறிப் போய் விட்டோமே!

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இத்தகைய எதிர்பாராத சந்திப்பு!...

அன்று முழுவதும் என் உள்ளம் மகிழ்ச்சியால் விம்மிக் கொண்டிருந் தது. ஆபீஸ் நண்பர்கள் என்னை ஒரு மாதிரியாகப் பார்க்க ஆரம்பித் தார்கள். அவர்கள் கண்களில் தெறித்துச் சிதறிய பொறாமைக் கனல்—

காரணம் இல்லாமலில்லை. கூடிய விரைவில் எங்கள் ஹெட் ஆபீஸுக்கு ஒரு 'டெபுடி மானேஜர்' தேவைப் படுகிறது. அதற்கு யாரை 'பிர மோஷன்' செய்வது என்பது முத லாளிக்கு இன்னும் தெளிவுபடவில்லை. ஒரே மாதிரி சர்வீஸ் உள்ள நாலைந்து பேர்கள்—நான் உள்பட — டெபுடி மானேஜர் பதவிக்கு ஏற்ற தகுதிக ளோடு இருந்தோம். யாரேனும் ஒருவரைத் தேர்ந் தெடுக்கலாமா, அல்லது ஒரு 'காம்பெட்டிடிவ் டெஸ்ட்', வைத்து அதிக மார்க் வாங்குபவனை டெபுடி மானேஜராக்க லாமா என்று யோசித்துக் கொண் டிருந்தார் முதலாளி. இந்த நிலையில் முதலாளிக்கு ரொம்ப வேண்டியவ ரான புதிய மானேஜர், நான் கல் லூரி நண்பராக இருப்பதால் என் பெயரை டெபுடி மானேஜர் பதவிக் குச் சிபாரிசு செய்துவிட்டால்....

ஒரு வேளை இந்த மாதிரி என் னத்தின் பொறிதான், என் சிந்தனை

யிலும் கருக்கொண்டு உள்ளத்தை மகிழ்ச்சியால் துள்ளச் செய்கிறதோ ?

அன்று ஆபீஸ் நேரம் முடிந்ததும், என்னைக் கூப்பிட்டனுப்பினான் சொக்கலிங்கம்.

"டேய், அழகு ! உன்னை மறுபடியும் சந்தித்ததிலே எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? ஐ யாம் வெரி க்ளாட்... அந்தக் காலத்திலே நீ டீம் காப்டனாகவும் நான் வைஸ் காப்டனாகவும் இருந்த அந்த இனிமையான நாட்கள் – ஓ.... தோஸ் ஸ்வீட் டேய்ஸ் !" என்று கண்ணை மூடி, நினைவுகளின் சுவையில் லயித்தான் சொக்கலிங்கம்.

"மானேஜர்...." என்று நான் ஆரம்பித்ததும், செல்லமாக என் தலையில் தட்டினான் அவன்.

"டேய், ஸ்டேன்லி மாத்யூஸ் ! கடிகாரத்தைப் பார்.... டையம் ஈஸ் பைவ் – டென். அதாவது ஆபீஸ் முடிஞ்சு பத்து நிமிஷமாச்சு... இப்போ நான் மானேஜர் இல்லே: நீ க்ளார்க் இல்லே.... நீ ஸ்டேன்லி மாத்யூஸ் : நான் லெப்ட் சொக்கு.... வா, வீட்டுக்குப் போவோம்" என்று சிரித்துக் கொண்டே என் கையைப் பிடித்து இழுத்துச் சென்றான் காரை நோக்கி.

"பார்த்தாயா அழகு, காலம் எப்படி நம்மை மாற்றி விட்டது பார் ! மாட்சிலே ரெண்டு டீம்களும், இன்டர்வெல்லில் இடம் மாறுவது மாதிரி, முன்னே நீ காப்டன்: நான் வைஸ் காப்டன்.... இப்போ நான் மானேஜர்; நீ...." என்று சிரித்துக் கொண்டே என் தோளில் தட்டினான்.

'இப்போ நீ மானேஜர்; நான்...டெபுடி மானேஜர்' என்று சொல்லலாம் போல் தோன்றியது எனக்கு.

சேச்சே ! அதற்குள் என்ன அவசரம் ?

" அழகு ! முதலில் என் வீட்டிலே உனக்கு டிபன் காப்பி. பிறகு உன் வீட்டுக்குப் போவோம்...." என்று என்னை, தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான் சொக்கலிங்கம்.

வீட்டில் மனைவி ராஜேசுவரியிடம் என்னைப் பிரமாதமாய்ப் புகழ்ந்துரைத்தான்.

"ராஜீ! இவன் எங்கள் காலேஜ், ஸ்டேன்லி மாத்யூஸ் என்ற அழகப்பன். புட்பால் விளையாட்டில் சூரன். காலேஜ் டீம் காப்டன் இவன்தான்..... பாவம், இவன் மட்டும் மேல் நாட்டிலே பிறந்திருந்தால், இன்றைக்கு இருக்கிற பீல், ஈஸ்பிரோ, லோசன் வர்கா முதலான விளையாட்டுக்காரர்களெல்லாம் இவனிடம் பிச்சை வாங்கணும். ஏழை இந்தியாவிலே பிறந்து 'என்கரேஜ்மெண்ட்' இல்லாமல், பைலையும் பேனாவையும் மேஜையையும் கட்டிக்கிட்டு அழறான். என் ஆபீஸிலே க்ளார்க்காக இருக்கான். ராஜீ ! நெறைய டிபன் கொடு.... நல்லாச் சாப்பிடுவான்...." என்று கேலியும் சிரிப்புமாக வித்தியாசமில்லாமல் பழகினான் சொக்கலிங்கம்.

அவனைப் போல் ராஜேசுவரியும் அன்பும் பண்பும் நிறைந்த படித்த பெண்.

" அடுத்த தடவை வரும் போது உங்கள் வீட்டிலே—அக்காவையும் கூட்டி வாருங்கள்" என்று என்னிடம் சொன்னாள் ராஜீ.

"ராஜீ சொன்னால் சொன்னதுதான். ஆபீஸிலே என் வார்த்தை 'பைனல்'. இங்கே அவள் வார்த்தைதான் 'பைனல் அண்ட் லீகலி பைண்டிங் ! தெரிந்ததா ? வருகிற ஞாயிற்றுக்கிழமை உனக்கும் உன் மனைவிக்கும் இங்கே விருந்து" என்றான் சொக்கலிங்கம்.

சாப்பிட்டுச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டேன் நான்.


"டேய், என்ன நீயாகக் கிளம்பிட்டே ? நான் முன்னமே சொல்லலே? காரிலே உன் வீட்டிலே 'ட்ராப்' பண்ணிடறேன் என்று" என்று கூறிக் காரை 'ஸ்டார்ட்' செய்து விட்டான்.

என் வீட்டில் மனைவியிடம் அவனை அறிமுகப்படுத்தினேன். புதிய மானேஜர் என்றதும் அவள் விழுந்து விழுந்து உபசாரம் செய்தாள்.

டிபன் தட்டுக்களை எங்கள் இருவர் முன்பும் வைத்ததும், "டேய், நீதான் என் வீட்டிலேயே நிறையச் சாப்பிட்டுட்டியே...இப்போ நான் நெறையச் சாப்பிடறேன்" என்று சொல்லி, வயிறு நிறையச் சாப்பிட்டான்.

இதைக் கண்ட என் மெய் சிலிர்த்தது.

கல்லூரியில் படிக்கும் போது இப்படித்தான். என் வீட்டுக்கு வரும்போதெல்லாம், நாங்கள் சாப்பிடுகிற கேழ்வரகுத் தோசையை



யும், சோளக் கஞ்சியையும் கேட்டு வாங்கி ஆசையோடு சாப்பிடுவான்.

''எங்க வீட்டிலே நெய்த் தோசையும் இட்டிலியும் தினமும் சாப்பிட்டுப் 'போர'டிக்குப் போச்சுடா!'' என்பான்.

என் நெஞ்சம் பெருமையால் பூரித்தது.

'டேய், லெப்ட் சொக்கு! நீ எத்தனை தங்கமான நண்பனடா!'

திரும்பிச் செல்லும் போது நினைவு படுத்தி விட்டே சென்றான் அவன்.

''டேய் அழகு! 'டோன்ட் பர்கெட்'! வருகிற ஞாயிற்றுக்கிழமை மாலை, மிஸஸ் அண்டு மிஸ்டர் அழகப்பன், சொக்கலிங்கம் வீட்டுக்கு வருகிறார்கள்.''

ஞாயிறு மாலை, நானும் பூங்கோதையும், அவனுடைய பங்களாவுக்குச் சென்றோம். சொக்கலிங்கமும் ராஜியும் ஆழ்ந்த அன்போடும் பரிவோடும் வரவேற்று, சிற்றுண்டி கொடுத்தார்கள்.

பூங்கோதையும் ராஜேசுவரியும் சில நிமிடங்களிலே அத்தியந்த சிநேகிதர்களாய் விட்டார்கள்.

சிற்றுண்டிக்குப் பிறகு நானும் சொக்கலிங்கமும் பேசிக் கொண்டிருந்தோம். எதைப் பற்றி? விளையாட்டைப் பற்றித்தான்!

அமெரிக்காவில் பேஸ் பால், பாஸ்கெட் பால் முதலான விளையாட்டுக்களுக்குள்ள சிறப்பு, விளையாட்டாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகள், ஊக்கம், பயிற்சி முறைகள் – இப்படியெல்லாம் ஆரம்பித்து இந்திய நிலைமைக்குப் பேச்சு வந்து சேர்ந்தது.

''இங்கே யார் 'ஸ்போர்ட்ஸ்மென்'களைக் கவனிக்கிறார்கள்? இளமையிலிருந்தே அவர்களுக்கு வயிற்றுப் பிரச்னையே பெரிதாக இருக்கிறது. அவர்கள் சோற்றுக்குப் போராடுவார்களா, பந்துக்குப் போராடுவார்களா?... மேலும், 'நேஷனல் டீம்'களுக்கு ப்ளேயர்ஸ் ஸெலக்ஷன் செய்வதிலும் பாரபட்சம், சிபாரிசு, தாட்சண்யம் எல்லாம் புகுந்து விடுவதாகச்



''இரண்டு பிளேட் ஸ்வீட். இரண்டு பிளேட் மிக்சர். இரண்டு பிளேட் பூரி கிழங்கு என்று இப்படி இவளிடம் வை. பாவம்! இரண்டு நிமிஷமாகப் பட்டினி!''



''மாமா! உங்க அம்பிப்பயலுக்கு மந்திரஜால வித்தையெல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கேன். பெட்டிச் சாவி, கார் சாவி, பீரோ சாவி, குண்டூசி, ரப்பர், பச்சை வெங்காயம் எல்லாவற்றையும் விழுங்கிடுவான் !''



'' வராத மனுஷன் வந்திருக்கிறீர்களே ! காப்பி சாப்பிடுறீர்களா ?''

'' காப்பி சாப்பிடுற பழக்கத்தை விட்டாச்சு. ஆப்பிள் ஜூஸோ ; ப்ரூட் ஸாலட்டோ இருந்தால் கொடுங்க போதும்.''

சிலர் சொல்கிறார்கள்..... ஆனால், டேய் அழகு! நீ காலேஜ் டீம் காப்டனாக இருக்கும் போது, எவ்வளவு நேர்மையாக நடந்து கொண்டாய்? என்னை டீமில் சேர்த்துக் கொள்வதில்கூட நேர்மையும் கண்டிப்பும் காட்டினாயே, அதை நினைக்கும்போது நான் இப்பொழுதும் எவ்வளவு பெருமைப் படுகிறேன், தெரியுமா?'' என்றான் சொக்கலிங்கம்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது!

சொக்கலிங்கத்தைக் காலேஜில் டீமில் சேர்த்துக் கொண்டது.... அதை இன்னும் நினைவு வைத்திருக்கிறானா அவன்?

நான் காப்டனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, காலேஜ் டீம் விளையாட்டாளர்களைப் பொறுக்கும் விளையாட்டுக்கள் நடந்தன. சொக்கலிங்கம் ஆடிய 'லெப்ட் பொஸிஷ'னுக்கு நிறையப் போட்டி இருந்தது. அவனுக்கு 'ஸெலக்ஷன்' கிடைப்பது சந்தேகமாயிருந்தது. அப்பொழுது அவன், காப்டனான என்னை அணுகினான்.

''அழகு! நீ கொஞ்சம் சிபாரிசு செய்தால், பிஸிகல் டைரக்டர் என்னை ஸெலக்ட் செய்வார்டா. ப்ளீஸ்!'' என்று கெஞ்சினான்.

''ஐ யாம் ஸாரி, சொக்கு! விளையாட்டு மைதானத்திலே சிபாரிசுக்கோ, நட்புக்கோ இடமில்லை. நேர்மைக்கும் திறமைக்கும்தான் இடம். என்னை மன்னித்துக் கொள்'' என்று சொல்லி விட்டேன். பிறகு சொக்கலிங்கம் தன் திறமையால் ஸெலக்ட் ஆகிவிட்டான். உடனே அவனை மனமார மகிழ்ச்சியுடன் பாராட்டினேன்.

''கங்கிராட்ஸ், சொக்கு! எனக்கு இப்போ ரொம்ப மகிழ்ச்சி.''

''தாங்க்ஸ், அழகு! ஸெலக்ட் ஆனதுக்கு என் திறமை மட்டும் இல்லே. உன் சிபாரிசும் காரணமாயிருக்கும் என்று நினைக்கிறேன்'' என்று சிரித்தான் அவன். அப்போது பக்கத்தில் இருந்த சுந்தரம், ''ஆமாமா... அழகப்பனும் சொல்லியிருப்பான்...''

என்று ஒத்து சுறினான். ஆனால் நான் மறுத்து விட்டேன்.

'' இல்லை, சொக்கு ! நீ செலக்ட் ஆன துக்கு முழுக்க முழுக்க உன் திறமைதான் காரணம். யு ஹாவ் ப்ரூவ்ட் யுவர் செல்ஃப்... யு ஆர் எ ட்ரூ ஸ்போர்ட்ஸ் மென்... நான் சிபாரிசு பண்ணி உனக்கு செலக்ட் ஆகியிருந்தால், அதிலே எனக்கு இவ்வளவு மகிழ்ச்சி இருக்குமா ? இவ்வளவு தூரம் பாராட்ட முடியுமா?....'' என்றேன்.

சொக்கலிங்கம் படிப் படியாக, திறமையைக் காட்டி மறு ஆண்டிலே எனக்கு வைஸ் – காப்டனாகவே வந்து விட்டான்.

அந்த நிகழ்ச்சியை இன்னும் நினைவு வைத்திருக்கிறான் என் நண்பன். நினைவு வைத்திருப்பது மட்டுமா ? அந்த நாளில் என்னுடைய நேர்மையை நினைத்துப் பெருமைப் படுகிறானே ?

அவனிடம் நான் போய், 'எனக்கு டெபுடி மானேஜர் பதவிக்கு சிபாரிசு செய்' என்று சொல்வதா ? சேச்சே !

விளையாட்டு மைதானத்தில் சிபாரிசுக்கோ நட்புக்கோ இடம் இல்லையென்றால், வாழ்க்கையும் ஒரு போட்டி விளையாட்டுத்தானே ? ஆபீஸும் ஒரு வாழ்க்கை விளையாட்டு மைதானந்தானே ? அதிலே சிபாரிசுக்கோ நட்புக்கோ ஏது இடம் ? நேர்மைக்கும் திறமைக்கும்தான் அங்கே இடமுண்டு !

என்னுடைய நேர்மைத் தத்துவம், 'பூமராங்' போல, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, என்னையே திருப்பித் தாக்கிவிட்டதே!

டெபுடி மானேஜர் பதவி பற்றி வாயே திறக்காமல் வீடு வந்து சேர்ந்தேன்.

சில வாரங்கள் கடந்தன.

ஒரு நாள் மாலை. ஆபீஸ் வேலையில் மூழ்கியிருந்தேன். அப்போது மெதுவாக, ஸ்டெனோ லாவண்யா என் மேஜை எதிரில் வந்து நின்றாள். மேஜையிலிருந்த ஏதோ ஒரு 'பைலை'ப் புரட்டிப் பார்ப்பது போல் என்னைப் பார்த்தவாறு நின்றாள். அப்படி நின்றால் என் சம்பந்தமான ஏதோ ஓர் ஆபீஸ் செய்தி சொல்லப் போகிறாள் என்று அர்த்தம்!

'என்ன?' என்னும் பாவனையில் அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

''ஸ்வீட் நியூஸ்.... எத்தனை ஸ்வீட் தருவீர்கள் ?'' என்றாள் மெல்லிய சிரிப்புடன்.

'' எத்தனை ஸ்வீட் என்பது, நீ சொல்கிற நியூஸின் ஸ்வீட்னைப் பொறுத்தது!''

''நியூஸைச் சொல்லட்டுமா ?... மிஸ்டர் அழகப்பன் அவர்களை, டெபுடி மானேஜர் பதவிக்குச் சிபாரிசு பண்ணி, முதலாளிக்கு எழுதியிருக்கிறார் மானேஜர் ஸார் – அதாவது உங்கள் காலேஜ் ப்ரண்ட்.''

திகைத்து நின்றேன் நான்.

'என்னையா சிபாரிசு செய்திருக்கிறார் மானேஜர் ?.... டேய், லெப்ட் சொக்கு ! உன்னை டீமில் ப்ளேயராக எடுத்துக் கொள்ளக்கூட சிபாரிசு செய்ய மறுத்த இந்த அழகப்பனுக்கா, டெபுடி மானேஜர் பதவியைச் சிபாரிசு செய்திருக்கிறாய்?... எத்தனை பெருந்தன்மையடா உனக்கு !'

ஒரு விநாடி சிந்தித்தேன்.

டெக்ஸாஸ் கோமகவர் ஒருவர் தமது மகன் டாலர் நோட்டு ஒன்றைக் கொளுத்தி சிகரெட் பற்ற வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டுக் கோபித்துக் கொண்டார்.

''உனக்கு எவ்வளவு தடவை நான் சொல்லியிருக்கிறேன், சின்ன வயதில் சிகரெட் குடிக்கக் கூடாது என்று !''

ஆதாரம்: பேஜண்ட்
தகவல்: ரமணன்

விளையாட்டு மைதானம் – போட்டி விளையாட்டு – வாழ்க்கைப் போட்டி – நட்பு, சிபாரிசு – நேர்மை திறமை –

உடனே மானேஜர் அறைக்குள் நுழைந்தேன்.

''மானேஜர் ஸார் !''

நிமிர்ந்து பார்த்த சொக்கலிங்கம் புன்னகையுடன் தலையை அசைத்து என்னை உட்காரச் சொன்னான். நான் உட்காரவில்லை.

''மானேஜர் ஸார் ! ப்ளீஸ்! எக்ஸ்க்யூஸ் மீ...! டெபுடி மானேஜர் பதவிக்கு என் பெயரைச் சிபாரிசு செய்திருப்பதாக....''

''ஏன்? அதிலென்ன தவறு ?... உங்களைப் பற்றிய பழைய மானேஜருடைய 'ரிப்போர்'டைப் பார்த்தேன். உங்கள் வேலையையும் இது வரை கவனித்தேன். நீங்கள்தான் அதிகத் திறமையுள்ளவர் என்பதைக் கண்ட பிறகுதான் சிபாரிசு செய்தேன். யு டிஸர்வ் தட் ப்ரமோஷன்....''

''எக்ஸ்யூஸ் மி ஸார்! அந்தப் பிரமோஷனை சிபாரிசில் பெறுவதற்கு எனக்கு விருப்பமில்லை. போட்டிப் பரீட்சை வைத்து அதில் என் திறமையைக் காட்டி 'ப்ரமோஷன்' பெறவே விரும்புகிறேன். விளையாட்டுப் போட்டியில் மட்டுமல்ல – வாழ்க்கைப் போட்டியிலும் சிபாரிசுக்கு இடமில்லை என்று நம்புபவன் நான்....''

சொக்கலிங்கம் சிறிது நேரம் என் முகத்தையே பார்த்தான். பிறகு புன்முறுவலுடன் எழுந்து என் கைகளைப் பிடித்துக் கொண்டு பலமாகக் குலுக்கினான்.

அவன் கைகளிலே நான் ஸ்பரிசித்த அன்புத் தன்மை...?

அவன் கண்களில் நான் பார்த்த பெருமித ஒளி...?

''சபாஷ்! ஸ்டேன்லி மாத்யூஸ்! ஐ ஆம் ஸோ ப்ரவுட் ஆப் யூ, மை டியர் ப்ரெண்ட்! உன்னை என் நண்பன் என்று சொல்லிக் கொள்வதில் எவ்வளவு பெருமைப்படுகிறேன், தெரியுமா?...உன் நேர்மைக்கும் திறமைக்கும் இந்த டெபுடி மானேஜர் பதவி மிகவும் சிறியது. உனக்கு இன்னும் பெரிய பதவிகளெல்லாம் காத்திருக்கும் எதிர் காலத்தில்... விஷ்யு பெஸ்ட் ஆப் லக்!''

''தாங்க்யூ ஸார்!''

நிமிர்ந்த நெஞ்சுடன் அறையை விட்டு வெளியேறி என் இடத்தில் அமர்ந்தேன்.

என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தாள் லாவண்யா. 'இப்படியும் ஓர் அசடு இருக்கிறதே!' என்று நினைத்திருப்பாள்.

'ஐ ஆம் எ ட்ரூ ஸ்போர்ட்ஸ்மென்' என்று அவளிடம் சொல்ல வேண்டும் போலிருந்தது எனக்கு!



பம்பாய் – தாதர் ராஜா ஜார்ஜ் பள்ளி மண்டபத்தில் சென்ற அக்டோபர் 26ம் தேதி அன்று நிகழ்ந்த குமாரிகள் விஜயா – பத்மாவின் பரதநாட்டிய அரங்கேற்றம். அவர்களுடைய பரதநாட்டிய நடனக் கலைத்திறனுக்கும் அவர்கள் பரதம் பயின்ற கலாஸதன் நடனப் பள்ளியின் கலாசேவைக்கும் எடுத்துக் காட்டாக விளங்கிற்று. இவ்விரு சிறுமியரும் B A S F லிமிடெட் கம்பெனியைச் சார்ந்த திரு T. P. D. நாராயணனின் புதல்விகள். பன்னிரண்டு அம்சங்களைக்கொண்ட நிகழ்ச்சி பம்பாய் ரசிகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. சபாஷ் விஜயா-பத்மா!



நாகபுரி சகோதரிகளான குமாரி ராஜலட்சுமியும் குமாரி சரஸ்வதியும் சென்னையில் சமீபத்தில் பல அரங்குகளில் நடன நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர். கலைச் சிறப்பும் அழகும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் இச்சகோதரிகளுக்கு இத்துறையில் முன்னேற வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன.



ஈராயிரம் கண்ட இன்பக் குறள்

— இளங்கம்பன் —

சின்ன வடிவெனினும் சிந்தனைக்குத் தேனுகி
உன்னதமாம் பேரறிவை ஊட்டும் நல் - இன்மறையாம்
முப்பாலைப் போன்ற முழுமைத் திருமறையும்
இப்பாரில் உண்டோ? இயம்பு.

உள்ளும் அனைத்தினையும் உள்ளடக்கி உள்ளமதை
அள்ளும் சிறப்பால் அவனிபுகழ் - வள்ளுவனர்
நல்கியதாம் மாமறையை நானிலத்தில் சாந்துணையும்
கல்லார்க்கும் உண்டோ? களிப்பு.

தேடாத் திரவியம் போல் தித்திக்கும் முக்கனிபோல்
பீடேந்தி வந்த பெருமறையை - நாடி
அயர்வின்றிக் கற்கின்ற ஆர்வத்தைக் கொண்டால்
உயரின்பைக் காணும் உளம்.

தோன்றியநாள் தொட்டே தொடுக்கும் புகழுடனே
ஊன்றி உளத்தில் ஒளியூட்டும் - பான்மையுடன்
எக்காலத்தோர்க்கும் இயைந்த அறமுரைக்கும்
பக்குவத்தை முப்பாலில் பார்.

ஆய்ந்தே அறமுரைத்தான் ஆன்ற பொருள்உரைத்தான்
தோய்ந்துவக்கும் இன்பத் திறமுரைத்தான் -
ஏய்ந்தபுகழ்
வள்ளுவனர் சொன்ன வழுவில்லா நன்னெறியை
உள்ளத்தில் வைத்தொழுகு வோம்.

குறுமை நலமேந்திக் கோதற்ற தென்னும்
பெருமை யுடனே பிறங்கி - அரியவற்றை
நாமறியச் சொல்லும் நலமார்ந்த வள்ளுவனின்
மாமறையே உண்மை மறை

தந்தையும் மகளும்

ரா. வேங்கடசாமி

காலை ஒன்பது மணிக்குச் சோமசேகர் தன்னுடைய அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்து விடுவது வழக்கம். அன்றும் அந்த நேரத்தில்தான் தமது காரியாலயத்தில் அமர்ந்து தமக்கு வந்த கடிதங்களைப் பார்ப்பதில் கவனமாக இருந்தார். அவருக்கு அநேகமாகச் சொந்தக் கடிதங்கள் இருக்காது. எழுதுவதற்குச் சொந்தக்காரர்கள் இருந்தாலும் எழுத மாட்டார்கள். எழுதும் நிலையில் இல்லை. அவரும் எதிர்பார்க்க மாட்டார். ஒதுக்கப்படாமல் ஒதுங்கிக் கொண்ட நிலை அவருடையது. அதனால் ஒட்டுதலுக்கு இடமில்லை.

சோமசேகர் தனி மனிதர். நான்கைந்து கடிதங்களை வரிசையாகப் பிரித்துப் பார்த்து அவைகளின் மீது குறிப்பெழுதி வைத்த பிறகு அடுத்தபடியாக அவர் எடுத்த கடிதம் அவரை வியப்பில் ஆழ்த்தியது. ''சொந்தப் பார்வைக்கு'' என்று மேலே குறிப்பிட்டிருந்த அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார்....

''அன்புள்ளவருக்கு, வணக்கம். தங்களைச் சந்திக்க விரும்புகிறேன். அனுமதி அளித்தால் அடுத்த வெள்ளிக்கிழமை அங்கே வருகிறேன். முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டி விரும்புவதால் இந்த வேண்டுகோள்... மறுக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்...

அன்புள்ள
கல்யாணி''

இதுதான் கடிதம். இரண்டு மூன்று தடவை படித்தார். பிறகு அதை மடித்து வைத்தார். இப்போது அவள் எதற்குத் தன்னைப் பார்க்க விரும்புகிறாள்? உறவை வெட்டிக் கொண்ட பிறகு ஒட்டுதலுக்கு அங்கே இடமேது? கல்யாணி வேறு யாருமில்லை... அவரது மனைவி. மாஜி மனைவி! பத்து வருடங்களுக்கு முன் அவரிடமிருந்து சட்ட பூர்வமாகப் பிரிந்து விட்டவள். இல்லை... இல்லை... அவளாகப் பிரியவில்லை. இவர் பிரித்து விட்டார். பிரிந்த காரணம் தெரிந்த காரணம்தான். கணவருக்கு மனைவியின் நடத்தையில் சந்தேகம்! சந்தேகம் ஊர்ஜிதமாயிற்றோ இல்லையோ.. இல்லை கல்யாணி அப்படிப்பட்டவளோ இல்லையோ...? அதைப் பற்றிப் பேச்சில்லை... இருந்தது வளரவில்லை. ஆனால் கல்யாணி கேட்டுக் கொண்ட பிரகாரம்தான் நீதிபதி தீர்ப்பளித்தார்.

''கனம் நீதிபதி அவர்களே! குற்றத்தை நிரூபிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அது நிரூபிக்கப்படாவிட்டால் நான் என் கணவருடன் மீண்டும் முன்போல் வாழ்க்கை நடத்தலாம். ஆனால் சந்தேகம் என்கிற கறைபட்ட வாழ்வுடன் நான் நிம்மதியாகப் பிறகு வாழ்க்கை நடத்த முடியுமா? அது வாழ்க்கையாகவே இருக்காது. அதனால் அவர் கேட்பதைப் போல் விவாகரத்து வழங்கி எனக்கு விடுதலை கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.''

வக்கீல்களுக்கு வேலை இல்லை. மனைவியின் மனப்பூர்வமான சம்மதம் கிடைத்தவுடன், நீதிபதிதான் என்ன செய்ய முடியும்? அவள் கேட்ட விடுதலையை அவளுக்கு வழங்கி விட்டார். கேட்டது சோமசேகர். ஆனால் வாங்கித் தந்தது கல்யாணி. இதற்கு கோர்ட்டு வரை கூடப் போயிருக்க வேண்டியதில்லையே என்று தெரிந்தவர்கள் பேசிக் கொண்டார்கள். பேசிப் பயன் என்ன? உறவு துண்டாகி விட்டது. அவர்கள் பிரிந்தபோது அவர்களது ஒரே மகள் மாலினியை யார் வைத்துக் கொள்வது என்கிற பிரச்னை எழுந்தது. இங்கே ஆறு மாதங்கள், அங்கே ஆறு மாதங்கள் என்கிற ஏற்பாட்டுக்குச் சோமசேகர் ஒப்புக் கொள்ளவில்லை.

''சரி... மகள் எங்கே இருக்க விரும்புகிறாளோ, அங்கேயே இருக்கட்டும்.''

மகள் தாயாரிடம் இருக்க விரும்புகிறாள். தீர்ப்பும் அவ்வாறே எழுதப்பட்டது. ஜீவனாம்சம் அது இது என்கிற விஷயங்களுக்குப் பிறகு இருவருக்குமிடையே சமாதானம் என்கிற பேச்சுக்கும் அவர்களிடையே இடமில்லை. வசதி படைத்தவர்கள் என்பது மட்டுமில்லை. படித்தவர்கள்... அத்துடன் விவாகரத்து செய்து கொண்டால் வாழ்க்கை அஸ்தமித்தா போய்விடும் என்று நினைத்தவர்கள் அவர்கள்.

பத்து வருடங்களுக்குப் பின், இப்போது கல்யாணி அவரைப் பார்க்க வருகிறேன் என்றால் அவருக்கு வியப்பாக இருக்காதா? கல்யாணி என்கிற பெயரே அவருக்கு ஏறக்குறைய மறந்து விட்டது எனலாம்! மகளைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை மற்றவர்களுக்கு இருக்கலாம்; ஆனால் சோமசேகருக்கு இல்லை! தாயார் இருக்கும்போது தந்தை எதற்கு என்று வந்தவளுக்கு எப்படி இருக்கும் ஆசை?

நடந்து முடிந்துவிட்ட காரியத்துக்கு ஆரம்பம் தேடுவது போல் கல்யாணியின் கடிதம் வந்திருந்தது. கையில் கடிதம், மனத்தில் பழைய எண்ணங்கள்! சுத்தமாக்கி வைக்கப்பட்ட சுவரில் புதிதாக எழுத விரும்புவது போல் கல்யாணியுடன் தான் வாழ்க்கை நடத்தியது... அவளைச் சந்தேகித்தது..... வழக்கு நடந்தது... குழந்தையுடன் கல்யாணி பிரிந்தது எல்லாமே இப்போது அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. கனவு நனவாகியது போல், அவள் வருகிறேன் என்கிறாள். எதற்காக இருக்கும்?

அவள் உறவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புகிறாளா? ஒருவேளை அப்படியும் இருக்கலாம். உண்மையில் அவள் எண்ணம் அப்படியிருந்தால் அதற்கு அவர் தயாராக இல்லை. முடிந்தது முடிந்ததுதான்... அதற்கு ஆரம்பம் கொடுக்க அவர் விரும்பவில்லை.

இனிமேல் மனைவி, மகனுடன் வாழும் எண்ணம் அவருக்கு இல்லை.

நல்ல வேளையாக அப்போதே ஒரு புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்திருந்தார்... அவர் மறுமணம் செய்து கொள்ளவே இல்லை! செய்து கொண்டிருந்தால் இப்போது அதுவும் ஒரு புதுப் பிரச்னைக்கு இடம் அளித்திருக்கும். எவ்வளவு நேரம் சிந்தித்துப் பார்த்தாலும், அவருக்கு மனத்தில் அந்த ஒரே எண்ணம்தான் நிலையாக நின்றது. ''அவள் உறவைப் புதுப்பித்துக் கொள்ளத்தான் வருகிறாள்.''

தமது மாஜி மனைவிக்கு அப்போதே ஒரு கடிதம் எழுதிப் போட்டு விட்டார்.

''கல்யாணிக்கு,

உன் கடிதம் கிடைத்தது. விவரம் அறிந்தேன். எந்த விஷயத்தையும் நான் உன்னுடன் எப்போதும் பேசத் தயாராக இல்லை... அதனால் நீ இங்கு வரவேண்டிய அவசியமே இல்லை....

சோமசேகர்''

இந்தக் கடிதத்தைப் படித்தவுடன் கல்யாணி தன் மன நிலையைப் புரிந்துகொள்வாள் என்று அவர் நிச்சயம் நம்பினார். அந்த நேரத்தில் அவருக்கு வெளி நாட்டுக் கதை ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.... விவாகரத்து செய்து கொண்ட இருவர், பல வருடங்களுக்குப் பிறகு மீண்டும் சந்தித்துக் காதலித்து மணம் செய்து கொண்டார்களாம். அப்படி ஒரு மாறுதல் இவர் வாழ்க்கையிலும் நடக்கப் போகிறதா?

சோமசேகர் தமக்குள் சிரித்துக் கொண்டார். மனைவியுடன் நிம்மதியாக இருக்கிறேன்... ஆனந்தமாக இருக்கிறேன் என்று அவரது நண்பர்கள் அவரிடம் குறிப்பிடுவது உண்டு. அப்போதெல்லாம் அவர் பெருமையாக, ''எனக்குக் கூட இந்த வாழ்க்கை நிம்மதியாகத்தான் இருக்கிறது. ஒருவேளை மனைவியுடன் வாழ்ந்திருந்தால் இந்த நிம்மதி எனக்குக் கிடைக்காமல் போயிருக்குமோ என்னமோ?'' என்று சொல்வது வழக்கம்.

அப்படிச் சொல்லி அவர் தம்மைத் திருப்திப்படுத்திக் கொண்டார் என்று சொல்ல முடியாது. அவர் நிலை அதுதான். இப்படித்தான் நடக்கும் என்ற மனோபாவம். அதற்குத் தகுந்தாற்போல் நடந்துகொள்ள வேண்டும் என்கிற முடிவு.

அந்த முடிவில் சலனம் ஏற்படுத்தக் கல்யாணி பார்த்தாள். அவளால் முடியவில்லை. உண்மையில் அவள் இவருடன் மீண்டும் வாழ்க்கை நடத்தத்தான் கடிதம் எழுதினாளா? சோமசேகர் நினைத்த விதம் இப்படி...

ஆனால்... அவள் வேறு ஏதோ காரணத்தை மனத்தில் நினைத்துக் கொண்டு இவருக்குக் கடிதம் எழுதி இருக்கலாம் அல்லவா?

சோமசேகரை மணந்துகொண்ட இரண்டாவது மாதத்திலேயே தமது ஆசைக் கனவுகள் குலைந்து விட்டதைக் கண்ட கல்யாணி, தமக்கு வாழ்க்கையில் இருந்த



பிடிப்பு விட்டுப் போய்விட்டது என்பதை நன்றாக அறிந்து கொண்டாள்.

எவ்வளவோ முறை அவளும் ஈடு கட்டித்தான் பார்த்தாள். பல குடும்பங்கள் நிம்மதியாக இருப்பதைப் போலத் தங்களால் ஏன் இருக்க முடியவில்லை என்று சோமசேகர் நினைத்தாரோ இல்லையோ, கல்யாணி நினைத்தாள். இந்த நிலையில் மாலதி பிறந்த பிறகும் அவர்களது நிலையில் மாறுதல் இல்லை. காலத்தினால் கவலையைப் போக்க முடியவில்லை என்றால் கூட நிலையைச் சரி செய்ய முடியவில்லை. கசப்பு வளரும்போது சந்தர்ப்பங்களும் துணை செய்கின்றன! கல்யாணியின்பேரில் சோமசேகருக்குச் சந்தேகம் விழ, அது கடைசியில் விவாகரத்துக்கு அடிகோலிவிட்டது. அதுகூடக் கல்யாணிக்கு ஒரு விதத்தில் ஆறுதல் தந்தது என்றுதான் சொல்ல வேண்டும். கணவனுடன் மனைவி என்கிற பந்தத்துடன் ஒரே வீட்டுக்குள் நிம்மதி இல்லாமல் வாழ்க்கை நடத்துவதை விட விநாடிக்கு விநாடி அடுத்தபடியாக என்ன நடக்குமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பதை விட — கணவனிடமிருந்தே பிரிந்து வாழ்வது எவ்வளவோ மேல் என்று நினைத்தவள் இந்தக் கல்யாணி! அது மட்டுமா?

'கணவன் சந்தேகப்பட்டான் — துரத்தி விட்டான். இவள் 'வாழாவெட்டி' என்றெல்லாம் நாலு பேர் பேசியபோதுகூட, "இது எத்தனை நாட்களுக்கு? பிறகு எல்லாம் சரியாகப் போய்விடும்" என்று தைரியமாக இருந்தவளும் இந்தக் கல்யாணிதான்!

நாலு பேர்கள் நாலுவிதமாகப் பேசுகிறார்களே என்று பயந்து கொண்டு அவள், அப்போதே கணவனிடம் சரணாகதி அடையவில்லை... இப்போதுதானா திரும்பி வரப் போகிறாள்?

இந்த விஷயத்தில்தான் சோமசேகர் அவசரமான முடிவுக்கு வந்து தம் மனைவியை வர வேண்டாம் என்று எழுதிப் போட்டுவிட்டார். கல்யாணி இதை எதிர்பார்த்தாள். ஆனால் அவளது மகள் மாலதி இதை எதிர்பார்க்கவில்லை.

"உன்னைத்தானம்மா வரவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்... நான் போகிறேன்... பேசிப் பார்க்கிறேன்" என்று மகள் சொன்னபோது கல்யாணியினால் மறுத்துப் பேச முடியவில்லை!

"போய் வா... ஆனால் ஒரு நிபந்தனை... என்னைப் பற்றி நீ ஒரு வார்த்தை கூட உன் அப்பாவிடம் பேசக் கூடாது..."

"ஒப்புக் கொள்கிறேன். என்னைப் பற்றித்தானே நான் பேசப் போகிறேன்? உன்னைப் பற்றிப் பேசுவதற்கு எனக்கு நேரம் எங்கே இருக்கப் போகிறது? கவலைப்படாதே...நேரமிருந்தாலும் பேச மாட்டேன்..."

"அப்படியென்றால் போய் வா!"

கல்யாணி விடை கொடுக்க, மாலதி தன் தந்தையைப் பார்க்கப் புறப்பட்டு விட்டாள்.

எதிரே வந்து நின்ற தன் மகளையே அடையாளம் தெரிந்துகொள்ள முடியாமல் சில விநாடிகள் தடுமாறினார் சோமசேகர்.... வளர்ந்துவிட்ட பெண்... நாகரிகமாக இருந்த பெண்... மாலதி அப்படித்தானே இருந்தாள்.

"நான்தானப்பா மாலதி, உங்கள் மகள்" என்று அறிமுகப்படுத்திக் கொள்ளும் நிலையில்தான் . இருந்தனர் தந்தையும் மகளும்...

"வாம்மா... வா! நீ நன்றாக வளர்ந்து விட்டாய் அல்லவா? அதனால்தான் 'சட்' டென்று என்னால் உன்னை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.... இப்படி உட்கார்...."

பேச முடியாத நிலையிலும் எதையோ சொல்லி முடித்து அவர் மகளை வரவேற்று விட்டார்.

மகள் பெருமூச்சு விட்டாள்.

எங்கே தன்னையும் அவர் விரட்டி விடுவாரோ என்கிற பயம் ஓரளவுக்கு மாலதியிடமிருந்து விலகியது. அவள் உட்கார்ந்தாள்.

மகளைப் பார்த்த பிரமிப்பு இன்னும் அவருக்கு அடங்கவில்லை. எப்படி வளர்ந்திருக்கிறாள் அவள்? தன் மகள் இவ்வளவு அழகாக இருக்கிறாளா? என்கிற கேள்விகள் அவர் மனத்தில் எழுந்து அடங்கின. சிறிது மௌனம் நிலவியது. எதைப் பற்றி முதலில் பேசிப் பிறகு தான் வந்த விஷயத்தைச் சொல்லுவது என்று மகளும் — எதற்காக இவள் இங்கே வந்திருப்பாள் என்று தந்தையும் யோசனை செய்து தயங்கிக் கொண்டேயிருந்த நேரத்தில் வேலைக்காரன் காப்பியைக் கொண்டு வந்து வைத்தான்.

வருடங்களின் இடைவெளி வாயைக் கட்டிப் போட்டிருந்தாலும் உபசரிப்புக்குத் தயக்கம் ஏது?

"சாப்பிடம்மா..."

தன் தந்தையின் பிரம்மாண்டமான வீட்டைத் தன் கண்களால் அளந்துகொண்டே மாலதி காப்பியைக் குடித்து முடித்தாள்.

"இங்கேயே சாப்பிடுகிறாயா? சமைக்கச் சொல்கிறேன்."

"சரிப்பா...."

வேலைக்காரனுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது.

அதற்குப் பிறகும் சிறிது மௌனம் நிலவியது.

தந்தைதான் பேசவேண்டும் போலிருந்தது.

"என்னம்மா... இதுவரை வராதவள் வந்திருக்கிறாய்... ஏதாவது விசேஷமா?"

"ஆமாம்...." மாலதி தயங்கினாள்.

"உன் அம்மா உன்னை இங்கே அனுப்பினாளா?"

"இல்லையப்பா... நானாகத்தான் வந்தேன். இந்த விஷயத்தைக் குறித்துப் பேச அம்மாதான் இங்கே வருவதாக இருந்தார்கள். ஆனால் நீங்கள் வரவேண்டாம் என்று எழுதியவுடன் நானே இங்கு வர வேண்டியதாயிற்று..."

சோமசேகர் மகளுக்கு முன் குற்றவாளியைப் போல் ஒரு நிமிடம் தலை குனிந்தவாறு இருந்தார். மகள் தொடர்ந்தாள்: "அப்பா, நீங்கள் இருவரும் பிரிந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. அந்த விஷயத்தைக் குறித்தோ, இல்லை அம்மாவைக் குறித்தோ நான் பேச இங்கு வரவில்லை. வேறு எதற்காக இங்கு வந்தாய் என்று கேட்பீர்கள்... என்னைப் பற்றியே நான் பேச வந்திருக்கிறேன்...."

மனைவியைப் பற்றிப் பேச வரவில்லை என்று மகள் சொன்னவுடன் சோமசேகருக்கு ஒரு

விதமான ஆறுதல் ஏற்பட்டது. ''சொல்லம்மா... என்ன விஷயம்? உனக்கு நான் ஏதாவது செய்ய வேண்டுமா?''

மாலதி ஒரு கணம் தயங்குபவள்போல் பேசாமல் இருந்தாள்.

''ஆமாம் அப்பா...என் எதிர்காலம் உங்கள் கையில்தான் இருக்கிறது... நீங்கள் மனம் வைத்தால்தான் நான் நல்வாழ்வைப் பெற முடியும்!'' கண்களில் நீர் கலங்கியது.

தந்தைக்கு இப்போது கோர்ட்டில் தன் மகள் தன்னை உதறிவிட்டுப் போனது ஞாபகத்துக்கு வந்து விட்டது.

''அப்போது உன் தாயாரின் தயவு தேவையாக இருந்தது. இப்போது தந்தையின் தயவா?'' என்று கேட்டார்.

இதைக் கேட்டவுடன் மகள் கூனிக் குறுகிப் போவாள் என்று அவர் எதிர்பார்த்ததற்குப் பதிலாக அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''நீங்கள் கொண்டுள்ள எண்ணம் சரிதான் அப்பா! அப்போது நான் விவரம் தெரியாதவள். இருந்தாலும் நல்ல முடிவைச் செய்திருக்கிறேன். ஏனெனில் அந்த வயதில் பெண்ணுக்குத் தாயின் அன்பும், அரவணைப்பும் தேவை. இல்லாவிட்டால் வளர்ப்பு நன்றாக இருக்காது. தந்தைக்கும் வளர்க்கத் தெரியாது என்று நான் சொல்லவில்லை. கண்டிப்பு இருக்காது. ஆண்கள் வளர்த்த பெண்கள் பலரை நான் தினமும் பார்க்கிறேன். அப்பா... அப்போதெல்லாம் எனக்கும் கண்டிப்பு நிறைந்த என் தாயாரின் முகந்தான் ஞாபகம் வரும். அவள் மட்டும் என் போக்குக்கு விட்டிருந்தால் இருக்கும் வசதிக்கு நான் எப்படியெல்லாம் ஆகியிருப்பேனோ?

''இதுவரைக்கும் சரி...ஆனால் அடுத்தபடியாக நடக்க வேண்டியதற்கு அம்மா இருந்தும் பயனில்லை... என் திருமணத்தைப் பற்றித்தான் பேசுகிறேன்.... அவள் பங்குக்கு அவள் முயற்சி செய்து பார்த்தாள். 'பெண்ணின் தந்தை யார்? அவர் எங்கே இருக்கிறார்? உங்களுக்கும் அவருக்கும் என்ன தகராறு?' என்றெல்லாம் கேள்விகள் கிளம்பின. அம்மா எப்படிப் பேசுவாள்? பேசினாலும் நம்புவதற்கு ஆள் வேண்டுமே! ஆனால் நான் இங்கிருந்தால், அந்தக் கேள்விகளை உங்களிடம் யாரும் கேட்க மாட்டார்கள். ஏனெனில் நீங்கள் ஆண்பிள்ளை, எதையும் எதிர்க்க உங்களால் முடியும்! அம்மாவிடம் இனி எத்தனை வருடங்கள் இருந்தாலும் எனக்குத் திருமணமாகாது.... ஆனால் இங்கு வந்துவிட்டால் 'உடனடியாகத் திருமணம் முடிந்துவிடும் என்று எனக்குத் தெரியும்... 'ஐயோ பாவம், தாயில்லாத குழந்தையா?' என்று சிறு வயதில் பரிதாபப்படுகிறவர்கள் கல்யாண வயதில் தந்தை அருகில் இல்லை என்றால் ஒரு மாதிரியாகத்தான் பார்ப்பார்கள். ஒவ்வொரு வயதில், ஒவ்வொருவருடைய ஆதரவு பெண்ணுக்குத் தேவை. எனக்குத் திருமணமாகி விட்டால் நான் கணவனின் ஆதரவில் இருப்பேன். அது பிறகு.... இப்போது நான் சொன்னதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்...'' என்று முடித்தாள் மாலதி.

சோமசேகர் மகளைப் பெருமையுடன் பார்த்தார்.

''நீ இங்கேதானே இருக்கப் போகிறாய்; இனிமேல்?''

''ஆமாம் அப்பா! உங்கள் சம்மதத்தைக் கேட்டு விட்டுத்தான் இருக்க உத்தேசித்திருக்கிறேன்!''

''போம்மா... உன் உடைமைகளை எடுத்துக் கொண்டு வா!''

மாலதி எழுந்தாள். 'குழந்தைப் பேறுக்குத் தாய் இல்லாமலா?' என்று இப்போதே கணக்குப் போட்டாள், அந்தக் கன்னி!

ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானம் திருப்பணிக் குழு, ஸ்ரீ வில்லிபுத்தூர்

பூமிப்பிராட்டியான ஸ்ரீ ஆண்டாள் பெரியாழ்வார் திருமகளாக அவதரித்தும், திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளதுமான திருத்தலம் ஸ்ரீவில்லிபுத்தூர்.

இங்கு பெரிய திருக்கோபுரம் உள்பட திருப்பணிகள் நடைபெற வேண்டியிருக்கிறது. ஸ்ரீ ஆண்டாள் கர்ப்பக்கிரகம் செப்பம் செய்தல், சக்கிரவாரக் கூரடு, விமான ஸ்தூபி தங்க முலாம் பூசுதல், திருச்சுற்றுப் பூச்சுக்கள் முதலிய திருப்பணிகளும், ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் திருப்பணியும் சுமார் ஐம்பதாயிரத்துக்குத் திட்டமிட்டு ஆரம்பிக்கப்பெற்றுள்ளன. இதைத் தொடர்ந்து தை மாதத்தில் மகாசம்புரோட்சணமும் சிறப்பான முறையில் செய்ய வேண்டியிருக்கிறது. அதன் பின் திருக்கோபுரம் முதலிய பணிகளை மேற்கொள்ள வேண்டி யிருக்கிறது. இவை எல்லாவற்றையும் தேவஸ்தான நிதியிலிருந்து நிறைவேற்றி வைக்க இயலாததாயிருக்கிறது.

எனவே இந்த அறிக்கையைக் காணுறும் சேவார்த்திகளும், பொதுமக்களும் தனவான்களும் தங்களால் இயன்ற பொருள் உதவி செய்து ஸ்ரீ ஆண்டாள் திருப்பணிகளும், சம்புரோட்சணமும் நல்ல முறையில் நடைபெற உதவ வேண்டும்.

இத்திருப்பணிக்கு உதவும் நன்கொடைக்கு வருமான வரியினின்றும் விலக்களித்து மத்திய சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. நன்கொடையை, ''காரியதரிசி—பொருளாளர், ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானம் திருப்பணிக் குழு, ஸ்ரீவில்லிபுத்தூர்'' என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.


தரமானதும்
சிக்கனமானதுமான
சமையல் சாதனம்
விமலா
விமலாவில் தயாரான பண்டங்கள் ஒரு தனிப்பட்ட ருசியும், மணமும் பெற்றிருக்கும். உணவில் இதற்குமுன் கண்டிராத சுவையை அளிக்கிறது. வெறுப்பையும், திகட்டலையும் கொடுக்கும் மற்ற சமையல் சாதனங்களை அறவே விட்டு விட்டு தரத்தில் உயர்ந்ததும், சிக்கனமானதுமான விமலா சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் உபயோகித்து பண்டங்களை உண்டு மகிழுங்கள்.
விமலா
கொழுப்பு சத்துக்கள்
இல்லாதது
VIMALA
REFINED
கேரளா சோப்ஸ் & ஆயில்ஸ் லிட்.,
ஹைட்ரோஜனேஷன் பாக்டரி டிவிஷன்
கள்ளிக்கோட்டை-5 கேரளா









ஸ்கந்த புராணம், கருட புராணம், பத்ம புராணம், பாகவத புராணம் என்று பதினெட்டுப் புராணங்களை எழுதியவர்கள் தூக்கத்துக்கு என்று தனியாக ஒரு புராணத்தை எழுதி வைக்கவில்லை. சிலர் எந்தப் புராணத்தைக் கேட்டாலுமே தூங்கி விழுவதைப் பார்த்துவிட்டு, தூக்கத்துக்குத் தனிப் புராணம் தேவையில்லை என்று ஒருவேளை அவர்கள் நினைத்திருக்கக் கூடும். ஆனாலும் இது நியாயம் அல்ல என்பதே என் அபிப்பிராயம். முன்னோர்கள் செய்யத் தவறிய காரியத்தைச் சின்னஞ் சிறு அளவிலேனும் செய்தே ஆகவேண்டும் என்று நான் விரும்பியதன் விளைவே இந்தத் ''தூக்க புராணம்''.

தூக்கத்தை வெறுப்பதும், பழிப்பதும் ஒரு ''ஃபாஷ''னாகப் போய்விட்டது. நன்றாகத் தூங்குகிறவனைப் பார்த்துத் தூங்கு மூஞ்சி என்று கேலி செய்வானேன்? கடையில் வியாபாரம் நடக்கவில்லை என்றால் ''வியாபாரம் நடக்கவில்லை'' என்று சொல்ல வேண்டியது தானே? எதற்காக ''கடை தூங்கி வழிகிறது'' என்று சொல்ல வேண்டும்? வீணாகத் தூக்கத்தை ஏன் பழிக்கிறார்கள் என்று கேட்கிறேன். தூக்கம் என்பது எவ்வளவு பெரிய வரப்பிரசாதம் என்று அவர்கள் அறிய மாட்டார்கள்.

உயிர்ப் பிராணிகள் அநுபவிக்கும் இன்பங்களில் தூக்கமே தலைசிறந்த இன்பம் என்று சொல்ல வேண்டும்.

தூக்க சுகத்தை ஆண்டவன் மனிதர்களுக்கு மட்டும் கொடுக்கவில்லை. மற்ற உயிர்ப் பிராணிகளுக்கும் கொடுத்திருக்கிறார். வீட்டுக்குக் காவலாக வளர்க்கும் உயர் ஜாதி நாய்கள் எந்நேரமும் தூங்குவதைப் பார்த்தால் இந்த உண்மை உள்ளங்கை நெல்லிக்கனியாகப் புலப்படும். பிராணிகளைப் போல் மரங்களும் தூங்குகின்றன. இல்லை என்றால் தூங்குமூஞ்சி மரங்கள் என்ற பெயர் வருவானேன்?

தூக்கத்தைப் பரிகசித்தாலும் பழித்தாலும் அது மனிதனுக்கு ஜீவநாடியாகத் தேவைப்படும் ஒன்று என்பது அசைக்க முடியாத உண்மை. சில நோயாளிகளைத் தூங்க வைப்பதற்காக டாக்டர்கள் என்னென்ன மருந்து மாத்திரைகளையெல்லாம் பயன்படுத்த வேண்டியிருக்கிறது! சிலருக்கு ஒருவித நோயும் இல்லாவிட்டாலும் தூக்கம் வருவதில்லை. அவர்கள் அப்போதுதான் புத்தகங்களைப் படிக்கத் தொடங்குவார்கள். நான்கு பக்கங்களைப் புரட்டுவதற்குள்ளாகவே தூக்கம் வந்துவிடும். இதற்காகவாவது புத்தகம் படிக்கிறார்களே என்று இங்கே புத்தக ஆசிரியர்களும் வெளியீட்டாளர்களும் சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம். சரியாகத் தூங்காவிட்டால் உடம்பின் ஆரோக்கியம் கெட்டு விடுகிறது. ''ஒரு நாள் விழிப்பு ஒன்பது நாள் அலுப்பு'' என்பது நம் செந்தமிழ்ப் பழமொழி. ஒருவன் சேர்ந்தாற்போல் மூன்று நாட்கள் தூங்காவிட்டால் செத்துப் போய்விடுவானாம். இது விஞ்ஞானிகள் கண்ட உண்மை. ஆனால் சேர்ந்தாற்போல் பதினைந்து நாட்கள் இரவும் பகலும் தூங்கி எவனும் செத்ததாக எந்த விஞ்ஞானியும் சொன்னதில்லை. இதிலிருந்தே தூக்கத்தின் அருமை பெருமைகளை நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

தூக்கத்தைப் பற்றிப் பல சுவையான விவரங்களைத் தொகுத்திருக்கிறார் அமெரிக்

கின் என்ற ரஷ்ய எழுத்தாளர். பிராணிகளில் ஒருசிலவே நிம்மதியாகத் தூங்குகின்றனவாம். மற்றவை விரோதிகளுக்குப் பயந்து அடிக்கடி கண் விழித்துக்கொள்ளுமாம். உலகத்தில் நன்ருகத் தூங்கும் பிராணிகளில் முன்னணியில் நிற்கும் ஒன்று அல்லது முன்னணியில் தூங்கும் ஒன்று — இந்திய நாட்டுக் கரடியாம்.

பறவைகள் 13 முதல் 16 மணி நேரம் வரை தூங்குகின்றன. பன்றிகளும் அதிக நேரம் தூங்கும் சுகவாசிகளே. ஒரு வகைப் பாம்பு இருபத்து நான்கு மணி நேரத்தில் இரண்டு மணி நேரம்தான் விழித்திருக்கிறது. அப்போது தனக்கு இரை தேடிக் கொள்ளுகிறது. மற்ற நேரமெல்லாம் ஒரே தூக்கம் தான். இது உலக சாதனை என்றே சொல்லப்படுகிறது.

முயல்கள் ஒருவகையில் அதிசயப் பிராணிகளாக இருக்கின்றன. அவை சில நிமிஷம் தூங்கும்; பிறகு விழிக்கும்; சில நிமிஷங்களுக்குப் பிறகு மீண்டும் தூங்கும். அப்புறம் திரும்பவும் விழிக்கும். இப்படி ஒரு நாளில் இருபது தடவை அவை விட்டு விட்டுத் தூங்குமாம்.

யானை— அவ்வளவு பெரிய மிருகம் — ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம்தான் தூங்குகிறது. அதுவும் பெரும்பாலும் நின்றுகொண்டே தூங்குகிறது. குதிரைகளும் அப்படியே. இதனுல்தானே என்னவோ குதிரை படுத்தால் கழுதைக்குச் சமம்-என்று ஒரு பழமொழி கூறுகிறது. நின்று கொண்டு சில சமயங்களில் தூங்கும் மற்றப் பிராணிகள், கழுதை, ஆடு, பசு, எலி, நரி, ஆகியவை. இந்தப் பட்டியலில் சில மனிதர்களையும் சேர்த்துக் கொள்ளலாமோ?

மனிதன் எந்த நிலையிலும் தூங்கும் சர்வ வல்லமை படைத்தவன் என்று தோன்றினுலும் அவன் ஜம்பம் வௌவாலிடம் சாயாது ஏனென்ருல் வௌவால்கள் தலை கீழாகத் தொங்கிக் கொண்டு தூங்குகின்றன. சில வகை அணில்கள் ஒன்றன் உடம்பை மற்ருென்று வரிசையாகப் பிடித்துக் கொண்டு ஒரு கிளையிலிருந்து மறு கிளை வரை தொங்கும் பாலம் போல் காட்சி யளித்துக் கொண்டு தூங்குவது உண்டாம்.

படுத்துத் தூங்குவது என்ருல் பாயோ மெத்தையோ தேவைப்படுகிறது. தலையணை? அவசியம் தேவைதான். பிராணிகளிலும் இப்படிச் சௌகரியம் பண்ணிக்கொண்டு தூங்குபவை உண்டு. யானைகள் புதரிலோ கரையான் புற்றிலோ தலை வைத்துக் கொண்டு தூங்கும். தமக்குத் தீனியாகப் போடப்பட்ட வைக்கோலைக் குவித்து வைத்து அதன் மேல் தலை வைத்துத் தூங்கும் யானைகளும் உண்டு.

நரி தன் வாலையே தலையணையாக வைத்துக்கொண்டு தூங்குகிறது.

வாத்து இருக்கிறதே, அது தண்ணீரில் ஒரு காலை நீட்டிப் படகுத் துடுப்பு மாதிரி அவ்வப்போது துழாவிக் கொண்டே தூங்குகிறது. அப்படிச் செய்யா விட்டால் காற்றோ அலையோ அதைக் கரைக்குத் தள்ளிக் கொண்டு போய்விடுமாம். கரையில் நடமாடும் ஏதேனும் ஒரு மிருகத்துக்கு இரையாகி விடாமல் தற்காத்துக் கொள்ளவே, வாத்து நன்ருகத் தூங்கினுலும் துழாவத் தவறுவதில்லை.

சரி, மீன்கள் எப்படித் தூங்குகின்றன? அவை தண்ணீரின் அடிமட்டத்துக்குப் போய்த் தரையில் தூங்குமாம். சில மீன்கள் நடுத் தண்ணீரிலேயே தூங்கி விடுகின்றனவாம்.


ஐரோப்பாவில் வாழும் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த பறவைகள் ஆகாயத்தில் இரண்டு மைல் தூரத்துக்குக் கூட்டமாகப் பறந்து போய்ச் சிறகுகளை விரித்துக் கொண்டு தூங்குகின்றன. அதிகாலை நாலரை மணிக்கு அவை பூமிக்கு வந்துவிடுகின்றன.

கூட்டமாகத் தூங்கும் இந்தப் பறவை போல் வண்டுகளில் சில இனங்கள் கூட்டமாக மட்டுமல்ல; ஒன்ருேடு ஒன்று ஒட்டிக் கொண்டு ஒரு பந்து போல் இணைந்து தூங்குகின்றன. இவற்றிலும் சில இன வண்டுகள் ஆண்கள் வேறு பந்தாகவும், பெண்கள் வேறு பந்தாகவும் திரண்டு தூங்குவது ஒரு பெரிய அதிசயம்! பூக்களில் தூங்கும் வண்டுகள் பல. அவற்றை விரட்டினுல், பழையபடியும் அந்தந்த வண்டு அந்தந்த மலருக்கே திரும்பி வந்து தூங்குவதை விஞ்ஞானிகள் கண்டிருக்கிருர்கள்; மற்றவர்களுக்கும் காட்டியிருக்கிருர்கள். ஒவ்வொரு வண்டுக்கும் அவ்வளவு தெளிவாகத் தன்னுடைய மலர்ப் படுக்கை அடையாளம் தெரிகிறதாம்.

எறும்புகள் எப்போதுமே முன் ஜாக்கிரதையோடு நித்திரை செய்பவை. தூங்குவதற்கு முன்னுல் அவை மண்ணைக் கொண்டு தங்கள் புற்றின் வாசலை அடைத்து விடுமாம்— விரோதிகள் உள்ளே புகுந்து விடாமல் தடுக்க. மூன்று மணி நேரம் தூங்கிவிட்டு அவை விழித்து விடுகின்றன. விழித்ததும் மனிதர்களைப் போல் அவையும் உடம்பை நீட்டி நெளிக்கின்றன. கொட்டாவியும் விடுகின்றன! ஆனுல் ஒரே வித்தியாசம்: வேலை செய்யும் நேரங்களில் அவை கொட்டாவி விடுவதில்லை.

தூங்கும்போது மனிதர்களைப் போல் பிராணிகளும் கனவு காண்பது உண்டு. கனவில்லாத தூக்கமே நிம்மதியான தூக்கம் என்று முன்பு கருதப்பட்டு வந்தது. ஆனுல் விஞ்ஞானிகள் நூற்றுக் கணக்கான சோதனைகளைச் செய்து பார்த்த பிறகு, அந்தக் கருத்து தவறு என்பதுடன், கனவில்லாமல் ஒருவன் வாழவே முடியாது என்ற முடிவுக்கும் வந்திருக்கிருர்கள். ஆனுல் பகல் கனவுகளும் அத்தியாவசியத் தேவையா என்பது தெரியவில்லை.

இத்துடன் தூக்க புராணத்துக்கு மங்களம் பாடிவிடலாம் என்று நினைக்கிறேன். இதற்கு மேல் இது நீண்டால், மற்றப் புராணங்களைப் போலவே இந்தப் புராணமும் வாசகர்களைத் தூங்க வைத்துவிடக் கூடும் அல்லவா?



ஸ்விட்சர்லாந்தில் காரின் கதவை எவராவது பலமாக அறைந்து சாத்தினால் அது சட்டப்படி குற்றமாகும். பலத்த ஓசைகளால் உடல் ஆரோக்கியத்துக்கும், செவிக்கும் கேடு விளைகிறது என்பதால் இந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறதாம்.

ஆதாரம்: 'ஹிந்து'வில் ஒரு கட்டுரை

வி. ந. ஸ்ரீதரன்

உவமைக் கதை!

சூரியன் உதித்தான். குள்ளநரி தன் நீண்ட நிழலைப் பார்த்தது. இன்றைக்கு ஒட்டகம் கிடைத்தாலொழிய நம் பசி அடங்காது என்று தனக்குள் சொல்லிக் கொண்டது.



காலை நேரம் முழுவதும் அது ஒட்டகத்தைத் தேடி அலைந்தது. நடுப் பகல் ஆயிற்று.

குள்ளநரி தன் நிழலை மறுபடியும் பார்த்தது. நிழல் ரொம்பச் சின்னதாக இருந்தது.

''சுண்டெலி கிடைத்தால்கூட நம் வயிற்றுக்குப் போதுமே'' என்று கூறிக் கொண்டது.

-- என்பு

□ □ □ □ □ □ □ □ □

அவனும் அதுதான்!



''என் அதிர்ஷ்டத்துக்கெல்லாம் கிரஹங்களின் மேல்தான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.''

''அட! நீர் என்ன மனுஷனய்யா? அதெல்லாம் போய் நம்பிக்கை வைக்கலாமா?''

''அட, போ ஐயா! நன்றாய்ச் சொன்னீர்! நான் ஒரு ஜோஸ்யன் ஐயா!

உலகப் பற்று



நீர்ப் பானையின் அடியில் வெகு சிறிய துவாரம் ஒன்று இருந்தாலும் அதன் வழியாக ஜலமெல்லாம் ஒழுகிப் போகும். அது போல சாதகன் ஒருவனது மனத்தில் உலகப் பற்று வெகு அற்பமாக இருந்தாலும் கூட அவனது பிரயத்தனங்களெல்லாம் வீணாய் முடியும்.

சொன்னவர்: ஸ்ரீ ராமகிருஷ்ணர்

எழுதியவர்: இ. மணிமேகலை

□ □ □ □ □ □ □ □ □

ஆஸ்திரேலிய ஆப்பிள்!

ஆஸ்திரேலியாவில் மைல் கணக்கில் ஆப்பிள் தோட்டங்கள் உண்டு. 'ஆப்பிள் தோட்டமா அவ்வளவு?' என்று நீங்கள் கேட்பது தெரிகிறது. அது மட்டுமல்ல; யார் வேண்டுமானாலும் தோட்டங்களுக்குள்ளே போகலாம். மரத்தில் பழுத்த கனியையோ அல்லது பழுத்து விழுந்து கிடக்கும் ஆப்பிள்களையோ வேண்டிய மட்டும் வயிறார உண்ணலாம்! இதற்குத் தடையில்லை. ஆனால், ஒரு சிறு பிஞ்சைக்கூட தோட்டத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வது திருட்டாகும்!




யாரிடம் இல்லை?

லைசென்ஸ் வாங்கிய பிறகுதான் வேட்டையாட வேண்டிய காடு அது. துப்பாக்கியும் கையுமாக இருந்த இரண்டு பேரை நிறுத்திய போலீஸ்காரர் ''லைசென்ஸ் எங்கே?'' என்று கேட்கவும், ஒருவர் ஓட ஆரம்பித்தார். போலீஸ்காரர் அவரை ஒரு மைல் காட்டில் துரத்திப் பிடிக்கவும் பையில் இருந்து லைசென்ஸை எடுத்துக் கொடுத்தார், அவர். ''லைசென்ஸ் இருக்கும் போது ஏன் ஓட வேண்டும்?'' என்று கேட்டார் போலீஸ்காரர்.

''என் நண்பரிடம் இல்லையே, அதனால் தான்'' என்றார் அவர்.

--''ரோடேரியன்'' - ''பாலி''





பாமினி பேசாதே!

'வீயார்'

பாமினியைப் பேசவே விடமாட்டாள் அம்புஜம். பேசினால் தன் பெண் ஊமை என்று தெரிந்து விடுமே என்ற ஏக்கம்தான் காரணம்.

பன்னிரண்டு வயது பாமினிக்கு அழகை அள்ளிக் கொடுத்திருந்த இறைவன், நாவை மட்டும் நயவஞ்சகமாகப் பங்கப்படுத்தி விட்டானே என்று தாயுள்ளம் பொருமாத நாள் இல்லை. எவ்வளவு கோவில்களுக்குப் பிரார்த்தனைகள்!

''உன்னை ஊமை என்று கேலி செய்வார்கள். நாலு பேர் முன் பேசி என் மானத்தை வாங்காதே!'' என்று அம்புஜம் கடிந்து கொள்வாள். அவள் ஆவல் மீறிப் பேச ஆரம்பித்தால், அம்புஜம் ஜாடை காட்டி, 'பேசாதே' என்பாள். அதையும் மீறிப் பேசினால் தலையில் அடித்துக் கொள்வாள். இதைக் கண்டிருந்த பாமினி அநாவசியமாகப் பேச முற்படுவதே இல்லை.

'ஊமைக் குழந்தை பேசி விடுகிறதாம்' என்ற கருத்தை அழகாகப் படம் எடுத்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டதும் அம்புஜம் அந்தச் சினிமாவை அவசியம் பார்த்தாக வேண்டும் என்று கணவனை நச்சரித்தாள்.

அன்று பிற்பகல் குடும்பத்துடன் கணேசன் படம் பார்க்கக் கிளம்பினார். அடையாறிலிருந்து மவுண்ட் ரோடு வந்தாக வேண்டும். பஸ்ஸில்தான் பிரயாணம் செய்தனர்.

பஸ்ஸில் கூட்டம் மிக மிக அதிகமாயிருந்தது. எப்படியோ குடும்பத்தினருடன் ஏறிவிட்ட கணேசனுக்கு நிற்கத்தான் இடம் கிடைத்தது. அங்கங்கே மற்றவர்களை உட்கார வைத்து விட்டார்.

பாமினி பொம்மை போல் உட்கார்ந்திருந்தாள். அவள் சகோதரிகள் பிரபாவும், சுந்தரியும் எதையோ பேசி ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தனர். தம்பிகள் மூலைக்கொருவராக உட்கார்ந்திருந்தனர். பாமினியும் அம்புஜமும் ஒரே ஸீட்டில் இருந்தனர்.

பாமினிக்குத் திடீரென்று பேசத் தோன்றியது. அவள் பேசினால் அம்புஜம் திட்டுவாள். ஆனால், பேசாமலிருக்க முடியவில்லை.

''ம்... ம்... பே... பே...'' என்று ஆரம்பித்ததுதான் தாமதம். அம்புஜம் அவளை உற்றுப் பார்த்து, மிரட்டினாள்.

சாதாரணமாக அப்படிச் சொன்னால் அதற்கு மேல் பாமினி பேச மாட்டாள்.

ஆனால் இந்த முறை அவள் அடங்கவில்லை. ''ம்... பே... பே... பே...!'' என்று அம்புஜத்தைத் தொட்டுத் தொட்டு ஜாடை காட்டிப் பேச முயன்றாள். பஸ்ஸில் இருந்தவர்கள் அம்புஜத்தையும் பாமினியையும் ஒரு மாதிரியாகப் பார்ப்பதைத் தாயுள்ளத்தால் பொறுக்க முடியவில்லை.

பஸ் ஒரு ஸ்டாப்பிங்கில் நின்றது. பாமினி பலமாகக் கூச்சலிட்டாள். ''ஏண்டி, கடங்காரி, இன்னிக்கு இப்படி இம்சைப்படுத்தறே?'' என்று சீறியபடி அவள் கன்னத்தில் ஒரு கிள்ளுக் கிள்ளினாள். பாமினி அதைப் பொருட்படுத்தாது ஸீட்டை விட்டே எழுந்தாள். ஆனால், அவளை எழுந்திருக்கவொட்டாமல் அம்புஜம் தடுத்தாள்.

பஸ் மீண்டும் கிளம்பி விட்டது. கணேசன் ஜாடையாக ஒரு முறை பாமினி பக்கம் திரும்பியவர் ஒன்றிலும் பட்டுக் கொள்ளாமல் இருந்து விட்டார்.

பாமினியின் முகம் வாடி விட்டது. தன்னைப் பேச விடாமல் இப்படி எல்லோரும் தடுத்து விட்டார்களே என்ற வருத்தம் அவள் முகத்தில் பிரதிபலித்தது.

மவுண்ட் ரோடு வந்ததும், அம்புஜம் பாமினியுடன் முதலில் இறங்கினாள்..... தொடர்ந்து மற்றவர்களும் இறங்கினர். எல்லோருமாகத் தியேட்டரை நோக்கி விரைந்தனர். கூட்டம் மிக அதிகம்தான். எப்படியோ டிக்கெட் வாங்கியாக வேண்டும்.

கணேசன் கௌண்டர் அருகில் சென்று டிக்கெட் வாங்குவதில் முனைந்தார். ஜிப்பா பாக்கெட்டினுள் கைவிட்ட போது, அவர் முகம் அப்படி வெளுப்பானேன்? மூச்சுத் தடுமாறுவானேன்? ஆம், பர்ஸைக் காணோம்! அம்புஜம் அவரையே பார்க்கிறாள்! மூத்த பெண்கள் அப்பாவுக்கு என்ன என்று வியந்தனர்! பாமினியோ அப்பாவின் முகத்தைக் கண்களை அகல விரித்தபடி பார்த்தாள். அவர் அருகில் ஓடினாள் — ஜிப்பா பாக்கெட்டை ஒரு கையால் பிடித்துக் கொண்டு ஓடும் பஸ்ஸைக் காட்டி மீண்டும் 'பே.... பே.... பே...' என்றாள். கணேசனுக்கு விஷயம் புரிந்து விட்டது. ''பாமினி கண்ணு! 'பிக்பாக்கெட்' அடிப்பதைப் பார்த்துத்தானா அம்மா நீ சப்தம் போட்டாய்! உன் வாயைக் கட்டி விட்டாளே, உன் அம்மா! ஏய், அம்புஜம்!'' என்று ருத்ர மூர்த்தியாக மாறினார் கணேசன்.

அப்போது அவர் முன் — பேசும் சக்தி பெற்ற அவள் அம்மாவும், அக்காக்களும், தம்பிகளும் ஊமைகளாக நின்றனர்.

வட்ட மேஜை

கடந்த சில மாதங்களாகக் குழந்தைகள் உணவாகிய அமுல் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. மருந்துக் கடைகளிலும் ரேஷன் கடைகளிலும் கால் கடுக்கத் தேடிவிட்டுக் கடற்கரை ரயில் நிலைய அருகில் உள்ள பர்மா பஜார் உள்ள பக்கம் சென்றால் குவியல் குவியலாக அடுக்கி வைத்துக் கொண்டு 500 கிராம் டின்னுக்கு ரூ. 2.50 கூடுதலாகவும் 1000 கிராம் டின்னுக்கு ரூ. 5 கூடுதலாகவும் விற்கிறார்கள். பொது மார்க்கெட்டில் கிடைக்காத பண்டம் அவர்களுக்கு மட்டும் எப்படிக் கிடைக்கிறது என்பது புரியாத புதிராக உள்ளது. இது உற்பத்தியாளரின் முறைகேடா? விநியோகிப்போரின் முறைகேடா? அல்லது சில்லறை வியாபாரிகளின் முறைகேடா? தெரியவில்லை.

அரசாங்கம் வாக்குரிமை உள்ளவர்களின் பிரச்னைகளில் அக்கறை செலுத்துவது போல் எதிர்கால வாக்காளர்களான குழந்தைகளின் பிரச்னையிலும் அக்கறை செலுத்த வேண்டும்.

சென்னை–1
24–10–69 பொ. சுப்பிரமணியன்

★ தில்லிப் புதுமைகள்

டின்னர்கள் நடந்ததெல்லாம்
டில்லி நகரில்தான் – இன்று
'டிஸ்மிஸ்'கள் அதிகம்அந்த
டில்லி நகரில்தான் –
மன்னர்கள் அகன்றதெல்லாம்
டில்லி நகரில்தான் – இன்று
மந்திரிகள் விலகுவதும்
டில்லி நகரில்தான்.

பண்பாட்டைக் காத்ததெலாம்
டில்லி நகரம்தான் – இன்று
பதவிக்குப் போர்நிகழ்வதெலாம்
டில்லி நகரில்தான்
கண்ணியத்தைக் காத்ததெலாம்
டில்லி நகரம்தான் – இன்று
கையெழுத்து வேட்டையெலாம்
டில்லி நகரில்தான்.

வாய்மையுரை நடந்ததெலாம்
டில்லி நகரில்தான் – இன்று
வதந்திகள் பிறப்பதெல்லாம்
டில்லி நகரில்தான்
தூய்மையினைக் காத்ததுவும்
டில்லி நகரம்தான் – இன்று
தொண்டர்களின் கேரோஎலாம்
டில்லி நகரில்தான்!

பழனி
14–11–69 இளங்கம்பன்

★ இக் குறிப்பிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

பம்பாய் ஸ்டேடியத்தில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டிக்கும் நமது இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் நான்காவது நாளான 8–11–69 சனிக்கிழமை அன்று தேநீர் இடைவேளை கழிந்த பிறகு – அதாவது – வேங்கடராகவன் 'சந்தேகமான' சூழ்நிலையில் 'அவுட்' ஆன பிறகு ஏற்பட்ட கலவரமானது உலகக் கிரிக்கெட் வரலாற்றில் இந்தியாவுக்கு மிகப் பெரியதொரு களங்கத்தை ஏற்படுத்தி யுள்ளது. இந்தியக் கோஷ்டியினர் வெற்றி பெறுவதும், தோல்வி அடைவதும் அவர்களது விளையாட்டுத் தரத்தினைப் பொறுத்தது ஆகும். 'அம்பயர்'களின் தீர்ப்பை ஏற்று அதன்படி நடக்க வேண்டும். கலவரத்தில் ஈடுபடுவது என்பது என்போன்ற பல ஆயிரக் கணக்கான கிரிக்கெட் அபிமானிகளுக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது.

ரெங்கசமுத்திரம்
11–11–69 ஆர். சங்கரகிருஷ்ணன்

எனது நண்பர் வி. ஆர். ராமலிங்கம் பிள்ளை என்பவர் திண்டிவனம் தாலுக்கா ஊலங்கம்பாடி என்கிற கிராமத்தின் கிராமாதிகாரி (கர்ணம்). அவருக்குத் திருவண்ணாமலை தாலுக்கா, சாணிப்பூண்டி கிராமத்தில் ஐந்து ஏக்கரா புஞ்சை நிலம் இருக்கிறது.

மேற்படி புஞ்சை நிலத்தில் சிறந்த முறையில் விவசாயம் செய்வதற்காக அவர் திருவண்ணாமலை கூட்டுறவு நில அடமான பாங்க் மூலம் இந்த வருஷம் மார்ச் மாதம் இரண்டாயிரம் ரூபாய் பத்து வருஷத் தவணையில் கடன் வாங்கினார்.

அந்தப் பணத்தைக் கொண்டு ஐந்து குதிரை ஓட்டமுள்ள மின்சார மோட்டார் ஒன்று வாங்கினார். திருவண்ணாமலை மின்சார இலாகா அதிகாரிகளிடம் அவர் ஏற்கனவே ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால் உடனடியாகத் தமக்கு மின்சாரம் வழங்குமாறு கேட்டுக் கொண்டார். நாளதுவரையில் மின்சார இலாகா அதிகாரிகள் அவருக்கு மின்சாரம் வழங்குதற்கான நடவடிக்கைகள் எதையும் மேற் கொள்ளவில்லை.

இந்த நிலைமையில் சென்ற வாரம் கடன் கொடுத்த கூட்டுறவு நில அடமான பாங்கிலிருந்து முதல் தவணைத் தொகையாக ரூ. 235.44 கடனைத் திருப்பிக் கட்டுமாறு கடிதம் வந்திருக்கிறது.

அவருடைய நிலத்தில் விவசாயம் நடந்து வருமானம் வராமல் அவர் எப்படிக் கடனைத் திருப்பித் தருவார்?

ஆட்சி பீடத்தில் உள்ள அமைச்சர்கள் பசுமைப் புரட்சி முதற் ஸ்தானம் தர வேண்டும் என்று பேசி வருகிறபோது அதிகார வர்க்கத்தினிடம் கொஞ்சம் கூடக் கடமை உணர்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை.

திருவண்ணாமலை,
7–11–69 கே.வி. ராமதுரை


Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



இவள்தான் ஸாரா. பிறக்கும்போதே குறைந்த எடையோடு பிறந்த குழந்தை. வேறொரு குழந்தை உணவு அருந்திக் கொண்டிருந்த இவள் இப்பொழுது அமுல்ஸ்ப்ரே சாப்பிட்டு வருகிறள்

இப்பொழுது அவளைப்பாருங்கள்!

"அவள் எடை கூடி இருக்கிறது. அமுல்ஸ்ப்ரே தொடங்கியதிலிருந்து அவள் வளர்ச்சி அபாரம்" என்கிருர், 15 மாதக் குழந்தையான ஸாராவின் தந்தை திரு. ஸைரஸ் கஸ்தர்.



உங்கள் குழந்தை முதலாண்டிலே வெகு வேகமாக வளருகிறது — இக்காலத்திற்குள், அது பிறந்தபோது இருந்த எடை மும்மடங்காக வேண்டும். எனவேதான் உங்கள் குழந்தையின் உடல் வளர உதவும் புரத சத்தை அதிகமாகக் கொண்டிருக்கிறது அமுல்ஸ்ப்ரே. குழந்தை உணவுகள் தயாரிக்க அமெரிக்காவில் உபயோகிக்கப் படும் உன்னதமான ஸ்ப்ரே-ட்ரையிங் செய் முறையி-லுல் ஆக்கம் பெற்றது அது. பாலிலுள்ள புரதத்தின் தரம் குறையாமல் இருப்பதற்காக, ஸ்ப்ரே—ட்ரையிங் செய்முறையில், குறைந்த வெப்பத்தில் பால் பதன மாக்கப் படுகிறது. அமுல்ஸ்ப்ரே ஒரு சீரான சரி விகித உணவு. அதில் விடமின்கள், கார்போஹைட்ரேட்டுகள், தாதுப் பொருள்கள்—ஏன், உங்கள் குழந்தை வேகமாகவும் ஆரோக்கியமாகவும் வளருவதற்குத் தேவையான அனைத்தையுமே கொண்டது அது.

ஆயிரக்கணக்கான தாய்மார்கள், தங்கள் குழந்தைகள் பிறந்த முதல் வாரத்திலிருந்தே அவற்றிற்குத் தாய்ப் பாலுக்குப் பதிலாகவோ அல்லது உபரி உணவாகவோ அமுல்ஸ்ப்ரே புகட்டி வருகிருர்கள். அதனுல்தான், தயாரிக்கத் தொடங்கிய இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே அமுல்ஸ்ப்ரே இந்தியாவிலேயே உச்ச விற்பனையுள்ள குழந்தை உணவாகிவிட்டது.

அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது!

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

